உயர்கல்வித்துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு
# 2016–2017

மானியக் கோரிக்கை எண்.20

கே.பி. அன்பழகன்
உயர்கல்வித்துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2016

# பொருளடக்கம்


| வ. எண். | தலைப்புகள் | பக்கங்கள் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1–12 |
| 2. | தொழில்நுட்பக் கல்வி | 13–26 |
| 3. | கல்லூரிக் கல்வி | 27–37 |
| 4. | பல்கலைக்கழகங்கள் | 39–102 |
| 5. | தமிழ்நாடு ஆவணக் காப்பகம் | 103–104 |
| 6. | தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம் | 105–109 |
| 7. | தேசிய உயர்கல்வித் திட்டத்திற்கான (  ) மாநில இயக்குநரகம் | 110–112 |
| 8. | அறிவியல் நகரம் | 113–119 |
| 9. | தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம் | 120–125 |
| 10. | தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம் | 126–135 |
| 11. | தமிழ்நாடு மாநில தொழில்நுட்பக் கல்வி மன்றம் | 136–138 |
| 12. | தமிழ்நாடு மாநில உருது கழகம் | 139 |

# கொள்கை விளக்கக் குறிப்பு

## மானியக் கோரிக்கை எண்.20 உயர்கல்வி

## 2016–2017

### 1. முன்னுரை

வறுமையின் தீய சுழற்சியைத் தகர்ப்பதில் கல்விக்கு முதன்மையான பங்குண்டு. கல்வி, குறிப்பாக உயர்கல்வி, நமது மக்களிடம் ஆளுமைத்திறனை வளர்க்கிறது. மக்களின் வாழ்க்கையைத் தக்கவைத்துக் கொள்வதற்கு மட்டுமல்லாமல் மேம்பட்ட தரமான வாழ்க்கைக்கும் உயர்கல்வி அடித்தளமாகிறது. புத்தாயிரமாண்டின் முதன்மையான இலக்குகளுள் ஒன்றாக உயர்கல்வி திகழ்கிறது. உயர்கல்வித் துறையில் தமிழ்நாடு அரசின் தொலைநோக்குப் பார்வையானது, உயர்கல்வி நிறுவனங்களைப் புதுமை மையங்களாகவும் சிறப்பாற்றல் மற்றும் வளர்ச்சி பெற்ற நிறுவனங்களாகவும் உருவாக்குவதாகும். உயர்கல்வியில் தரத்திற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. கிராமப்புற, பின்தங்கிய பகுதிகளிலிருந்தும் மற்றும் நலிவுற்ற குடும்பங்களிலிருந்தும் வரும் மாணவர்களுக்கு உலகத்தரமான உயர்கல்வியை வழங்குவது இவ்வரசின் சீரிய பணியாகும்

> வணிகத் தொழில் கூட்டமைப்பின் தேசிய நிர்வாகக்குழுக் கூட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பேருரை.

1.1 தமிழ்நாடு தொலைநோக்கு திட்டம் 2023 ஆவணத்தின்படி, தமிழ்நாடு – கல்விசார் அறிவின் தலைமையகமாகவும், நாட்டின் சிறந்த உயர்கல்வி ஆராய்ச்சி மையமாகவும் திகழ்கிறது. உயர்தரமான உயர்கல்வியை அனைவரும் பெறுவது இன்றியமையாததாகும். சமூகம் மற்றும் பொருளாதார நிலையில் தமிழகம் இந்தியாவிலேயே முன்னணி மாநிலமாக விளங்குகிறது. உயர்கல்வியில் மாணவர் சேர்க்கை விகிதம் 44.8% எட்டுவதற்கு, பல்வகைத் திறன்களையும், பன்முக ஊக்கத்தினையும் இவ்வரசு அளித்துள்ளது. இதன்மூலம், தமிழகம் பிற மாநிலங்களுக்கு வழிகாட்டியாகவும், முன்மாதிரியாகவும் திகழ்கிறது. மேலும், மனிதவள மேம்பாட்டில் தமிழகம் தனி முத்திரையினையும் பதித்துள்ளது.

1.2 உயர்கல்வித் துறையின் பொறுப்பின்கீழ் பின்வரும் இயக்ககங்கள் / கல்வி நிறுவனங்கள் செயல்படுகின்றன:-

- தொழில்நுட்பக் கல்வி இயக்ககம்
- கல்லூரிக் கல்வி இயக்ககம்
- தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
- தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம்
- தேசிய உயர்கல்வித் திட்டத்திற்கான மாநில இயக்குநரகம்
- அறிவியல் நகரம்
- தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம்

- தமிழ்நாடு மாநில அறிவியல் தொழில்நுட்ப மன்றம்
- தமிழ்நாடு மாநிலத் தொழிற்கல்வி மன்றம்
- தமிழ்நாடு மாநில உருது கழகம்

| | |
|---|---|
| மாநிலப் பல்கலைக்கழகங்கள் (கலை மற்றும் அறிவியல் – 12 மற்றும் தொழில்நுட்பம் – 1) | 13 |
| பொறியியல் கல்லூரிகள் | 583 |
| கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் * | 740 |
| கல்வியியல் கல்லூரிகள் | 724 |
| அண்ணா பல்கலைக்கழக இணைவு பெற்ற மேலாண்மைக் கல்லூரிகள் | 44 |
| அண்ணா பல்கலைக்கழக இணைவு பெற்ற கணினி அறிவியல் கல்லூரிகள் | 3 |
| பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் | 516 |

* உடற்கல்வி, கீழ்த்திசை மற்றும் சமூகப்பணி கல்லூரிகள் உட்பட

1.3 உயர்கல்வி வளர்ச்சியில் தமிழகம் முன்னணி மாநிலமாகத் திகழ வேண்டும் எனும் இலக்கினை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு திட்டங்கள் உயர்கல்வி நிறுவனங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுச் செயலாக்கம் பெற்று வருகின்றன. மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் வழிகாட்டுதலின்கீழ் இயங்கும் உயர்கல்வித் துறையானது, முன்னணித்தரம் வாய்ந்த வளர்ச்சி சார்ந்த சீர்திருத்தங்களைக் **கல்வி, ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, நவீனமயமாக்கல், வேலைவாய்ப்பு,**

**புதியன புகுத்தல்** போன்ற வழிகளில் செம்மைபடுத்தியுள்ளது. உயர்கல்வியின் சிறப்பு அம்சங்களான அனைத்துத் தரப்பினருக்கும் தரமான மற்றும் சமமான கல்வி வழங்குவது இம்மாநிலத்தின் தனிச்சிறப்புகளாக வரையறுக்கப்பட்டுள்ளன. புதிய பாடப் பிரிவுகளை அறிமுகப்படுத்துதல், இயங்கி வரும் துறையினை மேம்படுத்துதல், பல்கலைக்கழகங்களிலும் கல்லூரிகளிலும் மாணவர் சேர்க்கை எண்ணிக்கையினை உயர்த்துதல் போன்ற செயல்பாடுகள் அனைத்தும் உயர்கல்வியில் மாணவர் சேர்க்கையினை அதிகரிப்பதற்கும், இளம் தலைமுறையினருக்கான உயர்கல்வி வாய்ப்புகளை வளர்ப்பதற்கும் பயன்படுகின்றன. ஏறக்குறைய அனைத்து மாவட்டங்களிலும் தேவைக்கேற்பப் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளும் புதிய அரசு கலை அறிவியல் கல்லூரிகளும் தொடங்கப் பட்டுள்ளன.

1.4 உயர்கல்வியின் தரம் பின்வரும் முறைகளில் மேம்படுத்தப்பட்டு வருகிறது:

- மாநிலப் பல்கலைக்கழகங்களில் அயல்மொழி ஆய்வுக்கூடங்களை நிறுவுதல்
- காணொலிக் காட்சி வசதி
- நவீனமயமாக்கப்பட்ட வகுப்பறை வசதி
- விவேகானந்தர் கல்வி மையங்களைப் பல்கலைக்கழகங்களில் நிறுவுதல்.

- மாற்றுத் திறனாளிகளின் கல்விக்கான பல்லூடகக் கருவிகளை உருவாக்கிப் பயன்படுத்தல்.
- அயல்நாட்டுப் பல்கலைக்கழகங்களிலிருந்து நிபுணத்துவம் மிகுந்த பேராசிரியர்களை அழைத்துக் கற்பித்தலை மேம்படுத்தல்.
- தொழில்திறன் மற்றும் கல்விப்புலப் பயில்வுக்கும் பணிக்குமான வாய்ப்புகளை பல்கலைக்கழக மையங்களில் ஏற்படுத்துதல்.
- ஆசிரியர் பணியில் நவீனத் திறன்களை வளர்க்கும் கல்வித்திட்ட வளர்ச்சிக் குழுக்களைப் பல்கலைக்கழகங்களில் நிறுவுதல்.
- மாணவர்களை மையமிட்ட கற்பித்தலில் முறையான மற்றும் தொடர்ச்சியான பயிற்சிகளை ஆசிரியர்களுக்கு வழங்கல்.
- நவீனகால தொழில்நுட்ப வளர்ச்சிகளையும் புதுமைகளையும் ஆசிரியப் பணியில் உருவாக்கி வளர்த்தல்.

**1.5** அரசு மற்றும் அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் பொருளாதார நிலையில் பின்தங்கிய மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகளை அரசு வழங்கியுள்ளது. மடிக்கணினி மூலம் தங்கள் கல்வியை மேலும் வளர்க்க பல்வேறு வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறு வழங்கியதன் மூலம், அவர்கள் கணிப்பொறிவழிக் கல்வி கற்கும் வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பிட்ட அறிவுத்

துறைகளில் சிறப்புத் திறன்களை வளர்ப்பதற்கான கல்வி மையங்களாக கல்லூரிகளைத் தரம் உயர்த்தும் இலக்கை உயர்கல்வித்துறை சாதித்துள்ளது. கல்லூரி உள்தர நிர்ணயக் குழுக்கள், கல்வித் தரத்தைப் பாதுகாக்கவும், வளர்க்கவும், நிலைப்படுத்தவும் உதவுகின்றன. மாநில பல்கலைக்கழகங்கள் சார்ந்த தனித்திறன் வளர் மையங்கள், தேசிய மற்றும் பன்னாட்டுத் தரத்திலான முன்னணி ஆய்வு நிறுவனங்களுடன், பொதுத்துறை மற்றும் தனியார் துறையின் ஒருங்கிணைவுடன் செயல்படுவது என்பது, கல்வித் திறனை மேம்படுத்துவதற்குரிய இன்னொரு வழியாகும்.

**1.6** உயர்கல்வியின் தரத்தை, ஆய்வு மற்றும் வளர்ச்சியில் இருந்து பிரிக்க முடியாது. எனவே, பல்கலைக்கழகங்களில் ஆய்வு மற்றும் வளர்ச்சிப் பிரிவுகள் உருவாக்கப்பட்டு, ஆசிரியர்கள் உலகத்தரத்திற்கு இணையாக தங்கள் கல்வித் தரத்தினை உயர்த்திக்கொள்ளும் பொருட்டு, அயல்நாட்டுப் பயணம் செல்ல ஊக்குவிக்கப் படுகின்றனர். மாநில பல்கலைக்கழகங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள அறிவுசார் சொத்துரிமைப் (IPR -Intellectual Property Rights) பிரிவுகளின் மூலம், வெளிநாட்டுக் கூட்டமைப்புகளுடன் இணைந்து பல்வேறு துறைகளில் ஆய்வுத் திட்டம் மேற்கொள்ளவும், காப்புரிமையைப் பதிவு செய்யவும் இயலும்.

1.7 கல்லூரிகளில், இணைய நூற்பட்டிகளுடன் கூடிய மின்நூலகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவை இணைய மின்நூலக வலைப்பின்னலை அமைப்பதற்கான முதற்படிகளாக விளங்குகின்றன. இந்த இணைய மின்நூலக வலைப்பின்னலானது, மின்னூலக வளங்கள் மற்றும் பல்கலைக்கழகக் களஞ்சியங்களை இணைத்து மாணவர்களுக்கு வழங்கப்பட்ட விலையில்லா மடிக்கணினியை அவர்கள் ஆக்கப்பூர்வமாக பயன்படுத்த பெரிதும் உதவுகிறது. தொகுப்புக் கல்லூரிகளை அமைத்தலும், கல்விச் செயற்கைக்கோள் திட்டங்களைச் செயல்படுத்தலும், இணைய பல்கலைக்கழக வாய்ப்புகளை வளர்த்தலும் உயர்கல்வித் தரத்தை உயர்த்தியுள்ளன. இணையதளங்களின் மூலம் மிகவும் குறிப்பிடத்தக்க நிறுவனங்களின் கல்வியாளர்களும், தொழில் திறனாளர்களும் தங்களுக்குள் கருத்துப் பரிமாற்றம் செய்துகொள்வதற்கான வாய்ப்புகளும் வழங்கப் பட்டுள்ளன.

1.8 தொழில்துறை வாய்ப்புகளுக்கேற்ப திறன் மேம்பாட்டுக் கல்வியை அளிப்பதற்காக, மென்திறன் பயிற்சி மையங்கள் 30 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும் இத்திட்டம், நடப்பாண்டில் 32 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கும் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. இது முதல் தலைமுறைப் பட்டதாரிகளுக்கு அவர்களின் பட்டப்படிப்பு முடிந்தவுடன் வேலைவாய்ப்பை அளிப்பதாக உள்ளது. இன்றைய

நுண்திறன்களையும், ஆய்வுகளையும், வேலை வாய்ப்புகளையும் பெருக்குவதற்கும், தொழில் துறைக்கும் கல்விப் புலத்திற்குமான ஒருங்கிணைவை வளர்ப்பதற்கும் இது பயன்படுகின்றது. பல்கலைக்கழக வணிக ஒருங்கிணைவு மையங்கள் **6** மாநிலப் பல்கலைக்கழகங்களில் தொடங்கப்பட்டுள்ளன. மாநிலப் பல்கலைக் கழகங்களில் உருவாக்கப்பட்டுள்ள தொழில் முனைவோர் வளர்ச்சி மையங்களும் தகவல் தொழில்நுட்ப பயிற்சியகங்களும் மாணவர்களை வேலைவாய்ப்பிற்கு ஆயத்தப்படுத்தும் பணியைச் செய்கின்றன.

**1.9** இந்தியாவிலேயே முதன்முதலாக, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள், வெளிநாட்டில் ஒரு பருவம் பயிலும் திட்டம், உயர்கல்வித் துறையின் ஒரு புதிய சாதனை. இத்திட்டத்தின் மூலம், முதுநிலை மாணவர்களும், ஆசிரியர்களும் இங்கிலாந்தில் (U.K) ஒரு பருவம் பயின்று வந்துள்ளனர். உயர்கல்வியை நவீனப்படுத்துவதற்கான மாநில அரசின் நிதிக்கொடை, தமிழ்நாடு ஆவணக் காப்பகம், அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம் ஆகியவற்றில் முதன்மையான சில திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. உயர்கல்வித் துறையானது பொதுத்துறையுடன் இணைந்து, சான்றிதழ்களின் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்தும் வசதியை ஏற்படுத்தியுள்ளது. அனைத்து உயர்கல்வி நிறுவனங்களும் இணைய தளங்களைப்

பயன்படுத்துவதன்வழி விரைந்து முடிவெடுத்தல், வெளிப்படைத்தன்மை, திறன்மேம்பாடு ஆகிய புதிய மாற்றங்கள் உயர்கல்வியில் நிகழ்ந்துள்ளன. இதனால், பொதுமக்கள் எளிதில் தாள் சுமையின்றி உண்மைச்சான்றினை மூன்றே நாட்களில் மின்னஞ்சல் மூலம் பெற இயலுகிறது.

**1.10** அறிவியல் வளர்ச்சி, மானுடவியல் மற்றும் மாணவர் நலன் ஆகியவற்றிற்காக பாடுபடும் ஒருவருக்கு முன்னாள் குடியரசுத்தலைவர் டாக்டர். ஏ.பி.ஜே.அப்துல்கலாம் அவர்களின் பெயரில் “டாக்டர். ஏ.பி.ஜே.அப்துல்கலாம் விருது” **2015–**ஆம் ஆண்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க நிறுவப்பட்டுள்ளது. இவ்விருது, பணப்பரிசு ரூ.**5** இலட்சம், பாராட்டு சான்றிதழ் மற்றும் **8** கிராம் எடையுள்ள தங்கப்பதக்கமும் கொண்டதாகும்.

**1.11** வரலாற்றில் தடம்பதிக்கும் உயர்கல்வித் துறையின் செயல்பாடுகள், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் தொலைநோக்குத் திட்ட வழிகாட்டுதல்களின் அடிப்படையில் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளன. இதனால், உயர்கல்வித் துறை பெரும் வளர்ச்சி அடைந்துள்ளது. மாண்புமிகு தமிழக முதல்வரின் தன்னிகரற்ற உணர்வூக்கத்தாலும், புத்தெழுச்சியாலும், புதுமைப் போக்காலும் உயர்கல்வித் துறையில் மாபெரும் சாதனைகள் நிகழ்ந்துள்ளன. “வலிமையிலிருந்து மேலும் வலிமையை” உயர்கல்வித்துறையும் நம் மாநிலமும்

அடைந்துள்ளன. இதனை நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் தனிப்பெரும் சாதனையாகக் குறிப்பிடலாம்.

## நிதி ஒதுக்கீடு 2016–17


மானியக் கோரிக்கை எண்.20, உயர்கல்வித் துறை என்ற தலைப்பின் கீழ் மொத்த செலவினத் தொகை ரூ.3679.00 கோடி ஆகும். இதில், ரூ.938.63 கோடி திட்டப் பணிகளுக்கு உண்டானதாகும். ரூ.2740.37 கோடி திட்டத்தில் சேராத செலவினமாகும்.

### நிதி ஒதுக்கீடு 2016–17

| கணக்குத் தலைப்பு | திட்டப் பணி | திட்டம் | திட்டத்தில் சேராதது | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | ரூபாய் இலட்சத்தில் | | |
| 2059 | பொதுப்பணி பராமரித்தலும் செப்பனிடுதலும் | – | 2677.19 | 2677.19 |
| 2202 | பொதுக்கல்வி பல்கலைக்கழகக் கல்வியும் உயர் கல்வியும் | 11219.94 | 230858.54 | 242078.48 |
| 2203 | தொழில்நுட்பக் கல்வி | 66938.85 | 38140.99 | 105079.84 |
| 2204 | விளையாட்டுகளும் இளைஞர் நலப் பணிகளும் | 1174.09 | – | 1174.09 |
| 2205 | கலையும் பண்பாடும் ஆவணக் காப்பகம் | 97.00 | 945.59 | 1042.59 |
| 2235 | சமூகப் பாதுகாப்பும் நலனும் | – | 60.09 | 60.09 |

| | | | | |
|---|---|---|---|---|
| 2251 | தலைமைச் செயலகம் – சமூகப் பணிகள் | – | 591.65 | 591.65 |
| 3425 | ஏனைய அறிவியல் ஆராய்ச்சி | 119.65 | 694.85 | 814.50 |
| 3454 | மக்கள் தொகை கணக்கெடுப்பும், ஆய்வு மற்றும் புள்ளி விவரமும். விவரச் சுவடியும், புள்ளி விவரக் குறிப்பேடுகளும் | – | 68.88 | 68.88 |
| 4202 | கல்வி, விளையாட்டு போட்டி, கலை மற்றும் பண்பாடு குறித்த மூலதனச் செலவு | 14313.54 | 0.03 | 14313.57 |
| 7610 | அரசுப் பணியாளர் முதலியோருக்கு கடன்கள் | – | 0.01 | 0.01 |
| | மொத்தம் | 93863.07 | 274037.82 | 367900.89 |

# அமைப்பு முறை வரைபடம்



## 2. தொழில்நுட்பக் கல்வி

**2.1** தமிழ்நாட்டில், தொழில்நுட்பக் கல்வியில் ஒருங்கிணைந்த முன்னேற்றத்தை கொண்டு வரவேண்டும் என்ற நோக்கத்தோடு, தொழில்நுட்பக் கல்வி இயக்ககம், **1957–**ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம், **14–**ஆம் நாள் தோற்றுவிக்கப்பட்டது.

**2.2** தமிழக அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையின் கீழ் தொழில்நுட்பக் கல்வியில், பொறியியல் பட்டம் மற்றும் பட்டய நிலையில், தரமான கல்வியை ஊக்குவிக்கும் பொருட்டு, ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. மேற்காண் நோக்கத்தினை செயல்படுத்தும் விதமாக, தமிழ்நாட்டில் கீழ்க்கண்ட பொறியியல் கல்லூரிகள் மற்றும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன:–

**பொறியியல் கல்லூரிகள்**

| வ. எண் | கல்வி நிறுவனங்கள் | கல்லூரிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | அரசு பொறியியல் கல்லூரிகள் | 10 |
| 2. | அரசு உதவிபெறும் பொறியியல் கல்லூரிகள் | 3 |
| 3. | அண்ணா பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் | 17 |
| 4. | சுயநிதி பொறியியல் கல்லூரிகள் | 553 |
| மொத்தம் | | 583 |

**பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள்**

| வ. எண் | கல்வி நிறுவனங்கள் | கல்லூரிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் | 41 |
| 2. | அரசு உதவிபெறும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் | 34 |
| 3. | இணைவு பெற்ற பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் | 5 |
| 4. | சுயநிதி உணவக மேலாண்மை பயிலகங்கள் | 15 |
| 5. | சுயநிதி பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் | 416 |
| | மொத்தம் | 511 |

மேற்காண் கல்லூரிகளுடன், **5.8.2016** அன்று காணொலிக் காட்சி மூலமாக, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் கூடுதலாக புதிய **5** பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் துவங்கப் பட்டுள்ளன. இதனால், அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளின் எண்ணிக்கை **46** ஆக உயர்ந்துள்ளது.

**சாதனைகள் மற்றும் முயற்சிகள்:**

## 2.3 இந்திய தகவல் தொழில்நுட்ப நிறுவனம், ஸ்ரீரங்கம், திருச்சிராப்பள்ளி (  )

இந்திய தகவல் தொழில்நுட்ப நிறுவனம் ஒரு தன்னாட்சி கல்வி நிறுவனமாகும். இந்நிறுவனம், பொது மற்றும் தனியார் கூட்டமைப்பு திட்டத்தின் கீழ், மத்திய அரசு,

மாநில அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன், ரூ.128.00 கோடி மதிப்பீட்டில் இலாப நோக்கமற்ற பொது நிறுவனமாக துவங்கப்பட்டுள்ளது. தகவல் தொழில்நுட்பம் தொடர்பான துறைகளில் திறன்மிகு நபர்களை உருவாக்குவது இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கமாகும்.

இந்திய தகவல் தொழில்நுட்ப நிறுவனம், 3 முதுநிலை பட்டப்படிப்புகளுடன் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 12.02.2014 அன்று துவக்கி வைக்கப்பட்டது. மேலும், 2015–16ஆம் ஆண்டு முதல், ஒவ்வொரு பாடப்பிரிவுக்கும் 60 மாணவர்கள் வீதம், 3 இளநிலை பட்டப்படிப்புகள் துவங்கப்பட்டுள்ளன.

## 2.4 2012–13 மற்றும் 2013–14ஆம் ஆண்டுகளில் நிறுவப்பட்ட 4 அரசு பொறியியல் கல்லூரிகள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, 2012–13 மற்றும் 2013–14ஆம் ஆண்டுகளில், போடிநாயக்கனூர் (தேனி மாவட்டம்), செட்டிக்கரை (தருமபுரி மாவட்டம்), செங்கிப்பட்டி (தஞ்சாவூர் மாவட்டம்) மற்றும் ஸ்ரீரங்கம் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்) ஆகிய 4 இடங்களில் அரசு பொறியியல் கல்லூரிகள் துவங்கப்பட்டுள்ளன. இதன்மூலம், கடந்த ஐந்தாண்டு காலத்தில் அரசு பொறியியல் கல்லூரிகளின் எண்ணிக்கை 50 விழுக்காட்டிற்கும் மேலாக அதிகரித்துள்ளது.

இதன் தொடர்ச்சியாக, மேற்கண்ட 4 பொறியியல் கல்லூரிகளுக்கு, **2015–16** ஆம் ஆண்டு வரை, பல்வேறு பிரிவுகளில், ஆசிரியர், தொழில்நுட்பப் பணியாளர்கள், நிர்வாகப் பணியாளர்கள் மற்றும் அடிப்படைப் பணியாளர்கள் என மொத்தம் **602** புதிய பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

மேற்காண் 4 அரசு பொறியியல் கல்லூரிகளுக்கான கட்டடங்கள் கட்டுவதற்கு, **2015–16** ஆம் ஆண்டு வரை, **ரூ.24,460.44** இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு மாணவர்கள் பயன்பாட்டில் உள்ளன.

மேற்கண்ட கல்லூரிகளுக்குத் தேவையான உபகரணங்கள், கணினிகள், அறைகலன்கள், நூலகப் புத்தகங்கள் மற்றும் மின்னிதழ்கள் கொள்முதல் செய்வதற்கு, **2015–16** ஆம் ஆண்டு வரை, **ரூ.2,014.00** இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அவை கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

மேலும், இக்கல்லூரிகளில் உள்ள விடுதிகளுக்கு தேவையான அறைகலன்கள் மற்றும் சமையல் பாத்திரங்கள் கொள்முதல் செய்வதற்கு **2015–16**ஆம் ஆண்டு வரை, **ரூ.345.68** இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 2.5 2013–14ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட 11 புதிய அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, 2013–14 ஆம் ஆண்டு முதல், ஸ்ரீரங்கம் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்), கந்தர்வகோட்டை (புதுக்கோட்டை மாவட்டம்), சங்கராபுரம் (விழுப்புரம் மாவட்டம்), பெருந்துறை (ஈரோடு மாவட்டம்), அரியலூர் (அரியலூர் மாவட்டம்), ஊத்தங்கரை (கிருஷ்ணகிரி மாவட்டம்), ஜோலார்பேட்டை (வேலூர் மாவட்டம்), ஆண்டிப்பட்டி (தேனி மாவட்டம்), உசிலம்பட்டி (மதுரை மாவட்டம்), செக்கானூரணி (மதுரை மாவட்டம்) மற்றும் செய்யாறு (திருவண்ணாமலை மாவட்டம்) ஆகிய இடங்களில் 11 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் துவங்கப்பட்டுள்ளன. இதன்மூலம், கடந்த ஐந்தாண்டு காலத்தில், அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளின் எண்ணிக்கை 30 விழுக்காட்டிற்கும் மேலாக அதிகரித்துள்ளது.

மேற்கண்ட 11 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கும், 2013-14 ஆம் ஆண்டு முதல் 2015–16 ஆம் ஆண்டு வரை பல்வேறு பிரிவுகளில், ஆசிரியர், தொழில்நுட்பப் பணியாளர்கள், நிர்வாகப் பணியாளர்கள் மற்றும் அடிப்படைப் பணியாளர்கள் என 1153 புதிய பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

மேற்கண்ட **11** கல்லூரிகளுக்கும் தேவையான உபகரணங்கள், கணினிகள், அறைகலன்கள், நூலக புத்தகங்கள் மற்றும் மின்னிதழ்கள் கொள்முதல் செய்வதற்கு **2015–16**ஆம் ஆண்டு வரை, ரூ.**4,950.00** இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அவை கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

புதியதாக துவங்கப்பட்ட **11** அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கான கட்டடங்கள் கட்டுவதற்கு, ரூ.**17,557.77** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு, மாணவர்களின் பயன்பாட்டில் உள்ளன. மேலும், மாணவ மாணவியர்களின் பயன்பாட்டிற்காக, மேற்கண்ட **11** பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் உள்ள விடுதிகளுக்குத் தேவையான அறைகலன்கள் மற்றும் சமையல் பாத்திரங்கள் கொள்முதல் செய்வதற்கு, ரூ.**258.02** இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 2.6 2016–17ஆம் ஆண்டில் 5 புதிய அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளை நிறுவுதல்

**2015–16** ஆம் ஆண்டின் வரவு செலவிற்கான (Budget) கூட்டத்தொடரின் போது, தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதி **110–**இன் கீழ், பின்தங்கிய மாவட்டங்களிலுள்ள கிராமப்புற மாணவர்கள் தொழில்நுட்ப கல்விபெற வழிவகை செய்யும் பொருட்டு **5** புதிய அரசு

பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் துவங்கப்படும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பு செய்தார்கள். அந்த அறிவிப்பின்படி, 2016–17ஆம் ஆண்டு முதல் டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் (சென்னை மாவட்டம்), கடத்தூர் (தருமபுரி மாவட்டம்), வலங்கைமான் (திருவாரூர் மாவட்டம்), ரெகுநாதபுரம் (தஞ்சாவூர் மாவட்டம்) மற்றும் கெலமங்கலம் (கிருஷ்ணகிரி மாவட்டம்) ஆகிய இடங்களில் 5 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் துவங்கப்பட்டுள்ளன.

மேற்கண்ட 5 புதிய அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளை 2016–17ஆம் ஆண்டு துவங்குவதற்கு அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமத்தின் (AICTE) ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. 2016–17 இல் முதலாம் ஆண்டிற்கு பல்வேறு பிரிவுகளில், ஆசிரியர், தொழில்நுட்பப் பணியாளர்கள், நிர்வாகப் பணியாளர்கள் மற்றும் அடிப்படைப் பணியாளர்கள் என 305 புதிய பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

புதியதாக துவங்கப்பட்ட 5 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கும் பல்வேறு கட்டடங்கள் கட்டுவதற்கு, ரூ.12,830.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, கட்டடப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும், மேற்கண்ட 5 புதிய பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கும், 2016–17 இல் முதலாம் ஆண்டிற்கு

தேவையான உபகரணங்கள், கணினிகள், அறைகலன்கள், நூலக புத்தகங்கள் மற்றும் மின்னிதழ்கள் கொள்முதல் செய்வதற்கு, ரூ.250.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2.7 2015–16 ஆம் ஆண்டில், நிறுவப்பட்ட சுயநிதி பொறியியல் மற்றும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள்

2015–16 ஆம் ஆண்டில், 1 சுயநிதி பொறியியல் கல்லூரி, 9 சுயநிதி கட்டடக்கலை கல்லூரிகள், 1 மத்திய அரசின் கீழ் செயல்படும் இந்திய கைத்தறி தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் 2 சுயநிதி பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் தமிழகத்தில் துவங்கப்பட்டுள்ளன.

## 2.8 சுயநிதி பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் பொறியியல் கல்லூரிகளில், சுழற்சி முறை மற்றும் பகுதி நேர பட்டய பாடத்திட்டத்தினை துவங்குதல்

2014–15 ஆம் ஆண்டிலிருந்து சுயநிதி பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் பொறியியல் கல்லூரிகளில் இரண்டாவது சுழற்சி முறை மற்றும் பகுதி நேர சுயநிதி (Self supporting) பட்டய / முதுநிலை பட்டய பாடத்திட்டத்தினை துவங்குவதற்கு அரசால் அனுமதி அளிக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## 2.9 பொருளாதாரத்தில் நலிந்த ஏழை மாணவ, மாணவியர்களுக்கு நிதியுதவி அளித்தல் (முதலமைச்சரின் பொது நிவாரண நிதி)

2012–13ஆம் ஆண்டு முதல் பொருளாதாரத்தில் நலிந்த ஏழை மாணவ மாணவியர்கள், இளநிலை பொறியியல் மற்றும் இளநிலை தொழில்நுட்பப் படிப்புகளை தொடர்வதற்கு, ஒரு மாணவருக்கு ரூ.25,000/– வீதம், 71 மாணவ, மாணவியர்களுக்கு மொத்தம் ரூ.17,75,000/– முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது.

## 2.10 விலையில்லா மடிக்கணினிகள் வழங்கும் திட்டம்

அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவ மாணவியர்கள் பயன்பெறும் வகையில், அவர்களின் கணினி அறிவை மேம்படுத்துவதற்காக, விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டம், தமிழக அரசால் 2011–12 ஆம் ஆண்டு முதல் உரிய துறைகள் மூலம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தொழில்நுட்பக் கல்வித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 79 அரசு மற்றும் அரசு உதவி பெறும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு, 2014–15 மற்றும் 2015–16 ஆம் ஆண்டுகளில் 26,765 விலையில்லா மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. இத்துறையின் மூலம், 2011–12 முதல்

2015–16 ஆம் ஆண்டு வரை 1,73,171 விலையில்லா மடிக்கணினிகள் மாண்புமிகு முதலமைச்சரின் முன்னோடித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளன.

**2.11 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு கல்விக் கட்டண விலக்கு ( ) மற்றும் பேருந்து கட்டணச் சலுகை**

2011–12 முதல் 2015–16 ஆம் ஆண்டு வரை, அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் 1,95,207 மாணவ மாணவியர்களுக்கு, ரூ.2,500/– கல்விக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. மேலும், அவர்களுக்கு கட்டணமில்லா பேருந்து சலுகையும் அளிக்கப்பட்டுள்ளது.

**2.12 ஒற்றைச் சாளர கலந்தாய்வு முறையில் பொறியியல் மாணவர் சேர்க்கை**

பன்னிரெண்டாம் வகுப்பு வாரியத் தேர்வில், மாணவ மாணவியர்கள் பெறும் மதிப்பெண்களின் அடிப்படையில், பொறியியல் கல்லூரிகளில் இளநிலை பொறியியல் பட்ட வகுப்புகளுக்கு, மாணவ மாணவியர்கள் சேர்க்கை நடைபெறுகிறது. அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பொறியியல் கல்லூரிகளில் 100 சதவிகித சேர்க்கை இடங்களும், அரசு நிதி உதவி பெறும் கல்லூரிகளில் உள்ள சுயநிதி பாடப்பிரிவுகளில் 70 சதவிகித சேர்க்கை இடங்களும், சிறுபான்மையினர் அல்லாத சுயநிதி

பொறியியல் கல்லூரிகளில் **65** சதவிகித சேர்க்கை இடங்களும் மற்றும் சிறுபான்மையினர் பொறியியல் கல்லூரிகளில் **50** சதவிகித சேர்க்கை இடங்களும், தமிழ்நாடு பொறியியல் சேர்க்கை மூலம் சென்னை, அண்ணா பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் ஒற்றைச் சாளர கலந்தாய்வு முறையில் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

## 2.13 தொழில்நுட்பக் கல்வி தர மேம்பாட்டுத் திட்டம் நிலை–II ( )

தொழில்நுட்பக் கல்வி தர மேம்பாட்டுத் திட்டம்-II (TEQIP-II), மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டுத் துறை மற்றும் மாநில அரசு ஆகியவைகளால் இணைந்து செயல்படுத்தப்படும் திட்டமாகும். இத்திட்டத்திற்கான தற்போதைய மொத்த மதிப்பீடு, ரூ.**142.12** கோடி ஆகும். இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு, மத்திய மாநில அரசுகளின் பங்கீட்டுத் தொகை **2014-15** ஆம் ஆண்டு வரை **75:25** என்ற விகிதத்திலும், **2015–16** ஆம் ஆண்டிலிருந்து **50:50** என்ற விகிதத்திலும் வழங்கப்பட்டு வருகிறது.

இந்த தொழில்நுட்பக் கல்வி தர மேம்பாட்டு திட்டம்-II (TEQIP-II)இல், தமிழ்நாட்டில் **4** அரசு பொறியியல் கல்லூரிகள், **3** அரசு நிதி உதவி பெறும் பொறியியல் கல்லூரிகள், திருச்சிராப்பள்ளியில் உள்ள அண்ணா பல்கலைக்கழகத்தின் உறுப்பு கல்லூரி மற்றும் கணினிப்

பொறியியல் துறை – மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி ஆகியவை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. மாற்று எரிசக்தி மற்றும் சுற்றுச்சூழல் ஆய்வுகள் மேற்கொள்வதற்காக, கோவை அரசினர் பொறியியல் கல்லூரியில், இரு சிறப்பாய்வு மையங்கள் இத்திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் கீழ், பங்கு பெற்றுள்ள **22** மாநிலங்களில், தமிழகம் சிறப்பாக செயல்படும் மாநிலமாக திகழ்கிறது. எனவே, தமிழகத்தில் இத்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள கல்வி நிறுவனங்களின் சிறப்பான செயல்பாடுகளை பாராட்டி, மத்திய அரசு தன் பங்காக ரூ.**20.00** கோடியை கூடுதலாக அளித்துள்ளது. இதுவரையில், ரூ.**120.45** கோடி இத்திட்டத்தின் கீழ் செயல்பட்டு வரும் கல்லூரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

## 2.14 முதல் தலைமுறை பட்டதாரி கல்விக் கட்டணச் சலுகை ( )

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து பொறியியல் கல்லூரிகளிலும், ஒற்றைச் சாளர கலந்தாய்வு மூலம், முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு நேரடி சேர்க்கை பெற்ற மாணவ மாணவியர்களில், முதல் தலைமுறை பட்டதாரி மாணவ மாணவியர்களுக்கு, கல்விக் கட்டணச்சலுகை (Tuition Fee concession) வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் **2011–12** முதல்

2015–16 ஆம் ஆண்டு வரை 5 ஆண்டுகளில் முறையே ரூ.299.28 கோடி, ரூ.478.06 கோடி, ரூ.547.87 கோடி, ரூ. 541.11 கோடி மற்றும் ரூ.514.53 கோடி கல்விக்கட்டணச் சலுகை அளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மேற்கண்ட ஆண்டுகளில் முறையே 157176, 249563, 287021, 283379 மற்றும் 269522 மாணவ, மாணவியர்கள் பயனடைந்துள்ளனர்.

2011–12 முதல் 2015–16 ஆம் ஆண்டு வரை கடந்த 5 ஆண்டுகளில், முதல் தலைமுறை பட்டதாரி மாணவ மாணவியர் கல்விக் கட்டண சலுகைக்காக மொத்தம், ரூ.2,380.85 கோடி செலவிடப்பட்டுள்ளது.

## 2.15 இலங்கை தமிழ் அகதி மாணவர்களுக்கு சலுகைகள் நீட்டித்தல்

2011–12ஆம் ஆண்டு முதல், தமிழ்நாட்டிலுள்ள இலங்கை தமிழ் அகதி மாணவ, மாணவியர்கள், பி.இ. / பி.டெக். முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு நேரடி சேர்க்கை மற்றும் எம்.பி.ஏ. / எம்.சி.ஏ. / எம்.ஈ. / எம்.டெக். போன்ற முதுநிலை கல்வி பயில ஏதுவாக, ஒற்றைச் சாளர கலந்தாய்வில் கலந்து கொண்டு சேர்க்கை பெற அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில், ஒற்றைச் சாளர கலந்தாய்வின் மூலம், பொறியியல் கல்லூரி பயிலும் முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்களுக்கு வழங்கப்படும் கல்விக் கட்டணச் சலுகை, இலங்கை தமிழ் அகதி மாணவ,

மாணவியர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால், **2015–16** ஆம் ஆண்டில், **41** மாணவ மாணவியர்கள் பயனடைந்துள்ளனர்.


## 2.16 அரசு பொறியியல் மற்றும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் ஆசிரியர் நியமனம்

**2013** ஆம் ஆண்டில், ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம், அரசு பொறியியல் கல்லூரிகளில், **151** உதவிப் பேராசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும், அரசு பொறியியல் கல்லூரிகளில் **192** உதவிப் பேராசிரியர் பணியிடங்களை நிரப்புவதற்கு, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**2013** ஆம் ஆண்டில், அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில், ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம், **136** விரிவுரையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும், **1120** விரிவுரையாளர் பணியிடங்களை நிரப்புவதற்கு, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## தொழில்நுட்பக் கல்வி

### 2015–16ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் உள்ள பொறியியல் கல்லூரிகளின் எண்ணிக்கை




# தொழில்நுட்பக் கல்வி

## 2015–16 ஆம் ஆண்டில் பொறியியல் கல்லூரிகளில் முதலாம் ஆண்டு பி.ஈ. / பி.டெக். / பி.ஆர்க். மாணவர்கள் சேர்க்கை விவரம்

| கல்லூரிகளின் வகைகள் | கல்லூரிகளின் எண்ணிக்கை | ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் | பொது | | பிற்பட்ட வகுப்பினர் (மற்றவர்) | | பிற்பட்ட வகுப்பினர் (முஸ்லிம்) | | மிகவும் பிற்பட்ட வகுப்பினர் | | ஆதிதிராவிடர் | | ஆதிதிராவிடர் (அருந்ததியர்) | | பழங்குடியினர் | | மொத்தம் | | மொத்த சேர்க்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | |
| அரசு பொறியியல் கல்லூரிகள் | 10 | 3760 | 54 | 38 | 842 | 729 | 92 | 49 | 515 | 363 | 260 | 196 | 52 | 40 | 18 | 8 | 1833 | 1423 | 3256 |
| அரசு உதவி பெறும் பொறியியல் கல்லூரிகள் | 3 | 2880 | 199 | 126 | 948 | 611 | 60 | 31 | 305 | 214 | 155 | 136 | 31 | 24 | 14 | 4 | 1712 | 1146 | 2858 |
| சுயநிதி பொறியியல் கல்லூரிகள் | 553 | 271261 | 13380 | 4508 | 43745 | 24408 | 5162 | 1556 | 22553 | 9635 | 17411 | 10219 | 2056 | 1291 | 630 | 314 | 104937 | 51931 | 156868 |
| அண்ணா பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் | 17 | 8560 | 171 | 177 | 1612 | 1449 | 188 | 112 | 1062 | 788 | 533 | 470 | 121 | 72 | 38 | 20 | 3725 | 3088 | 6813 |
| மொத்தம் | 583 | 286461 | 13804 | 4849 | 47147 | 27197 | 5502 | 1748 | 24435 | 11000 | 18359 | 11021 | 2260 | 1427 | 700 | 346 | 112207 | 57588 | 169795 |


## தொழில்நுட்பக் கல்வி

### 2015–16ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் உள்ள பொறியியல் கல்லூரிகளில் மாணவகள் சேர்க்கை



தொழில்நுட்பக் கல்வி

**2015–16ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் உள்ள பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளின் எண்ணிக்கை**



# தொழில்நுட்பக் கல்வி


## 2015 –16 ஆம் ஆண்டில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் முதலாம் ஆண்டு பட்டய வகுப்பு மாணவர்கள் சேர்க்கை விவரம்

| கல்லூரிகளின் வகைகள் | கல்லூரிகளின் எண்ணிக்கை | 2015–16 –ல் ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் | பொது | | பிற்பட்ட வகுப்பினர் (மற்றவர்) | | பிற்பட்ட வகுப்பினர் (முஸ்லிம்) | | மிகவும் பிற்பட்ட / சீ.ம. வகுப்பினர் | | ஆதிதிராவிடர் | | ஆதிதிராவிடர் (அருந்ததியர்) | | பழங்குடியினர் | | மொத்தம் | | மொத்த சேர்க்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | |
| அரசு ப.தொ. கல்லூரிகள் – (முறையான) | 41 | 11735 | 81 | 42 | 3097 | 786 | 342 | 62 | 2793 | 557 | 1598 | 483 | 251 | 67 | 66 | 16 | 8228 | 2013 | 10241 |
| அரசு ப.தொ. கல்லூரிகள் – சுழற்சி (14 கல்லூரிகள்) | * | 3420 | 63 | 5 | 1049 | 50 | 127 | 3 | 774 | 53 | 474 | 53 | 79 | 2 | 16 | 3 | 2582 | 169 | 2751 |
| அரசு உதவி பெறும் ப.தொ. கல்லூரிகள் (முறையான) | 34 | 15049 | 336 | 40 | 4545 | 565 | 610 | 41 | 2568 | 350 | 1228 | 226 | 215 | 39 | 58 | 2 | 9560 | 1263 | 10823 |
| அரசு உதவி பெறும் ப.தொ. கல்லூரிகள் – சுழற்சி (3 கல்லூரிகள்) | * | 360 | 17 | 1 | 180 | 3 | 25 | 0 | 86 | 0 | 37 | 1 | 1 | 0 | 0 | 0 | 346 | 5 | 351 |
| பொறியியல் கல்லூரிகளில் சுழற்சி முறையில் பட்டயநிலை வகுப்புகள் (5 கல்லூரிகள்) | * | 720 | 250 | 21 | 87 | 4 | 5 | 0 | 34 | 1 | 103 | 12 | 18 | 0 | 3 | 1 | 500 | 39 | 539 |
| இணைவுப் பயிலகங்கள் | 5 | 349 | 23 | 1 | 129 | 3 | 12 | 0 | 78 | 2 | 70 | 1 | 5 | 0 | 1 | 0 | 318 | 7 | 325 |
| உணவக மேலாண்மை மற்றும் சமையல் தொழில்நுட்ப பயிலகங்கள் | 15 | 1050 | 10 | 1 | 38 | 3 | 0 | 0 | 17 | 0 | 9 | 0 | 0 | 0 | 0 | 0 | 74 | 4 | 78 |
| சுயநிதி ப.தொ. கல்லூரிகள் – (முறையான) | 416 | 175814 | 8061 | 615 | 24556 | 1607 | 3737 | 108 | 19385 | 1073 | 20715 | 2755 | 1433 | 276 | 645 | 116 | 78532 | 6550 | 85082 |
| சுயநிதி ப.தொ. கல்லூரிகள் – சுழற்சி (12 கல்லூரிகள்) | * | 1440 | 16 | 0 | 271 | 0 | 33 | 0 | 323 | 0 | 227 | 0 | 5 | 0 | 8 | 0 | 883 | 0 | 883 |
| மொத்தம் | 511 | 209937 | 8857 | 726 | 33952 | 3021 | 4891 | 214 | 26058 | 2036 | 24461 | 3531 | 2007 | 384 | 797 | 138 | 101023 | 10050 | 111073 |

(*) பட்டயநிலை வகுப்புகள், சுழற்சி முறையில் 29 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் (14 அரசு, 3 அரசு உதவி பெறும் மற்றும் 12 சுயநிதி கல்லூரிகள்) மற்றும் 5 பொறியியல் கல்லூரிகளிலும் நடத்தப்படுகின்றன.

## தொழில்நுட்பக் கல்வி

### 2015–16ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் உள்ள பலவகை தொழில்நுட்ப கல்லூரிகளில் மாணவர்களின் சேர்க்கை எண்ணிக்கை



## 3. கல்லூரிக் கல்வி

**3.1** கல்லூரிக் கல்வித் துறையை தனியாக நிர்வகிக்கும் நோக்கத்தில், **1965–**ஆம் ஆண்டில் பொதுக் கல்வி இயக்ககத்தினை இரண்டாகப் பிரித்து, பள்ளிக் கல்வி இயக்ககம் மற்றும் கல்லூரிக் கல்வி இயக்ககம் தோற்றுவிக்கப்பட்டன. தமிழ்நாட்டை உயர்கல்வியில் முதன்மை மாநிலமாக உருவாக்குவதற்கு, தமிழக அரசு பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது.

கல்லூரிக் கல்வி இயக்ககத்தின் கீழ் தற்போது இயங்கி வரும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள்:

| **வ. எண்.** | **கல்லூரிகள்** | **மொத்தம்** |
|---|---|---|
| 1 | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் | 80 |
| 2 | அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் | 139 |
| 3 | சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் | 467 |
| 4 | அரசு உதவிபெறும் உடற்கல்விக் கல்லூரிகள் | 3 |
| 5 | சுயநிதி உடற்கல்விக் கல்லூரிகள் | 8 |
| 6 | அரசு உதவிபெறும் கீழ்த்திசை கல்லூரிகள் | 4 |

| | | |
|---|---|---|
| 7 | அரசு உதவிபெறும் சமூகப்பணி பள்ளிகள் | 2 |
| 8 | அரசு கல்வியியல் கல்லூரிகள் | 7 |
| 9 | அரசு உதவிபெறும் கல்வியியல் கல்லூரிகள் | 14 |
| 10 | சுயநிதி கல்வியியல் கல்லூரிகள் | 703 |
| 11 | பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் | 37 |
| | மொத்தம் | 1464 |

## 3.2 18 புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் நிறுவுதல்

2013–14, 2014–15, 2015–16 மற்றும் 2016–17 ஆம் கல்வியாண்டுகளில் புதியதாக துவங்கப்பட்ட 18 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள்:

i. ஒசூர் (கிருஷ்ணகிரி மாவட்டம்)
ii. குமாரப்பாளையம் (நாமக்கல் மாவட்டம்)
iii. காங்கேயம் (திருப்பூர் மாவட்டம்)
iv. உத்திரமேரூர் (காஞ்சிபுரம் மாவட்டம்)
v. பேராவூரணி (தஞ்சாவூர் மாவட்டம்)
vi. சிவகாசி (விருதுநகர் மாவட்டம்)
vii. காரிமங்கலம் (தருமபுரி மாவட்டம்)
viii. கோவில்பட்டி (தூத்துக்குடி மாவட்டம்)
ix. கடலாடி (இராமநாதபுரம் மாவட்டம்)
x. முதுகுளத்தூர் (இராமநாதபுரம் மாவட்டம்)

xi. திருவாடானை (இராமநாதபுரம் மாவட்டம்)
xii. கறம்பக்குடி (புதுக்கோட்டை மாவட்டம்)
xiii. மணல்மேடு (நாகப்பட்டினம் மாவட்டம்)
xiv. வேப்பந்தட்டை (பெரம்பலூர் மாவட்டம்)
xv. டாக்டர். இராதாகிருஷ்ணன் நகர் (சென்னை மாவட்டம்)
xvi. வீரபாண்டி (தேனி மாவட்டம்)
xvii. சத்தியமங்கலம் (ஈரோடு மாவட்டம்)
xviii. நாகர்கோவில் (கன்னியாகுமரி மாவட்டம்)

## 3.3 அரசு கல்லூரிகளில் புதிய பாடப் பிரிவுகள் தொடங்குதல்

அரசு கல்லூரிகளில் மொத்த மாணவர் சேர்க்கை விகிதம் கணிசமாக உயர்வதை கருத்தில் கொண்டு, **2011–12** ஆம் கல்வியாண்டிலிருந்து **2015–16** வரை **959** பாடப்பிரிவுகளைத் தொடங்கி அதற்கென **1924** உதவிப் பேராசிரியர் பணியிடங்கள் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளன.

| வ. எண். | கல்வி ஆண்டு | பாடப் பிரிவுகள் எண்ணிக்கை | மொத்த கல்லூரிகள் | ஒப்பளிப்பு செய்யப்பட்ட பணியிடங்கள் |
|---|---|---|---|---|
| 1 | 2011–12 | 101 | 34 | 145 |
| 2 | 2012–13 | 298 | 51 | 833 |
| 3 | 2013–14 | 397 | 51 | 822 |
| 4 | 2015–16 | 163 | 34 | 124 |

## 3.4 அரசு கல்லூரிகளில் உதவிப் பேராசிரியர்கள் நியமனம்

2015 ஆம் ஆண்டில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 1010 உதவிப் பேராசிரியர்கள் அரசால் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 1858 மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் 25 உதவிப் பேராசிரியர் பணியிடங்கள் என மொத்தம் 1883 உதவிப் பேராசிரியர்கள் பணியிடங்களை நேரடி நியமனமாக ஆசிரியர் தேர்வு வாரியம் மூலமாக நிரப்புவதற்கு அரசால் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

## 3.5 அரசு கல்லூரிகளில் கௌரவ விரிவுரையாளர்கள்

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் சுழற்சி முறையில் வகுப்புகள் நடத்தும் முறை ஒவ்வொரு வருடமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2015–16 ஆம் கல்வியாண்டில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முறையான உதவிப் பேராசிரியர் பணியிடங்களை நிரப்பும் வரையில், சுழற்சி–I முறையில் 1683 கௌரவ விரிவுரையாளர்கள் நியமனத்திற்கு அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டது. மேலும் சுழற்சி– முறையில் 1661 கௌரவ விரிவுரையாளர்கள் நியமனம் செய்யப்படுவதற்கு அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டது. தமிழக அரசு பிப்ரவரி, 2016 முதல் கௌரவ விரிவுரையாளர்களுக்கான சம்பளத்தை ரூ.10,000/– லிருந்து ரூ.15,000/– ஆக உயர்த்தி ஆணையிட்டுள்ளது.

## 3.6 கட்டணமில்லாக் கல்வி

**2015–16**ஆம் கல்வியாண்டில் அரசு மற்றும் அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இளநிலையில் பயிலும் **4,43,748** மாணவர்களும் அரசு கல்லூரிகளில் முதுநிலையில் பயிலும் **28,665** மாணவர்களும் என மொத்தம் **4,72,413** மாணவர்கள் கட்டணமில்லாக் கல்வி முறை திட்டம் மூலம் பயன் அடைந்துள்ளனர்.

## 3.7 கல்லூரி மாணவர்களுக்கான கட்டணமில்லாப் பேருந்து அனுமதி அட்டை

**2011–12** ஆம் ஆண்டு முதல் **2015–16** ஆம் ஆண்டு வரை அரசுக் கல்லூரிகளில் படிக்கும் **6,63,286** மாணவர்களுக்குக் கட்டணமில்லா பேருந்து அனுமதி அட்டை அரசால் வழங்கப்பட்டுள்ளது.

## 3.8 குடிமைப் பணித் தேர்வுகளுக்கு கட்டணமில்லாப் பயிற்சி

அகில இந்தியக் குடிமைப் பணித் தேர்வுகளை எழுதும் மாணவிகளை ஊக்குவிக்கும் பொருட்டு, **2001–02** ஆம் ஆண்டு முதல் சென்னை மாவட்டம், இராணிமேரி கல்லூரி மற்றும் மதுரை மாவட்டம், அருள்மிகு மீனாட்சி அரசு மகளிர் கல்லூரி ஆகியவற்றில் கட்டணமில்லாப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இத்திட்டத்திற்கென ஒவ்வொரு ஆண்டும் ரூ.**10** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**2016–17**ஆம் கல்வியாண்டிலும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## 3.9 வேலை வாய்ப்பு முகாம்

அரசு / அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மாணவர் நலனை முன்னிறுத்தி செயல்படும் வேலைப் பணி அமர்த்துதல் பிரிவின் துணையுடன் மாணவர்கள் வேலை வாய்ப்பு முகாம் மூலம் பல்வேறு நிறுவனங்களில் வேலை வாய்ப்பினைப் பெற்றுள்ளனர். **2015–16** ஆம் கல்வியாண்டில் **4,758** மாணவர்கள் வேலை வாய்ப்பினைப் பெற்று பயனடைந்துள்ளனர்.

## 3.10 தமிழ் வழிப் பயிலும் மாணவ / மாணவியர்க்கு படிப்புதவித் தொகை

அதிக அளவில் மாணவர்கள் தமிழ் வழி மூலம் பயில்வதை ஊக்கப்படுத்தும் நோக்கில் **1971** ஆம் ஆண்டு படிப்புதவித் தொகை வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. தற்போது ஒவ்வொரு மாணவருக்கும் ரூ.**400/–** படிப்புதவித் தொகையாக வழங்கப்படுகிறது. **2015–16**ஆம் கல்வியாண்டில் ரூ.**139.56** இலட்சம் வழங்கப்பட்டு, **34,890** மாணவர்கள் பயன்பெற்றுள்ளனர்.

## 3.11 மெதுவாகக் கற்கும் மாணவர்களுக்கு சிறப்புப் பயிற்சி வகுப்புகள்

அரசு கல்லூரிகளில் பயிலும் தாழ்த்தப்பட்ட / பழங்குடியினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சார்ந்த மாணவர்களில் குறிப்பாக கிராமப்புற பகுதிகளிலிருந்து வரும் மாணவர்கள் ஆங்கிலம், கணிதம் மற்றும் அறிவியல் ஆகிய பாடங்களைப் புரிந்து கொள்வதில் மிகவும் சிரமப்படுகின்றனர். இப்பாடங்களைப் புரிந்து கொள்ளவும், நன்கு படிக்கும் மாணவர்களுடன் போட்டியிடவும், சிறப்புப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இதனால் தேர்வுகளில் சிறப்பான மதிப்பெண்கள் பெறுவதற்கு வழி ஏற்படுகிறது. **2015–16** ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் மூலம் **10598** மாணவ / மாணவிகள் பயன்பெற்றுள்ளனர்.

## 3.12 ஆராய்ச்சி படிப்பு பயிலும் மாணவர்களுக்கான உதவித் தொகை

இத்திட்டத்தின் கீழ், அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரிகளில் பல்வேறு பாடப்பிரிவுகளில் முழுநேர ஆராய்ச்சிப் படிப்பினை மேற்கொள்ளும் ஒவ்வொரு மாணவருக்கும் ரூ.**36,000/–** ஒவ்வொரு ஆண்டும் படிப்புதவித் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது. **2015–16** ஆம் ஆண்டில் ரூ.**49.64** இலட்சம் வழங்கப்பட்டு **138** மாணவர்கள் பயன்பெற்றுள்ளனர்.

## 3.13 உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 02.05.2012 அன்று சட்டப்பேரவையில் **விதி 110ன்** கீழ் அறிவித்தபடி அன்றைய தேதியில் தமிழகத்தில் செயல்பட்டு வந்த 62 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 7 கல்வியியல் கல்லூரிகள் மற்றும் 24 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளையும் சேர்த்து 93 கல்லூரிகளின் உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு ரூ.100 கோடி அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்தொகை மூலம் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் விவரம் பின்வருமாறு.

| பணி விவரம் | ஒப்பளிக்கப்பட்ட தொகை ரூ. |
|---|---|
| டான்சி நிறுவனம் மூலம் தளவாடங்கள் வழங்குதல் (69 அரசு கல்லூரிகள்) | **19,99,98,364** |
| டான்சி நிறுவனம் மூலம் தளவாடங்கள் வழங்குதல் (69 அரசு கல்லூரிகள் மற்றும் 24 பல்கலைக் கழக உறுப்பு கல்லூரிகள்) | **24,49,76,745** |
| பொதுப்பணித் துறை மூலம் கல்லூரிகளில் செப்பனிடும் பணிகள் மேற்கொள்ளுதல் | **26,80,45,000** |
| மொத்தம் | **71,30,20,109** |

## 3.14 சுயநிதி கல்லூரிகளில் உயர்கல்வி பயிலும் ஆதி திராவிடர் / பழங்குடியினர் / மதம் மாறிய கிருத்துவர் மாணவர்களுக்குப் படிப்புதவித் தொகை வழங்கும் திட்டம்

சுயநிதி கலை மற்றும் அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் படிக்கும் ஆதிதிராவிட/ பழங்குடியினர் /

மதம் மாறிய கிருத்துவ மாணவர்களுக்கான கல்விக் கட்டண உதவித் தொகை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. சுயநிதி கலை மற்றும் அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் படிக்கும் ஆதிதிராவிட/ பழங்குடியினர்/ மதம் மாறிய கிருத்துவ மாணவர்கள் சார்பாக அரசால் கல்விக் கட்டணம் நேரடியாக சார்ந்த கல்லூரிகளுக்கு வழங்கப்படுகிறது. **2015–16**ஆம் ஆண்டில் **ரூ.116,02,04,650/–** அரசால் ஒப்பளிக்கப்பட்டு **92,766** மாணவர்கள் பயன் பெற்றுள்ளனர்.

## 3.15 விளையாட்டு

அரசு / அரசு உதவி பெறும் / சுயநிதிக் கல்லூரிகளில் மாணவர்கள் வாள்சண்டை, கபடி, வாலிபால், தடை தாண்டுதல், ஓட்டப்பந்தயம், சதுரங்கம், ஹாக்கி, எடை தூக்குதல், பளு தூக்குதல், நீச்சல் மற்றும் கைப்பந்து ஆகிய விளையாட்டுகளில் அகில இந்திய பல்கலைக்கழகங்கள், மாநில, தேசிய மற்றும் சர்வதேச அளவில் பல மாணவ, மாணவியர் சிறப்பு நிலையை அடைந்துள்ளனர்.

## 3.16 மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டுதல்

திருச்சி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலகங்களுக்கு ரூ.**4.59** கோடி செலவில் சொந்தக் கட்டடம் கட்ட நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு அரசால் வழங்கப்பட்டது. இக்கட்டடப் பணிகள்

முடிவுற்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 5.8.2016 அன்று திறந்து வைக்கப்பட்டது.

## 3.17 2013 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை புதியதாகத் தொடங்கப்பட்ட அரசு கல்லூரிகளுக்குச் சொந்தக் கட்டடம் கட்டுதல்

குமாரபாளையம் (நாமக்கல் மாவட்டம்), கறம்பக்குடி (புதுக்கோட்டை மாவட்டம்), சிவகாசி (விருதுநகர் மாவட்டம்), கோவில்பட்டி (தூத்துக்குடி மாவட்டம்), பேராவூரணி (தஞ்சாவூர் மாவட்டம்), உத்திரமேரூர் (காஞ்சிபுரம் மாவட்டம்) ஆகிய இடங்களில் உள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு நிரந்தரக் கட்டடங்கள் கட்டுவதற்கு அரசால் ரூ.45.68 கோடி ஒப்புதல் அளிக்கப்பட்டது. இக்கட்டடங்கள், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைக்கப்பட்டன.

ஓசூர், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு ரூ.7.97 கோடியில் சொந்த கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

தர்மபுரி மாவட்டம், காரிமங்கலத்தில் உள்ள அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு நிரந்தரக் கட்டடம் கட்டும் பொருட்டு, ரூ.4.15 கோடி மதிப்பீட்டிலான இந்து சமய அறநிலையத்துறைக்குச் சொந்தமான நிலம் வாங்கப்பட்டு, ரூ.7.97 கோடி செலவில் தற்போது கட்டடப் பணிகள் நிறைவுற்றுள்ளன.

2015–16 ஆம் கல்வியாண்டில் தொடங்கப்பட்ட டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கான சொந்தக் கட்டடம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. 2016–17ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட சத்தியமங்கலம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மற்றும் நாகர்கோவில், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கான சொந்தக் கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன. வீரபாண்டி, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கான நிலம் தேர்வு செய்யும் பணி மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 3.18 நாட்டு நலப்பணித் திட்டம்

நாட்டு நலப்பணித் திட்டம் தமிழகத்தில் செப்டம்பர், 1969 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது 3,90,700 மாணவத் தொண்டர்களுடன் இத்திட்டம் தமிழகத்தில் பல்வேறு கல்வி நிலையங்களில் செயல்பட்டு வருகிறது. இதற்கான செலவினத்தை மத்திய அரசும், மாநில அரசும் 7: 5 என்ற விகிதத்தில் பகிர்ந்து வழங்குகின்றன. தற்போது, பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் மற்றும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் நாட்டு நலப்பணித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.


## கல்லூரிக் கல்வி

### 2015–16ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் உள்ள கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் கல்வியியல் கல்லூரிகளின் எண்ணிக்கை

| கல்லூரிகளின் வகைகள் | அரசு கல்லூரிகள் | அரசு உதவிபெறும் கல்லூரிகள் | சுயநிதி கல்லூரிகள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் | **80** | **139** | **467** | **686** |
| உடற்கல்வி கல்லூரிகள் | **0** | **3** | **8** | **11** |
| கீழ்திசைக் கல்லூரிகள் | **0** | **4** | **0** | **4** |
| சமூகப் பணி கல்லூரிகள் | **0** | **2** | **0** | **2** |
| கல்வியியல் கல்லூரிகள் | **7** | **14** | **703** | **724** |
| பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் | **37** | **0** | **0** | **37** |
| மொத்தம் | **124** | **162** | **1178** | **1464** |

## கல்லூரிக் கல்வி

### 2015–16ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் உள்ள கலை மற்றும் அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளின் எண்ணிக்கை




# கல்லூரிக் கல்வி

## 2015–16ஆம் ஆண்டில் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் மாணவர்கள் சேர்க்கை

| கல்லூரிகளின் வகைகள் | ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் | | | | | | சேர்க்கை விவரம் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | இளநிலை | முதுநிலை | ஆராய்ச்சி படிப்பு | கல்வியியல் | ஆராய்ச்சி மேற்படிப்பு | மொத்தம் | இளநிலை | முதுநிலை | ஆராய்ச்சி படிப்பு | கல்வியியல் | ஆராய்ச்சி மேற்படிப்பு | மொத்தம் |
| அரசு கல்லூரிகள் | 354012 | 82206 | 15360 | 7668 | 4500 | 463746 | 61770 | 14357 | 2641 | 1267 | 789 | 80824 |
| அரசு உதவிபெறும் கல்லூரிகள் | 642036 | 132180 | 17052 | 12006 | 2946 | 806220 | 96703 | 23116 | 2948 | 2101 | 515 | 125383 |
| பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் | 53400 | 2112 | 0 | 0 | 0 | 55512 | 9339 | 375 | 0 | 0 | 0 | 9714 |
| சுயநிதி கல்லூரிகள் | 708996 | 164610 | 7860 | 399540 | 1662 | 1282668 | 104084 | 17773 | 1373 | 68931 | 290 | 192451 |
| மொத்தம் | **1758444** | **381108** | **40272** | **419214** | **9108** | **2608146** | **271896** | **55621** | **6962** | **72299** | **1594** | **408372** |

# கல்லூரிக் கல்வி

## 2015 –16ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் உள்ள கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் மாணவர்களின் எண்ணிக்கை



## 4. பல்கலைக்கழகங்கள்

உயர்கல்வித்துறையின் ஆளுகையின் கீழ் பின்வரும் பல்கலைக்கழகங்கள் செயல்படுகின்றன:–

1. சென்னைப் பல்கலைக்கழகம்
2. மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
3. பாரதியார் பல்கலைக்கழகம்
4. பாரதிதாசன் பல்கலைக்கழகம்
5. அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்
6. அழகப்பா பல்கலைக்கழகம்
7. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
8. பெரியார் பல்கலைக்கழகம்
9. திருவள்ளுவர் பல்கலைக்கழகம்
10. தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்
11. தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்
12. அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
13. அண்ணா பல்கலைக்கழகம்

## 4.1 சென்னை பல்கலைக்கழகம்

**4.1.1** சென்னை பல்கலைக்கழகம் **1857** ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் **5–**ஆம் நாள் நிறுவப்பட்டது. முதலில், இப்பல்கலைக்கழகம் ஆய்வு நிறுவனமாக தொடங்கப்பட்டு, பிறகு **1923–**ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சென்னை பல்கலைக்கழகச் சட்டத்தின் மூலமாக பல்கலைக்கழகத்தின் ஆய்வு மற்றும் கற்பித்தல் சார்ந்த செயல்பாடுகள் யாவும் ஒருங்கிணைக்கப்பட்டன. தற்பொழுது இப்பல்கலைக்கழகம் சேப்பாக்கம், மெரினா, கிண்டி, தரமணி, சேத்துப்பட்டு, மதுரவாயல் (களஆய்வகம்) ஆகிய ஆறு வளாகங்களை சென்னை மாநகருக்குள் பெற்றுள்ளது. சென்னை பல்கலைக்கழகச் சட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் மற்றும் பிற பல்கலைக்கழகங்கள் ஏற்படுத்தப்பட்டதன் விளைவாக, உயர்கல்வியில் கலை மற்றும் அறிவியல் தொடர்பான கல்வியை வழங்குவதில் இப்பல்கலைக்கழகம் முன்னிலை வகிக்கிறது. இப்பல்கலைக்கழகத்தின் கீழ் **87** கற்பித்தல் மற்றும் ஆய்வுத் துறைகளும், **134** இணைவுக் கல்லூரிகளும், **52** இணைவுப் பெற்ற ஆய்வு நிறுவனங்களும் உள்ளன. சென்னை பல்கலைக்கழகம் தேசிய தரமதிப்பீட்டுக் குழுவின் ( ) உயர் மதிப்பீட்டினைத் தொடர்ந்து பெற்று வருவதுடன் பல்கலைக்கழக மானியக் குழுவினால் “University with ” என்ற அங்கீகாரத்தையும் பெற்றுள்ளது. தன்னாட்சிக் கல்லூரி என்ற முறையினை

பல்கலைக்கழக அளவில் சென்னை பல்கலைக்கழகம்தான் முதன் முதலில் அறிமுகப் படுத்தியது. இதனால் தன்னாட்சிக் கல்லூரிகள் யாவும் தமக்கென பாடத்திட்டம், தேர்வுமுறை ஆகியவற்றை ஏற்படுத்திக் கொள்ள முடிந்தது. தன்னாட்சித் தகுதி பெற்ற 23 கல்லூரிகள் சென்னை பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்று உள்ளன. பல்கலைக்கழக மானியக் குழு சில கல்லூரிகளுக்கு "Colleges with " என்ற அங்கீகாரத்தை வழங்கியுள்ளது. 1981 இல் தொடங்கப் பெற்ற தொலைதூரக் கல்வி நிறுவனம், 27 இளங்கலைப் படிப்புகளையும், 21 முதுகலைப் படிப்புகளையும், 20 தொழிற் படிப்புகளையும், 29 ஏனைய படிப்புகளையும் வழங்கி வருகின்றது. மேலும், தொலைதூரக் கல்வி நிறுவனம் ஆப்பிரிக்க மின்னணு இணைப்பு திட்டம் ( ) என்ற ஒரு திட்டத்தை நிறுவி, இதன் வழி ஆகிய படிப்புகளை ஆப்பிரிக்க மாணவர்களுக்கு வழங்குகிறது.

## 4.1.2 கடந்த 5 ஆண்டு கால முக்கிய சாதனைகள்:

- பல்கலைக்கழகம் மூலம் நெம்மேலி மற்றும் திருவொற்றியூரில் இரண்டு உறுப்பு கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளன.
- மகளிர் கல்வி ஆய்வு, சமுதாயப் பணி, கணினி வலையமைப்பு மற்றும் தகவல் தொழில்நுட்பம், பொருள் அறிவியல், உயிர் தகவல் மற்றும்

ஆலோசனை உளவியல் ஆகிய 6 புதிய துறைகள் பல்கலைக்கழகத்தால் துவங்கப்பட்டுள்ளன.

- காணொலிக் காட்சி வசதிகளுடன் கூடிய நவீன வகுப்பறைகள், வெளிநாட்டு மொழியைக் கற்றலுக்கான ஆய்வகங்கள், தொழில் முனைவோர் மற்றும் திறன் மேம்பாட்டு மையம், புகழ்பெற்ற வெளிநாட்டுப் பல்கலைக்கழக பேராசிரியர்களை அழைத்தல், பாடத்திட்ட மேம்பாட்டு மையம் ஆகிய திட்டங்கள் தமிழ்நாடு அரசு ஒதுக்கிய நிதியின் மூலமாக அமல்படுத்தப்பட்டுள்ளன.
- மாற்றுத் திறனாளிகளுக்கான பலவடிவ கருவிகள் தயாரிக்கும் மையம், சுவாமி விவேகானந்தர் உயர் ஆய்வு மற்றும் கல்வி மையம், உயர் தொழில்நுட்பம் கொண்ட முதுகலை ஆய்வகம், தொழில்நுட்பம் மற்றும் கல்வி தொடர்பான எழுத்துப் பயிற்சி மையம், பல்கலைக்கழக தொழில் கூட்டுறவு மையம், அடைகாப்பு மற்றும் தொழில்நுட்ப மாற்று மையம் ஆகியவற்றை இப்பல்கலைக்கழகம் நிர்மானித்துள்ளது.
- இப்பல்கலைக்கழகம் 12 புதிய ஆய்வு மையங்களை உருவாக்கியுள்ளது.
- அரசு நிதி உதவி பெறும் பல்கலைக்கழகங்களுள் இப்பல்கலைக்கழகம் மட்டும்தான் தொழில்நுட்ப அடைகாப்பு மற்றும் தொழில் வல்லமைத் திறன் மேம்பாட்டு மையங்களை நிர்மானித்துள்ளது.

- மத்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் திட்டத்தின் கீழ் ரூ.31.40 கோடியும், உயிர் தொழில்நுட்பத் துறையிலிருந்து ரூ.5.016 கோடியும் பெற்றுள்ளது.
- இப்பல்கலைக்கழகம் மாணவர்களுக்கு You என்ற திட்டத்தை கடந்த 10 ஆண்டுகளாக செயல்படுத்தி வருகிறது.
- இப்பல்கலைக்கழகம் University with Potential for Excellence ( திட்டத்தின் கீழ் 7 ஆய்வு மையங்களை நிர்மானித்துள்ளது. அவை (1) மதங்களுக்கு இடையேயான ஒப்பீட்டு ஆய்வு (2) ஊரக வளர்ச்சி மற்றும் போர் திறன் சார்ந்த படிப்பு மையம் (3) தீவிரவாதம், தேசியப் பாதுகாப்பு மற்றும் குற்றங்களால் பாதிக்கப்பட்டோர்
  (4) புலனுணர்வு மற்றும் நடத்தைகள் ஆய்வு (5) உளநிலை மற்றும் இசைவழி குணமாக்கல் (6) மரபுசார் மற்றும் தரமாக்கல் ஆய்வகம் (7) பல மொழிகளுக்குரிய சொற்களஞ்சியத் திட்டம்.
- இப்பல்கலைக்கழகம் பன்னாட்டுத் தொடர்பு மையத்தின் மூலம் 118 வெளிநாட்டு மாணவர்களைப் பல பாடப் பிரிவுகளில் சேர்த்துள்ளது.
- University with Potential for Excellence ( திட்டத்தின் கீழ் ‘உயிர் மருந்தியல் ஆய்வு மற்றும் புதிய பொருள் ஆய்வு’ மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 4.2 மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

**4.2.1.** மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை காமராசர் பல்கலைக்கழகச் சட்டம் 1965–இன் படி நிறுவப்பட்டு, பின்னர் 1966ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 6ஆம் தேதி செயல்படத் தொடங்கியது. உலகத் தரம் வாய்ந்த உயர்கல்வியை வழங்குவதில் தேசிய அளவிலும், மாநில அளவிலும் ஒரு முன்மாதிரிக் கல்வி நிறுவனமாகப் பங்காற்றி வருகிறது. இப்பல்கலைக்கழகம் தமிழகத்தில் இரண்டாவதாகத் தொடங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. பல்கலைக்கழகம், 1966ஆம் ஆண்டில் மதுரை நகர் வளாகத்தில் தொடங்கப்பட்டு இயங்கி வந்தது. பின்னர் 1972 ஆம் ஆண்டு 745 ஏக்கர் பரப்பளவில் அனைத்து வசதிகளுடன் தற்போதுள்ள பல்கலைநகர் வளாகத்திற்கு மாற்றப்பட்டது. மதுரை காமராசர் பல்கலைக் கழகமானது 20 புலங்களின் கீழ் 77 துறைகளைக்கொண்டு இயங்கி வருகிறது. இப்பல்கலைகழகத்தின் கீழ் 91 இணைவு பெற்ற கல்லூரிகள், 4 மாலை நேரக் கல்லூரிகள், 12 அங்கீகரிக்கப்பட்ட கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. இப்பல்கலைக்கழகம் மதுரை, தேனி, விருதுநகர் மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களை உள்ளடக்கிய கல்லூரிகளில் சுமார் 1,40,000க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. மேலும் இப்பல்கலையின் தொலைதூரக் கல்வி இயக்ககம் மூலம் 1.25 லட்சம் மாணவர்கள் பயின்று வருகின்றனர். 2006 ஆம் ஆண்டு பல்கலைக்கழக மானியக்குழு மதுரை

காமராசர் பல்கலைக்கழகத்திற்கு ‘ஆற்றல்சால் பல்கலைக்கழகம்’ எனும் தகுதியினை வழங்கி இருக்கிறது. குறுகிய காலத்தில் ‘ஆற்றல்சால் பல்கலைக்கழகம்’ என்னும் தகுதியைப் பெற்ற பல்கலைக்கழகமாக இது திகழ்கிறது. பழம்பெருமை வாய்ந்த இப்பல்கலைக்கழகம் **2016**ஆம் ஆண்டில் பொன்விழா ஆண்டைக் கொண்டாடுகிறது.

### 4.2.2 தனித்தன்மை வாய்ந்த சாதனைகள்

- தேசியத்தர மதிப்பீட்டுக் குழுவால் **2015** ஆம் ஆண்டில் இப்பல்கலைக்கழகத்திற்கு மூன்றாவது சுழற்சியில் ‘ஏ’ தர மதிப்பீடு வழங்கப்பட்டிருக்கிறது.
- **2016** ஆம் ஆண்டு பல்கலைக்கழக மானியக் குழுவால் பல்கலைக்கழகத்தில் பணியாற்றி வரும் ஆறு ஆசிரியர்களுக்கு மதிப்புமிகு இராமன் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.
- இப்பல்கலைக்கழக உயிர்நுட்பவியல் துறையின் இளம் ஆசிரியர் ஒருவர் அகில இந்திய மருந்து ஆராய்ச்சிக் கழகம், புதுடில்லி வழங்கும் **2016–17** ஆம் ஆண்டிற்கான ‘சர்வதேச பயோமெடிக்கல் ஆராய்ச்சியாளர்’ என்ற விருதினைப் பெற்றுள்ளார். மேலும் அதே துறையைச் சார்ந்த ஒரு இளம் பேராசிரியை ஒருவருக்கும் இந்திய நுண்ணுயிரியலாளர் அமைப்பின் மூலமாக

ஆராய்ச்சியாளருக்கான உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

- பல்கலைக்கழகத்தில் இயங்கி வரும் திரைப்படம் மற்றும் மின்னணு ஊடகப் படிப்பு மையம் உயர் சிறப்புடைய உலகத்தரம் வாய்ந்த நவீன வசதிகளுடன் கூடிய ஒருங்கிணைந்த 5 ஆண்டுகால முதுகலை திரைப்பட மற்றும் மின்னணு ஊடகப்படிப்பை வழங்கி வருகிறது. இம்மையம் இந்தியாவில் உள்ள முதன்மையான மையமாகத் திகழ்கிறது.
- பல்கலைக்கழகத்தில் அறிவியல் தகவல்களைப் பகிர்ந்துகொள்ளும் இணையவழி அறிவியல் தரவகை மையம் ஒன்று ஏற்படுத்தப்பட்டு இருக்கின்றது.
- பல்கலைக்கழகத்திலுள்ள 22 கல்விக் கட்டடங்களுக்கு ஒளியிழை கம்பி பதிக்கப்பட்டு, ஆறு துறைகளுக்கு ரூ.55 இலட்சம் மதிப்பில் இணைப்புப் பணி செய்து முடிக்கப்பட்டுள்ளது.

### 4.2.3 கடந்த 5 ஆண்டுகளில் செயல்படுத்தப்பட்டுள்ள முக்கிய சாதனைகள்

- பல்கலைக்கழகம் மற்றும் தொழில் நிறுவனங்களின் கூட்டிணைவு மையம் புதுமையான மற்றும் தொழில் சார்ந்த படிப்புகளை வழங்குவதற்காக பெருவணிக

நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது.

- 2013–16ஆம் ஆண்டில் தொழில் முனைவோர் திறன் மேம்பாட்டு மையத்தின் மூலமாக 1200 மாணவர்களுக்குத் தகவல் தொழில்நுட்பவியல் திறன் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.
- கற்றல், கற்பித்தலில் திறன் மேம்பாடு அடைவதற்காகவும், நவீனப்படுத்துவதற்காகவும் பல்லூடக வசதிகளுடன் கூடிய மூன்று குழுக்கல்வி வகுப்பறைகள் தலா ரூ.60 லட்சம் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான பலவடிவ கருவிகள் தயாரிக்கும் மையமும் அவர்கள் பயன்பெறும் வகையில் நூலகமும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் அவர்களுக்கான நடைபாதை உருவாக்கப்பட்டுள்ளது. பார்வையற்ற மாணவர்கள் பயன்பெறும் வகையில் அவர்களுக்கான உபகரணங்கள் குளிரூட்டப்பட்ட வசதிகளுடன் கூடிய நூலகமாக விரிவாக்கப்பட்டு உள்ளது. இம்மையத்தின் மூலம் 230 மாணவர்கள் பயனடைந்துள்ளார்கள்.
- பல்கலைக்கழகத்தில் சுவாமி விவேகானந்தர் உயர் ஆய்வு மற்றும் கல்வி மையம் ஏற்படுத்தப்பட்டு, 400 மாணவர்களும், 16 ஆராய்ச்சியாளர்களும் பயனடைந்துள்ளனர்.

- பல்கலைக்கழகத்தில் ஆங்கிலம், பிரெஞ்சு, சீனம் மற்றும் ஜெர்மன் ஆகிய மொழிகளைக் கற்பிப்பதற்கான அயல்மொழி ஆய்வுக்கூடம் ஒன்று நிறுவப்பட்டு, 157 மாணவர்கள் பயனடைந்துள்ளார்கள்.
- பல்கலைக்கழக வளாகத்தில் ரூபாய் ஒரு கோடி மதிப்பில் 100 KW சூரிய மின் சக்தி உற்பத்தி நிலையம் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் தினமும் 400 அலகு மின் உற்பத்தி செய்யப்பட்டு, மாதம் ரூ.50,000 வரை சேமிக்கப்படுகிறது.

## 4.3 பாரதியார் பல்கலைக்கழகம்

**4.3.1** பாரதியார் பல்கலைக்கழகம், பிப்ரவரி 1982ஆம் வருடம் பாரதியார் பல்கலைக்கழக சட்டம் 1981–இன்படி நிறுவப்பட்டது. தொடக்கத்தில் 9–துறைகளுடன் துவங்கப்பட்ட இப்பல்கலைக்கழகமானது, தற்போது 39 துறைகளை உள்ளடக்கி 14 புலங்களைக் கொண்டுள்ளது. மேலும் இத்துறைகளின் மூலம் 54 முதுநிலை, மற்றும் ஆராய்ச்சி படிப்புகளும் (M.Phil & Ph.D.) சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது. முதுநிலையில் 1066 மாணவ மாணவியரும், 168 ஆய்வியல் நிறைஞர்களும், 198 முனைவர் பட்ட ஆய்வாளர்களும் 2015–16 கல்வியாண்டில் பயின்று வருகின்றனர். மேலும் தொலைதூரக்கல்வியின் மூலம் 2015–16 கல்வியாண்டில் 31,272 மாணவ மாணவியர் பல்வேறு படிப்புகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

**4.3.2** தேசிய தர நிர்ணய மற்றும் மதிப்பீட்டு குழுவால் கடந்த மார்ச் 2016 அன்று மூன்றாவது முறையாக மறு மதிப்பீட்டின் மூலம் மீண்டும் **‘ஏ’** தர மதிப்பீடு வழங்கப்பட்டுள்ளதுடன் மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டுத் துறையால் இந்திய அளவில் 14–வது இடத்திலும், மாநில அளவில் 1–வது இடத்திலும் தர நிர்ணயம் செய்து அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

**4.3.3** இப்பல்கலைக்கழகமானது கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர் மற்றும் நீலகிரி ஆகிய நான்கு

மாவட்டங்களில் 113 இணைவுக் கல்லூரிகளைக் கொண்டுள்ளது. இவற்றுள், 7 அரசு கல்லூரிகளும், 3 உறுப்புக் கல்லூரிகளும் முறையே வால்பறை, கூடலூர் மற்றும் மொடக்குறிச்சி (சிவகிரி)–யிலும், 16 அரசு உதவி பெறும் கல்லூரிகளும் மற்றும் 87சுயநிதி கல்லூரிகளும் உள்ளடங்கும்.

**4.3.4** மேலும் ஈரோட்டில், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 06.05.2013 அன்று முதுகலை விரிவாக்க கல்வி மையம் தொடங்கப்பட்டு தற்போது 5 துறைகளுடன் 150 மாணவ மாணவியர்களுடன் செயல்பட்டு வருகிறது.

**4.3.5** தற்போது இளநிலை, முதுநிலை, பட்டயமேற்படிப்பு, பட்டயப்படிப்பு, ஆராய்ச்சி படிப்புகளில் 1,63,814 (73,814 முறைசார் கல்வி மற்றும் 90,000 தொலைதூர கல்வி) மாணாக்கர்கள் இப்பல்கலைக்கழக துறைகளிலும், உறுப்பு கல்லூரிகளிலும் மற்றும் தொலை தூர கல்வி துறையகத்திலும் பயின்று வருகிறார்கள்.

**4.3.6** மேலும் தமிழக அரசு இப்பல்கலையின் இயற்பியல் துறையை ஆற்றல் சால் துறையாக இனங்கண்டு அதன் வாயிலாக உயர்தர ஆராய்ச்சி திட்டங்களை ஊக்குவிப்பதற்காக உயர்தர ஆராய்ச்சி ஆய்வகத்தை உருவாக்கியுள்ளது.

**4.3.7 கடந்த 5 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய சாதனைகள்:—**

- கௌசால் கேந்திரா (ஆசிரிய மேம்பாடு மையம்) பல்கலைக்கழக இணைப்புக் கல்லூரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

- தமிழக அரசின் வழிகாட்டுதலின்படி, இரண்டு சுயநிதிக் கல்லூரிகளுக்கு சமுதாயக் கல்லூரிகள் தொடங்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

- பல்கலைக்கழக நிதி நல்கைக்குழு இரண்டு சுயநிதிக் கல்லூரிகளுக்கு B.Voc. திட்டத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது.

- மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 110 விதியின் கீழ் அறிவிக்கப்பட்டபடி பல்கலைக்கழகத்திற்கு ரூ.350 இலட்சம் மதிப்பீட்டில் மாணவ, மாணவியர் விடுதிகள் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

- பல்கலைக்கழகத்தில் கட்டப்பட்ட ஆசிரியர் பணியாளர் கல்லூரி விடுதி ரூ.296 இலட்சம் மதிப்பீட்டில் கடந்த 2015ம் ஆண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது.

- பல்கலைக்கழக வேலைவாய்ப்பு மற்றும் வழிகாட்டு துறை மூலமாக பல்கலைக்கழக மாணவ மாணவியருக்கு மட்டுமன்றி அனைத்து இணைவுக் கல்லூரி மாணாக்கர்களுக்கும் வேலை வாய்ப்பு முகாம் மற்றும் ஆசிரியர்களுக்கு பயிற்சி வகுப்புகள் தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருகிறது.
- பல்கலைக்கழக நிதி நல்கைக்குழுவின் சிறப்பு ஆய்வுத்திட்டத்தின் (UGC-SAP) கீழ் நான்கு துறைகள் பயன்பெற்றுள்ளன. இதன் வாயிலாக, ஏறக்குறைய ரூ.**3.25** கோடி நிதியுதவி பெறப்பட்டுள்ளது.

## 4.4 பாரதிதாசன் பல்கலைக்கழகம்

4.4.1 பாரதிதாசன் பல்கலைக்கழகம் புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் பெயரால் 1982ஆம் ஆண்டு நிறுவப்பெற்றது. இப்பல்கலைக்கழகமானது பல்கலைப்பேரூர் முதன்மை வளாகம், திருச்சிராப்பள்ளியில் உள்ள காஜாமலை நகர வளாகம் ஆகிய இரு வளாகங்களைப் பெற்றுள்ளது. இவைதவிர, திருவெறும்பூரில் பாரதிதாசன் மேலாண்மை நிறுவனத்தையும் தன்னகத்தே பெற்றுள்ளது. பாரதிதாசன் பல்கலைக்கழகம் செப்டம்பர் 2012 இல் பல்கலைக்கழக மானியக்குழுவின் தேசியத்தர நிர்ணயக் குழு மறுமதிப்பீட்டில் **'ஏ'** தரத்தினைப் பெற்றுள்ளது. பல்கலைக்கழகத்தில் 21 பள்ளிகள், 40 துறைகள் மற்றும் 23 சிறப்பு மையங்கள் இயங்குகின்றன. இவற்றின் மூலம் பல்வேறு நிலைகளில் 174 பாடப்பிரிவுகள் நடத்தப்படுகின்றன. திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, கரூர், பெரம்பலூர், அரியலூர், தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய எட்டு மாவட்டங்களை உள்ளடக்கிய பகுதிகளில் 141 கல்லூரிகள் பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றுள்ளன. இப்பல்கலைக்கழகம் 4 மாதிரிக் கல்லூரிகள், 6 உறுப்புக் கல்லூரிகள் மற்றும் ஒரு முதுநிலைப் பட்ட விரிவாக்க மையம் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

**4.4.2 கடந்த ஐந்தாண்டுகளில் முக்கிய சாதனைகள்**

- QS BRICS தரவரிசைப் பட்டியலில் வெளியிடப்பட்டுள்ள முதன்மையான **150** கல்வி நிறுவனங்களில் பாரதிதாசன் பல்கலைக்கழகம் **145**ஆவது இடத்தை ஆய்வு வெளியீடுகள் அடிப்படையில் பெற்றுள்ளது.
- **19** காப்புரிமைகள் பதிவு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளன.
- விலங்கு பரிசோதனைகளுக்கான மாற்று தேசிய மையத்திற்காக (NACAAE) குறிப்பிட்ட பகுதிக்கான ஆற்றல் வளத் தனித்தகுதி மையம் என தகுதி நிலை பெற்றமைக்கு பல்கலைக்கழக மானிய குழு ரூ.**5.00** கோடி வழங்கியுள்ளது.
- கடல்சார் மற்றும் நன்னீர் நுண்பாசி மற்றும் நீலப் பச்சைப்பாசி ஆகியவற்றிற்கான தேசிய உயிர் வங்கியை நிறுவுவதற்கு உயிர்தொழில்நுட்பவியல் துறை ரூ.**1.70** கோடி நிதி வழங்கியுள்ளது.
- பல்கலைக்கழகப் பேரூர் வளாகத்தில் **500** கிலோவாட் மின் உற்பத்தி செய்யும் சூரிய மின் சக்திப் பூங்காவும் காஜாமலை வளாகத்தில் **200** கிலோவாட் மின்உற்பத்தி செய்யும் திறன் கொண்டசூரிய மின் சக்தி அமைப்புக்கள் நிறுவப்பட்டுள்ளன.

- பல்கலைக்கழக மானியக் குழு SAP திட்டத்தின் கீழ் 7 துறைகளோடு மேலும் 2 துறைகளுக்குச் சிறப்பு உதவி வழங்கியுள்ளது.
- DST - FIST (அறிவியல் தொழில்நுட்ப மேம்பாட்டுக்கான நிதி) இன் கீழ் 5 துறைகள் ரூ.4.89 கோடி நிதியுதவி பெற்றுள்ளன.
- மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் PURSE (அறிவியல் உயர்திறன் மேம்படுத்துதல்) திட்டத்தின் கீழ், H குறியீட்டின் அடிப்படையில் ரூ.9.00 கோடியை உதவிநிதியாக வழங்கியுள்ளது.
- UGC, CSIR, DST, DBT,DRLS, DRDO, ICSSR, ICMR முதலியவற்றின் ஆதரவால் 299 ஆராய்ச்சித் திட்டங்கள் ரூ.3,242 இலட்சம் நிதி பெற்றுள்ளன.
- 2016 ஆகஸ்ட் 4–ஆம் தேதிவரை பல்கலைக்கழகத்தின் 4,311 வெளியீடுகள் 43,026 இடங்களில் மேற்கோள் காட்டப்பட்டு ‘H’ குறியீட்டில் 75 புள்ளிகள் பெற்றுள்ளதாக SCOPUS ஆல் குறியீடு செய்யப்பட்டுள்ளது.
- பல்கலைக்கழக மானியக் குழுவின் XII ஆம் திட்டத்தின்படி, மகளிர் விடுதி கட்டுவதற்கு ரூ.120 இலட்சமும், உடல்தகுதி மையம், இரண்டு சிந்தடிக் டென்னிஸ் அரங்குகள் உள்ளிட்ட விளையாட்டு அரங்கம் கட்டுவதற்கு ரூ.240 இலட்சமும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

- மாணவர்களிடம் உலகளாவிய போட்டியிடும் திறனை மேம்படுத்துவற்கு 10 வெவ்வேறு பிரிவுகளில் உலகத் தரத்துடனான பாடத் திட்டப் பிரிவுகள் உருவாக்கப்பட்டுள்ளன.
- பாரதிதாசன் பல்கலைக்கழகத் தொழில் முனைவோர், சுயவேலை மேம்பாட்டு நிறுவனம் பல்கலைக்கழக மானியக்குழுவின் DDU KAUSHAL (தீன் தயாள் உபாத்தியாய அறிவுச் சேகரம் மற்றும் திறன் மிகு மனித செயல்பாடுகள் மற்றும் வாழ்வாதார மேம்பாடு) மையம் ரூ.3.5 கோடியில் நிறுவப்பட்டுள்ளது. இம்மையம் மூன்று B.Voc பயில்திட்டங்களை அளிக்கிறது.
- பாரதிதாசன் பல்கலைக்கழகத் தொழில் முனைவோர், சுய வேலை மேம்பாட்டு நிறுவனம் 20,847 பேருக்கு வேலைவாய்ப்பை உருவாக்கியிருக்கிறது. 2.10 இலட்சம் பள்ளி மாணவர்களுக்கு தகவல் தொழில்நுட்பப் பயிற்சியளித்துள்ளது.
- 2015–16 ஆம் கல்வியாண்டில் 6 ஆண்டுகள் முதுநிலை உயிர்தொழில்நுட்பவில், முதுநிலை கணினி அறிவியல், முதுநிலை மண்ணியல் தொழில்நுட்பம், முதுநிலை புவித் தகவலியல் ஆகியன மறு அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.
- புதிதாக நிறுவப்பட்டுள்ள பாரதிதாசன் மேலாண்மைப் பள்ளியின்கீழ், முதுநிலை வணிக நிர்வாகம் மற்றும் பிறத்துறைகளில் M.A. பொருளியல் (5 ஆண்டு ஒருங்கிணைந்த படிப்பு), M.Sc. மண்ணியல் (5ஆண்டு

ஒருங்கிணைந்த படிப்பு), M.A. வளர்ச்சியியல் ஆகியன நடப்பு கல்வியாண்டில் பல்கலைக்கழகத் துறைகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

- பல்கலைக்கழக விடுதிகள், வகுப்பறைகள் மற்றும் துறைகள் உள்ளிட்ட அனைத்துப் புதிய கட்டிடங்களிலும் பல்கலைக்கழகத் தகவலியல் மையம் உயர்தொழில்நுட்பம் சார்ந்து LAN மற்றும் Wi-Fi இணைப்பு மேம்படுத்தப்பட்டுள்ளது.
- பாரதிதாசன் பல்கலைக்கழகம் பயிற்சி மற்றும் பணியிடங்காண் மையத்தை நிறுவியுள்ளது.
- பல்கலைக்கழகம் கரிம உலோக வேதியியல் மையத்தை நிறுவியுள்ளது.
- பாவேந்தர்பாரதிதாசன் **125**ஆம் பிறந்தநாளை முன்னிட்டு, மணிமண்டபம் கட்டப்படுகிறது.

## 4.5 அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகம்

**4.5.1.** அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் **1984**ஆம் ஆண்டு முன்னாள் தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.இராமச்சந்திரன் அவர்களால், அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற அன்னை தெரசாவின் முன்னிலையில் தொடங்கப்பட்டது. இப்பல்கலைக்கழகத்தின் முத்துமொழி **'சரிசமநிலையை நோக்கி'** என்பதாகும். இப்பல்கலைக்கழகம், கல்வியின் வழி மகளிருக்கு முழுமையான அதிகாரமளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. பல்கலைக் கழகத்தின் குறிக்கோள் மாநிலத்தின் மகளிர் கல்வியை எல்லா நிலைகளிலும் கண்காணிப்பு செய்தல், மகளிருக்கு ஆய்வு வாய்ப்புகளைப் பெருக்குதல், ஆலோசனைச் சேவைகளை நல்குதல் என்பனவாகும். அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் அமைந்துள்ளது. திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டத்தில் அமைந்துள்ள மகளிர் கல்லூரிகள் இப்பல்கலைக்கழகத்தின் இணைவு பெற்றுள்ளது. அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் 2 உறுப்புக் கல்லூரிகள், 5 சுயநிதிக் கல்லூரிகள், 2 அரசு கல்லூரிகள், 2 நிதியுதவி பெறும் கல்லூரிகள், 8 சமுதாயக் கல்லூரிகள் மற்றும் பதினெட்டுத் துறைகளும், சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் ஆய்வு விரிவாக்க மையங்களும் உள்ளன.

இப்பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் பாடப் பிரிவுகள்:-

| **பாடப்பரிவுகள்** | **எண்ணிக்கை** |
|---|---|
| முனைவர் பாடப்பிரிவு | 24 |
| ஆய்வு நிறைஞர் | 26 |
| முதுகலை | 25 |
| முதுகலைப்பட்டயம் | 14 |
| சான்றிதழ் | 7 |

பல்கலைக்கழகத்தில் **1238** மாணவர்கள் மற்றும் **68** ஆசிரியர்கள் மற்றும் **82** நிர்வாகப் பணியாளர்கள் உள்ளனர்.

**4.5.2 கடந்த 5 ஆண்டுகளில் முக்கியச் சாதனைகள் :**

- ஜனவரி **2015**ல் பல்கலைக்கழகம் தேசியத் தர மதிப்பீட்டுக் குழுவின் மறு மதிப்பீட்டு ஆய்விற்குட்பட்டு, 'பி' கிரேடு ஆக மதிப்பிடப்பட்டுள்ளது. தமிழகத்தில் **2016** முதல் உதவிப்பேராசிரியர்களுக்கான மாநிலத் தகுதித் தேர்வை நடத்தும் முகமை நிறுவனமாக தேர்வு செய்யப்பட்டுள்ளது.

- முதுநிலைக் கல்வியியல் சிறப்புப்பாடம் (மனநல பிறழ்வினர்) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

- **பல்கலைக்கழகத்தால் பெறப்பட்ட பல்வேறு பரிசுகளும் விருதுகள்:**

  - **2016–**ல், IARA மற்றும் பாரதிதாசன் பல்கலைக்கழகம் இணைந்து மிகச்சிறந்த அறிவியலார் விருது,
  - ஐசிடிஏசிடி பெண் கல்வித் தலைவர் **– 2015**
  - சிறந்த துணைவேந்தர் விருது – **2013**
  - பாரத சேவா ரத்தன் தங்கப் பதக்கம் விருது – **2013**
  - திறன்மிகு உயிரித் தொழில்நுட்பவியலாளர் விருது – **2013**
  - ஆங்கிலத்தில் சிறந்த கல்வியாளர் **– 2013**
  - சிறந்த ஆய்வேடு விருது – **2013**
  - கல்வியில் நிகரற்ற பங்களிப்பிற்கான தேவாங் மேத்தா வணிகப் பள்ளி விருது புரூம்பெர்க் தொலைக்காட்சி வழங்கியமை – **2012**
  - தமிழ்நாடு இளம் அறிவியலாளர் விருது – **2012**
  - தொழில் திறன் விருது – **2012**
  - சிறந்த சுவரொட்டி விருது – **2012**

- சிறந்த ஆய்வுக் கட்டுரை விருது – **2010, 2011, 2013, 2014**
- நாசா (NASA) விருது – **2015.**
- மாணாக்கியர்கள் வெவ்வேறு விளையாட்டுப் போட்டிகளில் ரூபாய் **1,05,000/–** (ரூபாய் ஒரு இலட்சத்து ஐயாயிரம்) ரொக்கப் பணமும், **101** பதக்கங்களும் பெற்றுள்ளனர்.

- தமிழக அரசு, காமன்வெல்த் அன்னை தெரசா மகளிர் பன்னாட்டு மையம், தொழில்நுட்பத் திறன் அடைகாப்புப் பரிமாற்ற மையம், காந்தியக் கல்வி மையம், சுவாமி விவேகானந்தர் கல்வி மையம் ஆகியவற்றை நிறுவியுள்ளது.

- மகளிர் பல்கலைக்கழகக் கல்வியியல் கல்லூரி (பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரி) கொடைக்கானல், ஸ்ரீ ஆதி சுஞ்சனகிரி மகளிர் கல்லூரி, கம்பம், நாடார் சரசுவதி கலை அறிவியல் கல்லூரி, தேனி ஆகிய கல்லூரிகளுக்கு 2(F) மற்றும் 12(B) தகுதிகள் பெறப்பட்டன.

- வளாகளாவிய LAN இணைப்பு வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- மனித வள மேம்பாட்டு அமைச்சகம், தமிழ்நாட்டில் பதினேழு மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு

வரும் தேசிய இடைநிலைக் கல்வி மற்றும் அனைவருக்கும் கல்வி திட்டங்களை கண்காணிக்க இப்பல்கலைக்கழகத்தை அங்கீகரித்துள்ளது. மேற்கண்ட திட்டங்கள் ரூ.35 லட்சம் மதிப்பீட்டில் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

- தொழில்சார் அறங்கள் குறித்த புதுமையான முதுநிலை பட்டய படிப்பைத் தொடங்குவதற்கு ஒப்புதல் மற்றும் ரூ.24 லட்சம் நிதியினை பல்கலைக்கழக மானியக் குழு வழங்கியுள்ளது.

- வெவ்வேறு நிதிநல்கு மையங்களிலிருந்து ஏறத்தாழ ரூ.14 கோடி பெறப்பட்டுள்ளது.

- ஆறு சர்வதேச புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் உட்பட இருபத்தொன்பது புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன.

- 2015–16 ஆண்டில் சிறப்புக் கல்வியியலில் எம்.பில், பி.எச்.டி தொடங்கப்பட்டுள்ளன. இப்பல்கலைக் கழகம் கல்வி மற்றும் அறிவியல்சார் ஆராய்ச்சி இதழ்கள், – மானுடத்துறைகளுக்கான ஆராய்ச்சி இதழ், WUSUF – அறிவியல்களுக்கான ஆராய்ச்சி இதழ் ஆகிய இதழ்களை இப்பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ளது.

## 4.6 அழகப்பா பல்கலைக்கழகம்

**4.6.1** **1985** ஆம் ஆண்டு மாநிலப் பல்கலைக்கழகமாக தோற்றுவிக்கப்பட்ட அழகப்பா பல்கலைக்கழகம், பல்கலைக்கழக மானியக் குழுவின் அங்கீகாரத்தையும், தேசிய தர நிர்ணயக் குழுமத்தின் மறுமதிப்பீட்டில் “**ஏ**” தர மதிப்பீட்டினையும் பெற்றுள்ளது. ஆராய்ச்சி மற்றும் பல்வேறு துறைகளில் அறிவைப் பெருக்குதலே இப்பல்கலைக்கழகத்தின் முக்கிய குறிக்கோளாகும். அழகப்பா பல்கலைக்கழகம் இந்திய பல்கலைக் கழகங்களின் கூட்டமைப்பில் உறுப்பினராகவும், காமன்வெல்த் பல்கலைக்கழகங்களின் கூட்டமைப்பில் உறுப்பினராகவும் இருக்கிறது.

**4.6.2** அழகப்பா பல்கலைக்கழகம் காரைக்குடியில் **418** ஏக்கர் பரப்பளவையும், தொண்டியில் **12** ஏக்கர் பரப்பளவையும் கொண்ட வளாகத்தினைப் பெற்றுள்ளது.

**4.6.3** அழகப்பா பல்கலைக்கழகத்தில் **11** கற்றல் பள்ளிகள், **34** துறைகள், **7** மையங்கள், ஒரு உறுப்பு கல்வியியல் கல்லூரியும் மற்றும் ஒரு உறுப்பு உடற்கல்வியியல் கல்லூரியும் உள்ளன. மேலும் பல்கலைக்கழகத்தின் ஆளுகைக்கு உட்பட்ட சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் **33** இணைவுக் கல்லூரிகளும், **6** மாலை நேரக் கல்லூரிகளும், ஒரு புதிய கலை மற்றும் அறிவியல் பல்கலைக்கழக உறுப்புக்கல்லூரியும் செயல்பட்டு வருகின்றன.

**4.6.4** பல்கலைக்கழக துறைகளில் **78** பாடப் பிரிவுகளும், இணைவுக் கல்லூரிகளில் **83** பாடப் பிரிவுகளும், தொலைநிலைக் கல்வியில் **65** பாடப் பிரிவுகளும் மற்றும் இணைப்புக் கல்வித் திட்டத்தின் வாயிலாக **54** பாடப்பிரிவுகளும் வழங்கப்பட்டு வருகின்றன. மேம்பட்ட கல்வியினை உறுதி செய்யும் வகையில் பல்கலைக்கழகம் மற்றும் இணைவுக் கல்லூரிகளின் அனைத்து பாடப்பிரிவுகளிலும் தொடர் உள் மதிப்பீடு முறையும், விருப்பத்தின் அடிப்படையிலான பாடத்தெரிவு முறையும் (CBCS) நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது.

**4.6.5** பல்கலைக்கழகத்தில், தற்பொழுது **215** ஆசிரியர்களும், **226** ஆசிரியரல்லாத மற்றும் தொழில்நுட்ப பணியாளர்களும் பணிபுரிந்து வருகின்றனர்.

**4.6.6** அழகப்பா பல்கலைக்கழகம், தொலைநிலைக் கல்வி இயக்குனரகம் நாட்டின் மூலை முடுக்குகளில் உள்ள **88,000** இளைஞர்கள் மற்றும் பெரியவர்களுக்கு அவர்கள் வசிப்பிடத்திற்கே சென்று, கல்வி வாய்ப்புகளை வழங்கி வருகிறது. இப்பல்கலைக்கழகம் **159** கற்றல் மையங்களை கொண்டுள்ளது. மாணவர்களின் வேலைவாய்ப்பு மற்றும் திறன்வளர் தேவையின் அடிப்படையில் தரமான கல்வி நிறுவனங்களின் வழியாக உணவக அறிவியல் மற்றும் விடுதி மேலாண்மை, கவின் கலைகள், ஆடை வடிவமைப்பு, மருத்துவம்சார் அறிவியல், கடல்சார் மற்றும் வானூர்தி

அறிவியல், உயிர் நுட்பவியல் போன்ற பல்வேறு துறைகளில் **54** சான்றிதழ், பட்டயம், இளங்கலை, முதுகலை பட்டயப் படிப்புகள் மற்றும் முதுகலைப் படிப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன.

### 4.6.7 கடந்த 5 ஆண்டுகளின் முக்கிய சாதனைகள்

- கடந்த ஐந்து ஆண்டுகளில் பல்கலைக்கழகத்தில் கீழ்க்காணும் ஒன்பது புதிய துறைகள் துவங்கப் பெற்றுள்ளன. அவை ஆற்றல் அறிவியல், வாழ்வியல் கல்வி பயிலல், வரலாறு, தாவரவியல், நுண்உயிரியல், சிறப்புக் கல்வியியல் மற்றும் மறுவாழ்வு அறிவியல், உணவக அறிவியல் மற்றும் விடுதி மேலாண்மை, கவின் கலை மற்றும் திறன் மேம்பாடு.
- பல்கலைக்கழக மானியக் குழுவின் புதுமைப் பாடத் திட்டத்தின் அடிப்படையில் அதன் நிதியுதவியுடன், இளங்கலை கல்வியில் ‘‘சிறப்புக் கல்வியியல்’’ முதுநிலை பட்டயப்படிப்பில் ‘‘மதிப்புக்கூட்டு வரி மற்றும் சேவை வரி’’ பார்மோகோஜெனாமிக்ஸ்’’ மற்றும் முதுகலையில் ஊர்தியியல் மேலாண்மை படிப்புகளும், வழங்கப்பட்டு வருகின்றன.

- பல்கலைக்கழக மானியக் குழு, இயற்பியல், தொழில் வேதியியல் மற்றும் உயிர் நுட்பவியல் ஆகிய துறைகளுக்கு தலா 5 ஆராய்ச்சி மாணவர்களுக்கு அடிப்படை அறிவியல் ஆராய்ச்சி **(UGC-BSR Fellowship)** உதவித்தொகையினை மூன்று ஆண்டுகளாக தொடர்ந்து வழங்கி வருகிறது.
- கடந்த ஐந்து ஆண்டுகளில் பல்கலைக்கழகத்தின் எட்டு ஆசிரியர்கள் பல்கலைக்கழக மானியக் குழுவின் ஆய்விற்கான விருதினைப் பெற்றுள்ளனர்.
- பல்கலைக்கழகத்தின் உயிரித் தொழில்நுட்பத் துறை, கொல்கொத்தாவிலுள்ள **ITC** நிறுவனம் மற்றும் சென்னையிலுள்ள டேப்லெட் இந்தியா நிறுவனத்திடமிருந்து ஆலோசனை திட்ட நிதியாக ரூ.142.83 இலட்சம் பெற்றுள்ளது.
- உயிரித் தொழில்நுட்பத்துறை, தொழில் வேதியியல் மற்றும் கடலியல் கடலோரவியல் துறைகளின் பேராசிரியர்கள் பதின்மூன்று புதிய கண்டுபிடிப்புகளுக்காக காப்புரிமை பெற பதிவு செய்துள்ளார்கள்.
- தமிழக அரசின் வழிகாட்டுதலின்படி ரூ.65 இலட்சம் செலவில் தொடங்கப்பட்டுள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான விளையாட்டு மையத்தில் தகுந்த பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. அழகப்பா பல்கலைக்கழக மாற்றுத் திறனாளிகளுக்கான

விளையாட்டு மையத்திலிருந்து பங்கு பெற்ற வீரர்கள் மாநில மற்றும் தேசிய அளவிலான விளையாட்டு மற்றும் தடகளப் போட்டிகளில் தங்கம் / வெள்ளி விருதுகள் பெற்றுள்ளனர்.

- பத்மபூஷன் டாக்டர் அழகப்பச் செட்டியார் அவர்களின் தன்னலமற்ற சிறப்பான கல்விச் சேவையினைப் போற்றும் வகையில், பல்கலைக்கழக வளாகத்தில் ரூ.79 இலட்சம் மதிப்பீட்டில் வள்ளல் அழகப்பர் அருங்காட்சியகம் அமைப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.
- பல்கலைக்கழகத்தினை பசுமை வளாகமாக மாற்றுவதற்காக மழைநீர் சேமிப்பை அதிகரிக்கும் வகையில் நீர்பிடிப்பு குளங்கள் உருவாக்குவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 4.6.8. தனித்தன்மையான சாதனைகள்:

- பல்கலைக்கழகம் ஆராய்ச்சித்திறனை மேம்படுத்தும் வகையில், ரூ.5 கோடி ஒதுக்கீட்டில் ‘‘அழகப்பா பல்கலைக்கழக ஆய்வு நிதி’’ தொடங்கியுள்ளது. இதன்மூலம் பன்னாட்டு கூட்டு ஆராய்ச்சி மற்றும் பெருந்திட்ட ஆய்வுகள் மேற்கொள்ளவும், நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது.
- மாணவர்களின் தனித்திறனை மேம்படுத்தவும், தேசிய / மாநில ஆசிரியர் தகுதி தேர்வுகள்,

குடிமையியல் தேர்வுகள் மற்றும் பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கு மாணவர்களுக்கான உரிய பயிற்சி அளிப்பதற்காக "அழகப்பா பல்கலைக் கழகத்தின் தன்னார்வ பயிலும் வட்டம்" தொடங்கப்பட்டுள்ளது.

- மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு தகுந்த பயிற்சி அளிப்பதற்கும், அவர்களது பெற்றோர்களுக்கு ஆலோசனை வழங்குதற்காகவும், அழகப்பா பல்கலைக் கழகத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான "வளப்பள்ளி"
தொடங்கப்பட்டுள்ள.
- பல்கலைக்கழகத்தில் **2016–17**ஆம் கல்வி ஆண்டு முதல் பல்கலைக்கழக துறைகள் மற்றும் உறுப்புக் கல்லூரிகள் ஒவ்வொன்றிலும் தலா ஒரு மாணவருக்கு முழு கல்விக் கட்டண விலக்கு அளிக்கப்பட்டு வருகிறது.

## 4.7 மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

4.7.1 தமிழ்த்தாய் வாழ்த்தினைத் தந்த புகழ்பெற்ற தமிழறிஞரும் தத்துவ பேராசிரியருமான ப.சுந்தரம்பிள்ளை அவர்களின் பெயரில் (1855–1897) மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் 1990இல் திருநெல்வேலியில் நிறுவப்பட்டது. இப்பல்கலைக்கழகம் திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய மூன்று தென்கோடி மாவட்ட மக்களின் கல்வித் தேவையை நிறைவு செய்யும் வகையில் இயங்கி வருகின்றது.

4.7.2 இப்பல்கலைக்கழகம், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகக் கல்லூரிகள், நாகர்கோவிலில் ஒரு முதுகலை விரிவாக்க மையம் ஆகியவற்றையும் உள்ளடக்கியுள்ளது. தாவர அறிவியல், விலங்கு அறிவியல், புதுப்பிக்கத்தக்க ஆற்றல் அறிவியல் ஆகிய மூன்று துறைகளை 2014–15 ஆம் கல்வியாண்டில் புதியதாகத் துவங்கியுள்ளது. ஐந்து வருட ஒருங்கிணைந்த பட்ட மேற்படிப்புகளான கணிதவியல், இயற்பியல், வேதியியல், சுற்றுச்சூழல் அறிவியல் ஆகிய துறைகளில், 2016–17ஆம் கல்வியாண்டு முதல் துவங்கப்பட்டுள்ளன. இப்பல்கலைக்கழகம் நிறுவியுள்ள தொழில்சார் கல்வி இயக்ககத்தின் மூலம் வேலைவாய்ப்பு பெறும் வகையில் பட்டயத் தொழிற்கல்விப் படிப்புகளை அனுமதிக்கப் பெற்ற சமுதாயக் கல்லூரிகளின் வழியாக வழங்கி வருகின்றது.

**4.7.3** பல்கலைக்கழகத்தின் மூன்று வளாகங்களில் காணொலி வசதியுடன் கூடிய பல்லூடக வகுப்பறைகளும், பல்கலைக்கழகத்தின் முதன்மை வளாகத்தில் அயல்மொழி சோதனைக் கூடம் ஒன்றும், உள்கட்டமைப்பு வசதிகளுடன் நிறுவப்பட்டுள்ளன. தமிழக அரசின் ரூ.1 கோடி நிதித்திட்ட உதவியுடன் புலவளர்ச்சி மையம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. புல வளர்ச்சி மையத்தின் பல்வேறு திட்டங்களால் பல்கலைக்கழகத்தின் 24 முதுகலை மற்றும் 6 இளங்கலை பாடத்திட்டக் குழுக்கள் பயன்பெற்றுள்ளன. பல்கலைக்கழகத்தின் முதுகலை, இளங்கலை பாடத்திட்டங்களைப் புதுப்பிக்க 24 அயல்நாட்டு வல்லுநர்களும், 28 தேசிய அளவிலான வல்லுநர்களும் அழைக்கப்பட்டனர். சமூகவியல் துறையில், 2015–இல் புலம் பெயரியல் ஆய்வு மையம் நிறுவப்பட்டது. பல்கலைக்கழக நிதி நல்கை குழுவின் (University Grants Commission) தொலைதூரக் கல்வி அமைப்பகத்தினால் (Distance Education Bureau) அங்கீகரிக்கப்பட்டுள்ள 48 பாடப்பிரிவுகள் மட்டுமே பல்கலைக்கழகத்தின் தொலைதூர தொடர்கல்வி இயக்ககம் வாயிலாக வழங்கப்படுகிறது. பல்கலைக்கழக நூலகம் 1812 முனைவர் பட்ட ஆய்வேடுகளை இன்ஃப்ளிப்நெட் (INFLIBNET) மையம் மூலம் பதிவேற்றம் செய்துள்ளது. பார்வையற்ற மாணவர்களுக்கு சிறப்பு மென்பொருள் பயன்படுத்தப்படுகிறது. பல்கலைக்கழக வளாகத்தில் பகடி வதையைத் தடுப்பதற்காக பகடிவதைத் தடுப்பு

மையம் வலுவாகச் செயல்பட்டு வருகின்றது. பல்கலைக்கழக முதன்மை வளாகத்தில், பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் கண்காணிப்புக் கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. பல்கலைக்கழகத் தேர்வு பிரிவு விடைத்தாளில் பார்கோடு முறையும், தேர்வுச்சீட்டில் மாணவர்களின் ஒளிப்பட இணைப்பும், தேர்வு முடிவை குறுஞ்செய்தி மூலம் வெளியிடும் வசதியும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

4.7.4 பல்கலைக்கழகத்தின் வெள்ளிவிழா நிகழ்வை முன்னிட்டு பல்கலைக்கழகத்தின் நுழைவுவாயிலில் வெள்ளி விழா அலங்கார வளைவும், வெண்கலத்தால் ஆன சுந்தரனாரின் முழுஉருவச் சிலையும் அமைக்கப்பட்டுள்ளன. பல்கலைக்கழக வளாகத்தில் புதியதாக விளையாட்டு வளாகம் அமைக்க ரூ.1.68 கோடியும், மாணவியர் விடுதி அமைக்க ரூ.1 கோடியும் பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவிடமிருந்து பெறப்பட்டு, கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மனோவாணி பண்பலைக் கட்டிடம் கட்ட ரூ.75 லட்சமும் மற்றும் கடல் சார் அறிவியல் மையத்தில் மாணவியர் விடுதி அமைக்க ரூ.75 லட்சமும் பல்கலைக்கழக நிதி நல்கை குழுவிடமிருந்து பெறப்பட்டுள்ளது. பல்கலைக்கழக வெள்ளிவிழா நிதியிலிருந்து, மாணவர் மனமகிழ் மையம் ரூ.27 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகிறது.

4.7.5 இப்பல்கலைக்கழகத்தில் புவி தொழில் நுட்பவியல் துறையும், இந்திய புவிக்காந்த நிறுவனமும்

இணைந்து புவிக்காந்தம் சார்ந்த ஆராய்ச்சியும் பருவநிலை மாற்றங்கள் குறித்த ஆய்வுகளை மேற்கொள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளன. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் மென்பொருள் அடைகாப்பு மையம் ஒன்றை நிறுவுவதற்கு இந்திய மென்பொருள் தொழில்நுட்ப பூங்காவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. பல்கலைக்கழக உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக ரூபாய் 2.5 கோடியும் பல்கலைக்கழக உறுப்புக்கல்லூரி கட்டிடங்களுக்காக ரூ.75 லட்சமும் RUSA திட்டம் மூலம் பெறப்பட்டுள்ளது.

## 4.8 பெரியார் பல்கலைக்கழகம்

**4.8.1** பெரியார் பல்கலைக்கழகம் தமிழக சட்டப் பேரவையின் சட்டத்தின் மூலம் முறையான மற்றும் முறைசாரா வழிகளில் சமூகத்திற்கு அறிவாற்றலை வழங்கி, தேச கட்டுமானத்திற்கு உதவவேண்டும் என்ற நோக்கத்துடன் துவங்கப்பட்டது. பெரியார் பல்கலைக்கழகம், பல்கலைக்கழக மானியக்குழுவின் பிரிவுகள் 2(F) மற்றும் 12(B)–இன்கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. பெரியார் பல்கலைக்கழகத்தின், ஆளுகையின்கீழ், சேலம், நாமக்கல், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள் உள்ளன. இப்பல்கலைக்கழகத்தின் இணைவு பெற்ற கல்லூரிகளாக 13 அரசு கலைக் கல்லூரிகளும், 4 அரசு உதவி பெறும் கல்லூரிகளும், 5 உறுப்புக் கல்லூரிகளும், 73 சுயநிதிக் கல்லூரிகளும் செயல்பட்டு வருகின்றன. தமிழக அரசின் ஆணையின்படி துவங்கப்பட்ட பெரியார் பல்கலைக்கழக ஐந்து உறுப்பு கல்லூரிகள் மேட்டூர், பென்னாகரம், அரூர், பாப்பிரெட்டிப்பட்டி மற்றும் எடப்பாடி ஆகிய ஊர்களில் இயங்கி வருகின்றன. மேலும், தருமபுரியில் முதுநிலை விரிவாக்க மையம் இயங்கி வருகின்றது. பெரியார் பல்கலைக்கழக வளாகத்தில் 2016–17 ஆம் கல்வியாண்டில் மொத்தம் 26 துறைகள் இயங்கி வருகின்றன. இத்துறைகள் மூலமாக 33 முதுநிலை பாட பிரிவுகளும், 26 ஆராய்ச்சி பாட பிரிவுகளும், 14 சான்றிதழ் பிரிவுகளும், 6 முதுநிலை பட்டய படிப்புகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

### 4.8.2 குறிப்பிடத்தக்க சாதனைகள்

- உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக ரூ.1575 லட்சத்தில் 8540 சதுரமீட்டர் பரப்பளவில் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

- தொழில்சார் பாடவகுப்புகள் B.Voc வழங்கப்பட்டு வருகிறது.

- நான்கு துறைகள் பல்கலைக்கழக மான்யக்குழுவின் சிறப்பு நிதி உதவி பெறும் தகுதியை பெற்றுள்ளன.

- பல அறிவியல் துறைகள் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப துறையின் ஆய்வக அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் திட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளன.

- பல்கலைக்கழக வளாகத்தில் இணைய தள வசதியுடன் கூடிய பொது கணினி மையம் அமைக்கப்பட்டுள்ளது.

- ஒவ்வொரு துறையிலும் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய நவீன வகுப்பறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

- சமூக, பொருளாதார வளர்ச்சித் திட்டம் தருமபுரி மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

- பழங்குடியின மகளிர் தகுதியினை உயர்த்துவதற்கு மகளிர் படிப்பு மையம் மூலம் திட்டங்களை மேற்கொள்ளுதல்.

- குடிமைப்பணி, மாநில தகுதித் தேர்வு மற்றும் தேசிய தகுதித் தேர்வு ஆகியவற்றில் கலந்துகொள்ளும் மாணாக்கர்களுக்கான பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றது.

- பெரியார் பல்கலைக்கழகத்திற்கு தேசிய தர மறுமதிப்பீட்டுக்குழுவால், ‘A’ தர மதிப்பீடு வழங்கப்பட்டுள்ளது.

- மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தால் அமைக்கப்பட்ட என்.ஐ.ஆர்.எப். (NIRF) அமைப்பால் வெளியிடப்பட்டுள்ள பல்கலைக்கழக தரவரிசை பட்டியலில், 722 இந்திய பல்கலைக்கழகங்களில், பெரியார் பல்கலைக்கழகம் 47–வது இடத்தையும், தமிழகத்திலுள்ள 52 பல்கலைக்கழகங்களில் 7–வது இடத்தையும், தமிழகத்தில் உள்ள கலை மற்றும் அறிவியல் பல்கலைக்கழகங்களில் 2–வது இடத்தையும் பெற்றுள்ளது.

## 4.9 திருவள்ளுவர் பல்கலைக்கழகம்

**4.9.1.** உலகின் பல்வேறு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட உலகப்பொதுமறையாம் திருக்குறளை உலகிற்கு ஈந்த தெய்வப்புலவர் திருவள்ளுவரின் பெயரால் திருவள்ளுவர் பல்கலைக்கழகம் அக்டோபர், 2002ஆம் ஆண்டு வேலூரில் துவங்கப்பட்டது. தற்பொழுது இப்பல்கலைக்கழகத்தின் ஆளுகைக்கு உட்பட்ட கடலூர், திருவண்ணாமலை, விழுப்புரம் மற்றும் வேலூர் ஆகிய நான்கு மாவட்டங்களில் உள்ள இளநிலை, முதுநிலை பாடப்பிரிவுகளை நடத்தும் கல்லூரிகளை இணைவுக் கல்லூரிகளாக கொண்டு சிறப்புடன் செயல்பட்டு வருகின்றது.

**4.9.2** தமிழக அரசு வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், சேர்க்காடு மற்றும் விண்ணம்பள்ளி கிராமங்களில் உள்ள 112.68 ஏக்கர் நிலத்தை திருவள்ளுவர் பல்கலைக்கழகத்திற்கு நிலமாற்றம் செய்துள்ளது. நிர்வாக வளாகம், கல்வி வளாகம், நூலக வளாகம் மற்றும் கணினி வளாகம் ஆகிய புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு, ரூபாய் 16.70 கோடி திருவள்ளுவர் பல்கலைக்கழகத்திற்கு தமிழக அரசு வழங்கியுள்ளது.

**பல்கலைக்கழகத்தின் இணைவுக் கல்லூரிகள் :**

| | |
|---|---|
| அரசு கல்லூரிகள் | **10** |
| அரசு உதவி பெறும் கல்லூரிகள் | **9** |
| பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் | **6** |
| சுயநிதிக் கல்லூரிகள் | **86** |
| கீழ்திசைக் கல்லூரிகள் | **2** |
| ஆராய்ச்சி மையம் (CMC & RUSA) | **2** |
| முதுநிலை விரிவாக்க மையம் | **1** |
| முதுநிலை மேலாண்மையியல் தனிமை நிறுவனம் | **1** |

திருவள்ளுவர் பல்கலைக்கழகம், **28** மகளிர் கல்லூரிகள், **86** இருபாலர் கல்லூரிகள் மற்றும் **3** ஆடவர் கல்லூரிகளை கொண்டுள்ளது.

**பல்கலைக்கழக இணைவு கல்லூரிகளின் மாணவர்களின் எண்ணிக்கை:**

| ஆண்டு | இளநிலை | முதுநிலை | ஆய்வியல் நிறைஞர் | ஆராய்ச்சி மாணவர்கள் |
|---|---|---|---|---|
| முதலாம் ஆண்டு | 51713 | 8092 | 1651 | 173 |
| இராண்டாம் ஆண்டு | 33843 | 5206 | ... | ... |
| மூன்றாம் ஆண்டு | 30335 | ... | ... | ... |
| மொத்தம் | 115891 | 13298 | 1651 | 173 |

**4.9.3** திருவள்ளுவர் பல்கலைக்கழகம் விலங்கியல், பொருளியல், வேதியியல், தமிழ், ஆங்கிலம், கணிதம் மற்றும் உயி நுட்பவியல் ஆகிய ஏழு துறைகளுடன் செயல்பட்டு வருகிறது.

### 4.9.4. பல்கலைக்கழகத்தின் முக்கிய சாதனைகள் :

பல்கலைக்கழகத் தேர்வு முறை முழுவதுமாக கணினி மயமாக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக, மாணவர்கள் விவரங்கள் பதிவு செய்தல், இறுதிப் பருவ தேர்வுக்கான தேர்வு விண்ணப்பம், அகமதிப்பீடு மதிப்பெண்கள் மற்றும் தேர்வு நுழைவுச் சீட்டு ஆகியவை கணினி மயமாக்கப்பட்டது. அச்சிட்ட விடைத்தாள்களில், மாணவர்களின் பெயர்களோ, பதிவு எண்களோ இடம் பெறாது. விடைத்தாள் மதிப்பீடு மற்றும் தேர்வு முடிவு வெளியீடுகள் முதலியன முழுவதுமாக கணினி மயமாக்கப்பட்டுள்ளது. விடைத்தாள்களில் கணினி குறியீடுகள் (Bar-Coding) இடம் பெற்றிருக்கும். மதிப்பெண்கள் கணினி மூலமாக உடனடியாக ஸ்கேன் செய்யப்படும். தேர்வு முடிவுகள் அந்தந்த கல்லூரிகளுக்கு மின்னஞ்சல் வழியே அனுப்பப்படும். எனவே, தேவையற்ற காகித உபயோகத்தை குறைப்பதன் மூலமாக பசுமை மேலாண்மை முறை முழுமையாக ஏற்படுத்தப்பட்டு சுற்றுச்சூழல் நட்புகை (Eco Friendly Administration) நடைமுறைப்படுத்தப்பட்டு, சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இந்தமுறை திருவள்ளுவர் பல்கலைக் கழகத்தில் மட்டுமே நடைமுறைப்படுத்தப்படுகிறது. இணைவு பெற்ற கல்லூரிகளிலிருந்து பல்கலைக்கழகத்துக்கு செலுத்தப்படும் கட்டணங்கள் மின்னணுசார் மாற்ற முறை அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளதால், அக்கட்டணங்கள் அனைத்தும் எளிய முறையிலும், சரியான நேரத்திலும் முதலீடு செய்யப்படுகிறது.

## 4.10 தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்

**4.10.1** தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் 2002ஆம் ஆண்டு தமிழக அரசால் தோற்றுவிக்கப்பட்டது. தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் இந்திய அளவில் பத்தாவது திறந்தநிலைப் பல்கலைக்கழகமாகும். “எல்லோருக்கும் எப்போதும் எங்கேயும் கல்வி” என்னும் தாரக மந்திரத்தை முதன்மை நோக்கமாகக் கொண்டு இப்பல்கலைக்கழகம் செயல்படுகிறது. உயர்கல்வி வாய்ப்புகள் கிடைக்கப்பெறாத சமூகத்தின் அனைத்து தரப்பினருக்கும் திறந்தநிலை மற்றும் தொலைநிலைக் கல்வி முறையில் தரமான உயர்கல்வியை வழங்குவதே முதன்மை இலக்காகும்.

**4.10.2** தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் கடந்த 14 ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் கண்டுள்ளது. 5,29,263 மாணவர்களுடன் பல்வேறு பாடப்பிரிவுகள் மற்றும் பலதரப்பட்ட திறன் நிலைகளில் 113 பாடத்திட்டங்களில் சான்றிதழ் முதல் முதுநிலை கல்வி வரை பல்கலைக்கழகத்தின் 13 புலங்கள், 1 மின்னணு ஊடக மையம், 5 மண்டல மையங்கள், 607 மாணவர் உதவி மற்றும் சேவை மையங்கள் மூலம் சீரிய கல்விப்பணியாற்றி வருகிறது.

**4.10.3** தொலைநிலைக் கல்வி முறையில் முதன்முதலில் கடந்த 2003ஆம் ஆண்டிலேயே கற்றல் அளவெண் அடிப்படையிலான பாடத்திட்டங்கள், தானே

கற்றல் பொருட்களை அச்சில் உருவாக்கி மாநிலத்தில் அறிமுகப்படுத்திய முதல் பல்கலைக்கழகம் தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழகமாகும். ஆண்டு முழுவதும் மாணவர் சேர்க்கை, வார இறுதி நாட்களில் கலந்தாய்வு வகுப்புகள், தொடர் மதிப்பீட்டுப் பணிகள், ஆண்டு இறுதித் தேர்வு என்கிற கொள்கையின்படி படிப்புகளை வழங்கி வருகிறது. நவீன தகவல் தொடர்புத் தொழில்நுட்பங்களின்வழி தரமான உயர்கல்வியை வழங்கும் பொருட்டு, மாணவர் சேர்க்கை, தேர்வுகள், பாடநூல் விநியோகம், மாணவர்களுக்கான கலந்தாய்வு வகுப்புகள் என அனைத்து செயல்பாடுகளும் மின்னணு மயமாக்கப்பட்டுள்ளன. இதுவரை இப்பல்கலைக்கழகத்தில் 1,71,430 மாணவர்கள் படித்துப் பட்டம் பெற்றுள்ளார்கள். தற்போது அனுமதிக்கப்பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 29,351. ஒப்பளிக்கப்பட்ட 65 ஆசிரியர்கள் மற்றும் 77 ஆசிரியர் அல்லாத பணியாளர்களைக் கொண்டு மாணவர்களின் கற்றல் தேவைகளை நிறைவேற்றி வருகிறது.

**4.10.4** இந்தியாவில் உள்ள 15 திறந்தநிலைப் பல்கலைக்கழகங்களுள், பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவின் 12பி தகுதிநிலை பெற்றுள்ள ஐந்து பல்கலைக்கழகங்களுள் தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகமும் ஒன்றாகும். மேலும் தொலைநிலைக் கல்வி முறையில் அனைத்து படிப்புகளை வழங்குவதற்கான பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் அங்கீகாரம் பெற்ற

வெகுச் சில பல்கலைக்கழகங்களுள் தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகமும் ஒன்று.

### 4.10.5 தனித் தன்மையான சாதனைகள் :

- தேசியத் திறன் மேம்பாட்டு கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப் பட்டுள்ளதால் தேசிய தொழிற்கல்வி தகுதி இணையத்துடன் அனைத்து தொழிற்கல்வி பாடத்திட்டங்களையும் இணைத்துக் கொண்டுள்ள ஒரே பல்கலைக்கழகம் தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் ஆகும்.

- மாநிலத்தில் தொலைநிலை கல்வி முறையில் காது கேளாதோர், மனநலம் குன்றியோர், பார்வையற்றோர் ஆகிய பிரிவுகளில் **3** இளநிலைச் சிறப்புக் கல்வியியல் பட்டப்படிப்புகளை வழங்கும் ஒரே பல்கலைக்கழகம் தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் ஆகும்.

- கற்றலுக்கான பொதுநலமையம் (Common Wealth of Learning), ஆசிய திறந்தநிலைப் பல்கலைக்கழகக் கூட்டமைப்பு (AAOU) பன்னாட்டு தொலைநிலை மற்றும் திறந்தநிலைக் கற்றல் மன்றம் (ICDE) ஆகிய பன்னாட்டு அமைப்புகளோடு கல்வி சார் இணைப்பினை கொண்டுள்ளது.

- தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்துடன் செய்து கொண்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் வேளாண் அறிவியல் மையங்கள் (KVK) மூலம் **2016–17**ஆம் ஆண்டில் **4,000** வேலையில்லா இளைஞர்களை உள்ளடக்கும் நோக்கத்துடன் தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் வேளாண்மை தொடர்பான **16** படிப்புகளை தொலைநிலை கல்வி முறையில் தொடங்கியுள்ளது.

- தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகத்தில் தொழிற்கல்வி பயின்ற **5000**க்கு மேற்பட்ட மாணவர்கள் **600** தொழிற்சாலைகளில் பயனுள்ள வேலை வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

- மாற்றுத்திறனுடைய பெண்களுக்கான உரிமைகள் அமைப்பு (Society for Rights of all Women with Disabilities) சிறந்த மாற்றுத் திறன் பெண்ணுக்கான சாதனையாளருக்கு வழங்கும் 'மலாலா விருது–**2014**'–ஐ தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தில் சிறப்புக் கல்வியியல் பட்டப்படிப்பு பயின்ற மாற்றுத் திறனாளி மாணவியான செல்வி இந்திராவுக்கு வழங்கியுள்ளது.

**4.10.6 2016–17** ஆம் கல்வியாண்டில் தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் பின்வரும் புதிய படிப்புகளை அறிமுகப்படுத்துகிறது.

**பட்டயப் படிப்புகள்:**

1. தரவு அறிவியல் மற்றும் பெருந்தரவு பகுப்பாய்வு
2. மேகக் கணினி
3. திரைப்பட நடிப்பு
4. நாடகம் மற்றும் அரங்க நடிப்பு
5. தொலைக்காட்சி நடிப்பு
6. வனவியல் சுற்றுலா

**தொழிற் கல்வி பட்டயப் படிப்புகள்:**

1. தரவு உள்ளிடுபவர்
2. கணினிப் பயன்பாடு
3. கணினி வன்பொருள் பழுதுபார்த்தல்
4. வேளாண் பொருட்கள் சந்தைப்படுத்துதல் மற்றும் மேலாண்மை
5. உயிர் உரம் மற்றும் உயிரொடுக்கிகள் தயாரிப்புத் தொழில்நுட்பம்
6. வணிகப் பயன்பாட்டுப் பூ வளர்த்தல்
7. ஒருங்கிணைந்த பண்ணையம்
8. காளான் வளர்ப்பு
9. நாற்றங்கால் தொழில்நுட்பம்
10. உயிர் உரம்
11. சமையற்கட்டு மற்றும் மாடித்தோட்ட மேலாண்மை
12. மருத்துவம் மற்றும் வாசனை திரவிய தாவரங்கள் வளர்த்தல் தொழில்நுட்பம்

13. வேளாண் விளைபொருள் விதை உற்பத்தி மற்றும் வழங்கல் மேலாண்மை
14. உலோகம் பற்ற வைத்தல் தொழில்நுட்பம்
15. தொழிலக பொருத்துநர்
16. வடிவமைப்புச் சிந்தனை

**முதுகலைப் படிப்புகள்:**

1. எம்.ஏ. (மொழியியல்)
2. எம். ஏ. (மொழிபெயர்ப்பியல்)

## 4.11 தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்

**4.11.1** ஆசிரியர் கல்விக்காக இந்திய நாட்டிலேயே முதன்முதலாகத் தோற்றுவிக்கப்பட்ட தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகமானது ஆசிரியர் கல்வியின் தரத்தினை மேம்படுத்துவதற்காக தோற்றுவிக்கப்பட்டது. தற்போதைய அதிவேக பொருளாதார வளர்ச்சி, சர்வதேச போட்டி மற்றும் உயர்ந்துவரும் இளைஞர்களின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப இப்பல்கலைக்கழகம் தனித்தன்மை வாய்ந்த ஆசிரியர்களை உருவாக்கி வருகிறது. இப்பல்கலைக்கழகம் அதன் அதிகார எல்லையின் கீழ் 724 கல்வியியல் கல்லூரிகளை கீழ்க்கண்டவாறு பெற்றுள்ளது.

| | |
|---|---|
| அரசு கல்வியியல் கல்லூரிகள் | 7 |
| அரசு உதவி பெறும் கல்வியியல் கல்லூரிகள் | 14 |
| சுயநிதி கல்வியியல் கல்லூரிகள் | 703 |
| மொத்த கல்வியியல் கல்லூரிகள் | 724 |

**4.11.2** தேசிய ஆசிரியர் கல்விக்குழுமம் மற்றும் தமிழக அரசின் வழிகாட்டு நெறிமுறைகளுக்கேற்ப கல்வியியல் கல்லூரிகளைத் தோற்றுவித்தல் மற்றும் அதன் செயல்பாடுகளை கண்காணித்தல் இப்பல்கலைக் கழகத்தின் நோக்கமாகும். நோக்கங்கள், உயர்தரமான கல்வி வழங்குதல், தேசிய ஆசிரியர் கல்விக்குழுமத்தால் அங்கீகாரம் வழங்கப்பட்ட மாநிலத்திலுள்ள கல்வியியல் கல்லூரிகளை அனைத்து நிலைகளிலும் கண்காணித்து

வருதல், ஆசிரியர் கல்வியியல் ஆராய்ச்சிக்கான வசதிகளை மேம்படுத்துதல், ஆசிரியர் கல்வியியலில் புதுமையான பாடப்பிரிவுகளை கண்டறிதல் மற்றும் வடிவமைத்தல், புதிய துறைகளில் பாடப்பிரிவுகளை வழங்குதல் மற்றும் விரிவுப் பணிகளை மேம்படுத்த வேண்டும் என்ற நோக்கில் ஆசிரியர் கல்வியினை மேம்படுத்துவதற்குக் கருத்தரங்குகள், பட்டறைகள் மற்றும் விவாத அரங்கம் ஆகியவைகளை நடத்துதல் ஆகியவற்றையும் உள்ளடக்கும்.

### 4.11.3 கடந்த 5 ஆண்டுகளில் முக்கிய சாதனைகள்

- இப்பல்கலைக்கழகத்தில் பத்து கல்விப்புலம் மற்றும் ஆராய்ச்சி துறைகளை நிறுவுவதற்கும், அத்துறைகளில் ஒவ்வொரு துறைக்கும் ஒரு பேராசிரியர், இரண்டு இணைப் பேராசிரியர்கள் மற்றும் நான்கு உதவிப் பேராசிரியர்கள் நியமனம் செய்வதற்கும் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. தற்போது கீழ்க்கண்ட ஆறு துறைகள் பின்வரும் ஆசிரியர்களை கொண்டு செயல்பட்டு வருகிறது.

கல்வி முறைமையியல்
மதிப்புணர்வுக் கல்வி
கல்வி உளவியல்
கல்வி தொழில்நுட்பவியல்
கலைத் திட்டமிடல் மற்றும் மதிப்பீடு
கல்வி திட்டமிடல் மற்றும் நிர்வாகம்

- கடந்த ஐந்து ஆண்டு காலத்தில் இப்பல்கலைக்கழகம் இரண்டு பன்னாட்டு மாநாடுகளை நடத்தியுள்ளது.

- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இப்பல்கலைக்கழகத்திற்குக் காரப்பாக்கம் கிராமம், சோழிங்கநல்லூர் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டத்தில் 10 ஏக்கர் நிலத்தினை ஒதுக்கீடு செய்து அந்நிலத்தில் பல்வேறு பல்கலைக்கழகக் கட்டடங்களைக் கட்டுவதற்கு அனுமதி வழங்கியுள்ளார். இப்பல்கலைக்கழக கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. காரப்பாக்கம் கிராமத்தில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள பல்கலைக்கழகக் கட்டடங்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 2016 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் திறந்து வைக்கப்பட்டு தற்சமயம் இப்பல்கலைக்கழகம் புதிய வளாகத்தில் இயங்கிவருகிறது.

- இப்பல்கலைக்கழகத்தில் D.Litt படிப்பு தொடங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

- பல்கலைக்கழக நிதியிலிருந்து ஆராய்ச்சி மாணவர்களுக்கு படிப்புதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

- இளநிலை கல்வியியல் / முதுநிலை கல்வியியல்/ கல்வியியல் நிறைஞர் ஆகியவற்றுக்கான

பாடத்திட்டக் குழுக்கள் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

- தேசிய ஆசிரியர் கல்விக்குழுமத்தின் **2014–**ஆம் ஆண்டைய புதிய வழிகாட்டு நெறிமுறைகளின்படி, இரண்டு வருட இளநிலை கல்வியியல்/ முதுநிலை கல்வியியல் பட்டப்படிப்புகளுக்கான பாடத்திட்டம் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள் வடிவமைக்கப்பட்டன.

- பி.எச்டி பட்டப்படிப்பிற்கான வழிகாட்டு நெறிமுறைகள் திருத்தியமைக்கப்பட்டன.

- "Educational Innovations and Practices" என்ற பன்னாட்டு நாளிதழை இணையதளத்தில் வெளியிடுவதற்கு **18.02.2015** நாளிட்ட ஆட்சிமன்ற குழு கூட்டத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டது.

- தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் "National Testing Service – India மற்றும் மைசூரிலுள்ள இந்திய மொழிகளுக்கான மத்திய நிறுவனம் ஆகியவை இணைந்து "Test Designing & Item Writing" என்ற தலைப்பில் பயிற்சி பட்டறை பிப்ரவரி, **2015–**இல் நடத்தப்பட்டது.

- தேசிய ஆசிரியர் கல்விக்குழுமம் மற்றும் தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் இணைந்து **08.02.2015** மற்றும் **09.02.2015** ஆகிய தேதிகளில்

"Curriculum Framework" என்ற தலைப்பில் வட்டமேசை மாநாடு மற்றும் பயிற்சிப் பட்டறையினை நடத்தியுள்ளது.

- "Knowledge Exchange Path Collaboration among Universities, Industries, Educational Institutions and Society: Bridging the Outcome-Impact Gap" என்ற தலைப்பில் பன்னாட்டு மாநாடு **2015–**ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இப்பல்கலைக்கழகத்தால் நடத்தப்பட்டது.

- மதிப்புணர்வு கல்வி மற்றும் ஆன்மீகம் ஆகியவற்றில் பட்டய மேற்படிப்பு (PG Diploma) அறிமுகப்படுத்துவதற்கு **19.06.2015** நாளிட்ட கல்விக்குழு மற்றும் **22.07.2015** நாளிட்ட ஆட்சிக்குழு கூட்டங்களில் ஒப்புதல் வழங்கப்பட்டது.

- இப்பல்கலைக்கழகம் புதிய **33** பி.எட், **4** எம்.எட் மற்றும் **5** எம்ஃபில் கல்வியியல் கல்லூரிகளுக்கு இணைவு வழங்கியுள்ளது.

## 2015–16–ம் கல்வியாண்டில் மாணவர் சேர்க்கை விவரம்

| இணைப்பு கல்வியியல் கல்லூரிகள் | | | | பல்கலைக்கழக துறைகள் |
|---|---|---|---|---|
| பி.எட் | எம்.எட் | எம்ஃபில் | பி.எச்டி | பி.எச்டி |
| 52376 | 4346 | 180 | 16 | 29 |

## 4.12 அண்ணாமலை பல்கலைக்கழகம்

**4.12.1** தெற்கு ஆசியாவில் மிகப்பெரிய ஒருமை, கற்றல் உறைவிடப் பல்கலைக்கழகங்களில் ஒன்றான அண்ணாமலைப் பல்கலைக்கழகம் கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் **1929** ஆம் ஆண்டு துவங்கப்பட்டதிலிருந்து, இந்தியா மற்றும் அயல்நாட்டினை சேர்ந்த பல்லாயிரக்கணக்கான மாணவர்களுக்கு அனைத்து துறைகளிலும் கல்வியளித்து உயரிய சேவையினை செய்து வருகிறது. அண்ணாமலைப் பல்கலைக்கழகச் சட்டம், **1929** ரத்துசெய்யப்பட்டு, இந்திய குடியரசுத் தலைவர் அவர்களின் ஒப்புதலுடன், அண்ணாமலைப் பல்கலைக்கழக சட்டம், **2013** இவ்வரசால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அதன் பின்னர், மாணவர், ஆசிரியர் மற்றும் ஊழியர்கள் நலனை கருத்தில் கொண்டு, சீரிய நிர்வாகச் சீர்திருத்தங்களை மேற்கொள்ளும் முகமாகவும், பல்கலைக்கழகம் தோற்றுவிக்கப்பட்டதன் நோக்கம் நிறைவேறுகின்ற வகையிலும், பல்வேறு முக்கிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதன் காரணமாக, **2014**ஆம் ஆண்டு தேசிய தர நிர்ணயக் குழுவால் தணிக்கை செய்யப்பட்டு, இப்பல்கலைக் கழகத்திற்கு தரமதிப்பீடு வழங்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழகத்தின் நிதிச்சிக்கலைக் கருத்தில் கொண்டு, தமிழக அரசு **2013**ஆம் ஆண்டு முதல் ரூ.**600.87** கோடியை பல்கலைக்கழகத்திற்கு வழங்கியுள்ளது. **2014–15** ஆம் ஆண்டு, முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்கள் **1942** பேருக்கு கல்விக்கட்டணமாக

ரூ.3.45 கோடியை அரசு வழங்கியுள்ளது. 2015–16 ஆம் ஆண்டில் 2,875 முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்களுக்காக ரூ.5.56 கோடியை கல்விக் கட்டணமாக அரசு வழங்கியுள்ளது.

4.12.2 கடந்த 87 ஆண்டுகளில், உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சியில் இப்பல்கலைக்கழகம் முதன்மை பெற்ற நிறுவனமாக உயர்ந்துள்ளது. 800 ஏக்கருக்கும் மேற்பட்ட பரந்து விரிந்த வளாகத்தில் இப்பல்கலைக்கழகம் தற்போது இயங்கி வருகிறது. இதில் 49 துறைகள் அடங்கிய 10 புலங்கள் உள்ளன.

4.12.3 இராஜா முத்தையா மருத்துவக்கல்லூரி, இராஜாமுத்தையா பல் மருத்துவக்கல்லூரி மற்றும் இராணிமெய்யம்மை செவிலியர் கல்லூரி ஆகியவற்றை உள்ளடக்கிய இராஜாமுத்தையா மருத்துவ சேவை அறிவியல் நிறுவனம் பல்வேறு இளங்கலை மற்றும் முதுகலை படிப்புகளை வழங்கி வருகிறது. இவற்றுடன் 1260 படுக்கை வசதி கொண்ட நவீன மருத்துவமனையின் மூலம் ஊரக பகுதி மக்களுக்கு மருத்துவ சேவை செய்து வருகிறது. முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் 2012 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு, இதுவரை 4,218 நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கப்பட்டு, ரூ.3,26,04,461/– என்ற அளவில் பல்கலைக்கழகம் பயனடைந்துள்ளது. தமிழக அரசு செயல்படுத்திவரும் டாக்டர் முத்துலட்சுமிரெட்டி மகப்பேறு நிதி திட்டம் 2016 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்டு, ஒரு

நபருக்கு ரூ.12,000/– வீதம் மொத்தம் ரூ.1,41,36,000/–என்ற அளவில், 1,178 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

4.12.4 கலை, அறிவியல், கடல் அறிவியல், இந்திய மொழியியல், கல்வியியல், பொறியியல் மற்றும் தொழில்நுட்பம், வேளாண்மை, நுண்கலை, மருத்துவம், பல் மருத்துவம் எனும் பத்து புலன்கள் வாயிலாக, நேரடி கல்வி முறையில், இப்பல்கலைக்கழகத்தில் மொத்தம் 26,417 மாணவர்கள் (15,453 மாணவர்கள் மற்றும் 10,964 மாணவிகள்) பயின்று வருகின்றனர். அவர்களில் 10000க்கு மேற்பட்ட மாணவர்கள் நமது நாட்டிலேயே பெரியது என்று அழைக்கப்படும் 19 விடுதிகளில் தங்கி உள்ளனர். 27 வெளிநாடுகளைச் சேர்ந்த 443 மாணவர்கள் இப்பல்கலைக்கழகத்தில் பயின்று வருகின்றனர்.

4.12.5 1979 ஆம் ஆண்டு துவக்கப்பட்ட தொலைதூரக் கல்வி இயக்ககம், பல்வேறு படிப்புகளை வழங்குகிறது. 2015–16 ஆம் ஆண்டு தொலைதூரக் கல்வி இயக்ககத்தின் மூலம் பயின்ற மொத்த மாணவர்கள் 2,39,300 ஆகும்.

### 4.12.6 2015–16ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் / செயல்பாடுகள்

2015–16 ஆம் ஆண்டில் பல்கலைக்கழக மானியக்குழுவின் SAP, DST மற்றும் FIST தகுதி நிலையை மருந்தியல், உற்பத்திப் பொறியியல், உயிர்வேதியியல், சமூகவியல், கடல்வாழ் உயிரியல்,

கல்வியியல் மற்றும் மின்சார பொறியியல் துறைகள் பெற்று, ரூ.9.24 கோடி துறைகளின் வளர்ச்சிக்காகப் பெறப்பட்டுள்ளது.

டாக்டர் அம்பேத்கர் நிறுவனத்தின் மூலம் ரூ.35 இலட்சம் மதிப்பிலான டாக்டர் அம்பேத்கர் இருக்கை (சமூக நீதி மற்றும் உரிமையியல் அமைச்சகம்) இப்பல்கலைக்கழகத்தில் நிறுவப்பட்டு மனித உரிமை மற்றும் வெளிநாடு வாழ் இந்தியர்கள் பற்றிய ஆய்வினை மேற்கொண்டுள்ளது.

பல்கலைக்கழகத்தின் அனைத்துக் கல்வி பாடத்திட்டங்களுக்கான சேர்க்கை, கட்டணம் செலுத்துதல், அனுமதி சீட்டு வழங்குதல் ஆகியவை அனைத்தும் இணையவழியாக அறிமுகப்படுத்தப்பட்டது.

2016–17 ஆம் ஆண்டில் திட்டத்தின்கீழ், உட்கட்டமைப்புகள் மேம்படுத்துவதற்கு ரூ.20 கோடி ஒப்புதல் அளிக்கப்பட்டு, இந்த மான்யத்தொகையில் ரூ.10 கோடி வழங்கப்பட்டுள்ளது.

2015–16 ஆம் ஆண்டில் ஆய்வு மற்றும் ஆலோசனைத் திட்டங்கள் மற்றும் தேசிய, பன்னாட்டுக் கருத்தரங்குகள், பயிற்சிப் பட்டறைகள் நடத்துவதற்காக பல்வேறு நிதி நல்கைக் குழுக்களின் மூலம் ரூ.14.63 கோடி பெறப்பட்டது.

## 4.13 அண்ணா பல்கலைக்கழகம்

**4.13.1** அண்ணா பல்கலைக்கழகமானது, சென்னை மாநகரில் உள்ள கிண்டி பொறியியல் கல்லூரி (1794), அழகப்பா தொழில்நுட்பக் கல்லூரி (1944), சென்னை தொழில்நுட்ப நிறுவனம் (1949), கட்டிடக்கலை மற்றும் திட்டமிடுதல் (1957) ஆகிய நான்கு பிரபலமான தொழில்நுட்ப கல்வி நிறுவனங்களையும் ஒருங்கிணைத்து, 1978ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 4 ஆம் நாள், ஒருமை வகை பல்கலைக்கழகமாக உருவாக்கப்பட்டது. 2001ஆம் ஆண்டில், தமிழ்நாடு மாநிலத்திலுள்ள அனைத்துப் பொறியியல் கல்லூரிகளும் அண்ணா பல்கலைக் கழகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டு, அப்பல்கலைக்கழகம் இணைவு வகை பல்கலைக்கழகமாக மாற்றப்பட்டது. மீண்டும் 2010ஆம் ஆண்டு ஒருமை வகை பல்கலைக்கழகமாக மாற்றப்பட்டது. பின்னர் 2012 ஆம் ஆண்டில், மாண்புமிகு முதலமைச்சரின் தொலை நோக்கு பார்வையின்படி, தமிழ்நாட்டில் ஒரே சீரான தரமிக்க பொறியியல் கல்வியை உறுதி செய்திட அனைத்து பொறியியல் கல்லூரிகளையும் ஒரே குடையின் கீழ் கொண்டு வந்து, அண்ணா பல்கலைக்கழகம் மீண்டும் இணைவு வகை பல்கலைக்கழகமாக மாற்றப்பட்டது.

**4.13.2** மேற்குறிப்பிட்ட 4 வளாகங்களுடன், தற்போது அண்ணா பல்கலைக்கழகம் 13 உறுப்புக் கல்லூரிகள், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, மதுரை மற்றும்

கோயம்புத்தூர் ஆகிய 4 மண்டல வளாகங்கள் மற்றும் 614 (மத்திய அரசு கல்வி நிறுவனங்கள், மேலாண்மை கல்லூரிகள், கணினி அறிவியல் கல்லூரிகள்) இணைவுக் கல்லூரிகள் ஆகியவற்றை தன்னகத்தே கொண்டுள்ளது. அண்ணா பல்கலைக்கழகம் 20,000 மாணவ / மாணவியர்களை கொண்டுள்ளதுடன், 29 இளநிலை பட்டப்படிப்புகளையும், 79 முதுநிலை பட்டப் படிப்புகளையும், வழங்கி வருகிறது. மேலும், அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றுள்ள கல்லூரிகளில் 8.5 லட்சம் மாணவ / மாணவியர் சேர்க்கையுடன் 41 இளநிலை மற்றும் 57 முதுநிலை பட்டப்படிப்புகள் வழங்கப்பட்டு வருகிறது. அண்ணா பல்கலைக்கழகம் 12804 முனைவர் படிப்பு நிறைஞர்களை கொண்டுள்ளதற்கு பெருமை கொள்கிறது. மொத்த மாணவர் சேர்க்கையில், 38 விழுக்காடு மாணவிகள் ஆகும்.

4.13.3 2014–ஆம் ஆண்டிலிருந்து ஐந்து ஆண்டுகளுக்கு செல்லத்தக்க CGPA 4 புள்ளி அளவில் 3.46 புள்ளிகளுடன் A தரத்தினை தேசிய தர மதிப்பீட்டு குழு (NAAC) அண்ணா பல்கலைக்கழகத்திற்கு மீண்டும் வழங்கியுள்ளது. QS-யின் (Quacquarelli Symonds) உலகப் பல்கலைக்கழக வரிசையின்படி, பொறியியல் மற்றும் தொழில்நுட்பத்தில் 2015 ஆம் ஆண்டில், அண்ணா பல்கலைக்கழகம் 293–ஆம் இடத்தையும், தேசிய அளவில் 10 இடங்களுக்குள்ளும் இடம் பெற்றிருக்கிறது. அண்ணா பல்கலைக்கழக ஆசிரியர்கள் மற்றும் ஆராய்ச்சி

மாணவர்கள் வெளியிட்டுள்ள ஆராய்ச்சி கட்டுரைகளின் அடிப்படையில், இந்தியாவில் அண்ணா பல்கலைக் கழகம் ‘h’ குறியீட்டில் **2–**ஆம் இடம் பெற்றுள்ளது. இயந்திரவியல், வானூர்தி பொறியியல் மற்றும் உற்பத்திப் பொறியியல் பாடப்பிரிவுகளில் அண்ணா பல்கலைக்கழகம் உலகளாவிய அளவில் **151–**ல் இருந்து **200–**வது இடத்திற்குள்ளும், தேசிய அளவில் **7–**வது இடத்திலும் இடம் பெற்றுள்ளது.

### 4.13.4 கடந்த 5 ஆண்டுகளில் அண்ணா பல்கலைக்கழகத்தின் முக்கிய சாதனைகள்

- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குப் பார்வைக்கேற்ப அண்ணா பல்கலைக்கழகம் அதன் துறைகளில் வழங்கப்படும் பாடப்பிரிவுகளுக்கான பாடத்தொகுதி மற்றும் பாடத்திட்டங்களை **2015–16** ஆம் ஆண்டு முதல், விருப்பத்தின் அடிப்படையில் பாடத்தினை தெரிவு செய்யும் முறையில் (CBCS) மாற்றியமைத்துள்ளது. இணைவு பெற்ற பொறியியல் கல்லூரிகளுக்கான பாடத்தொகுதிகள் மற்றும் பாடத்திட்டங்கள் **2013 – 14** ஆம் ஆண்டில் மாற்றியமைக்கப்பட்டது.

- ஒவ்வொரு ஆண்டும், அண்ணா பல்கலைக்கழகமானது, இளநிலை மற்றும் முதுநிலை மாணவர் பொறியியல் சேர்க்கையினை ஒற்றைச் சாளர கலந்தாய்வின் அடிப்படையில் சிறப்பாக நடத்தி வருகிறது.

- **2016** ஆம் ஆண்டு நடைபெற்ற **36** வது பட்டமளிப்பு விழாவில், **1226** ஆராய்ச்சி மாணவர்கள் தங்கள் முனைவர் பட்டத்தினை பெற்றனர்.

- வெளிநாட்டு பல்கலைக்கழகங்குலூ / நிறுவனங்களுடன் **41** புரிந்துணர்வு ஒப்பந்தங்களிலும் மற்றும் தேசிய அளவில் உள்ள நிறுவனங்கள் / தொழிற்கூடங்களுடன் **26** புரிந்துணர்வு ஒப்பந்தங்களிலும் அண்ணா பல்கலைக்கழகம் கையெழுத்திட்டுள்ளது.

- அண்ணா பல்கலைக்கழக ஆசிரியர்கள், ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப மேம்பாட்டின் மூலமாக கீழ்க்கண்டவற்றில் குறிப்பிடத்தக்க பங்காற்றியுள்ளனர்:–

  - ரூ.**84.41** கோடி நிதி உதவியில் **277** ஆராய்ச்சி திட்டப்பணிகள்

  - ரூ.**104.4** கோடி மதிப்பில் **4074** ஆலோசனை சேவைகள்

  - ரூ.**7406** பரிசோதனை பணிகள் மூலம் ரூ.**2.77** கோடி வருமானம்

- **2011** ஆம் ஆண்டிலிருந்து **2016** ஆம் ஆண்டு வரையில், அண்ணா பல்கலைக்கழகத்தால் **5536** ஆராய்ச்சி கட்டுரைகள் சர்வதேச

ஆய்விதழ்களிலும், **398** ஆய்வுக் கட்டுரைகள் தேசிய ஆய்விதழ்களிலும் வெளியிடப்பட்டுள்ளன. மேலும், **206** புத்தகங்களும் வெளியிடப்பட்டுள்ளன.

- அண்ணா பல்கலைக்கழகம், **344** கண்டுபிடிப்புகளுக்கு காப்புரிமை பெறுவதற்காக மனு தாக்கல் செய்துள்ளது. அவற்றில் இதுவரையில் பெறப்பட்ட **16** காப்புரிமைகளில், **4** தேசிய அளவிலும், **12** சர்வதேச அளவிலும் பெறப்பட்டவையாகும்.

மத்திய அரசின் நிதிநல்கை நிறுவனங்களிடமிருந்து அண்ணா பல்கலைக்கழகம் பெற்ற மானியங்கள் விவரம்:—

| **துறைகள்** | **பெறப்பட்ட நிதி (ரூபாய் கோடியில்)** |
|---|---|
| அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை, மனிதவள மேம்பாட்டு அமைச்சகம், உயிரி தொழில்நுட்ப தொழிலக ஆராய்ச்சி மற்றும் உதவிக்குழு (BIRAC) மற்றும் தேசிய புத்தாக்க குழுமம் (NInC), அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின் தொழில்நுட்பத் துறை | 29.14 |
| பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் சிறப்பு உதவித் திட்டம் மற்றும் 12வது திட்ட மானியம், அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப துறை வளர்ச்சி மற்றும் PURSE திட்டங்களின் கீழ் பெறப்பட்ட மானியம். | 54.12 |

- மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின் மூலமாக, அண்ணா பல்கலைக்கழகத்தின் **16563** மாணவ / மாணவியர்களும், **1295** ஆசிரியர் / அலுவலக பணியாளர்களும் மற்றும் அவர் தம் குடும்பத்தினர்களும் பயனடைந்துள்ளனர்.

- UGC – INFLIBNET மூலம் இ–இதழ் பயன்படுத்துவதில் அண்ணா பல்கலைக்கழகம் தமிழ்நாட்டிலேயே முதல் இடத்திலும், தேசிய அளவில் ஏழாவது இடத்திலும் உள்ளது. மேலும் மின் இதழ்களை அதிக அளவில் பயன்படுத்தியதில், IEEE, ASME, ASCE மற்றும் SPRINGER போன்ற நிறுவனங்களின் பாராட்டுகளையும், விருதுகளையும் பெற்றுள்ளது.

- தேசிய அறிவு வலையதளத்தின் கீழ், பல்கலைக்கழகம் தலா 1 Gbps கொண்ட இணைய பட்டையகலத்தை முதன்மை வளாகத்திற்கும் மற்றும் எம்ஐடி வளாகத்திற்கும் வழங்கியுள்ளது.

- அண்ணா பல்கலைக்கழக துறைகளிலிருந்து 8523 மாணவ / மாணவியரும் இணைவு பெற்ற கல்லூரிகளின் மூலம் **5015** மாணவ / மாணவியரும் வேலை வாய்ப்பை பெற்றுள்ளனர்.

- மாணவர் பரிமாற்றத் திட்டத்தின் மூலமாக சர்வதேச பல்கலைக்கழகங்களிலிருந்து **58** மாணவ / மாணவிகள் அண்ணா பல்கலைக்கழகத்திலும், அண்ணா பல்கலைக்கழகத்திலிருந்து **183** மாணவ / மாணவிகள் அயல்நாட்டு பல்கலைக்கழகங்களிலும் கல்வி பயின்றுள்ளனர்.

- பல்கலைக்கழகத்தில், நீர் இறைக்க (4 கிலோ வாட்) மற்றும் மின் உற்பத்திக்காக (10 கிலோ வாட்) சூரிய மின் ஆற்றல் அமைப்புகள் வெற்றிகரமாக நிறுவப் பட்டுள்ளது.

- அண்ணா பல்கலைக்கழகத்தின் எம்.ஐ.டி வளாகத்தில் நிர்வாக கட்டடம் மற்றும் இளநிலை பட்டப்படிப்பு பயிலும் மாணவியருக்கான தங்கும் விடுதி மற்றும் பல்கலைக்கழக முதன்மை வளாகத்தில் மாணவ, மாணவியருக்கான தங்கும் விடுதிகள், ரூ.**38** கோடி மதிப்பீட்டில் சிறப்புற கட்டி முடிக்கப்பட்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டன. மேலும், அண்ணா பல்கலைகழகத்தின் முதன்மை வளாகம் மற்றும் அதன் உறுப்பு பொறியியல் கல்லூரிகளுக்கான வகுப்பறை கட்டடங்கள் கட்டுவதற்கும், பராமரிப்பு பணிகளுக்கும் அண்ணா பல்கலைக்கழகம் ரூ.**210** கோடி செலவு செய்துள்ளது.

- அண்ணா பல்கலைக்கழக ஆசிரியர் மேம்பாட்டு மையம், கணிதம், இயற்பியல் மற்றும் ஆங்கிலம் பாடப்பிரிவுகளில் பயிற்சியினை (Bridge course) மேற்கொள்வதற்கு ஆசிரியர்களுக்கு 10 நாட்கள் பயிற்சி வழங்கியுள்ளது. அதில் தமிழ்நாட்டிலுள்ள 341 பொறியியல் கல்லூரிகளிருந்து சுமார் 1200 ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

- பல்கலைக்கழக மானியக்குழுவின் சீர்மிகு பல்கலைக்கழகம் என்ற சிறப்புமிகு அங்கீகாரத்தை அண்ணா பல்கலைக்கழகம் பெற்றுள்ளது.

- NHHID ஆல் உருவாக்கப்பட்ட Mass screening gadget for ophthalmic lesions தொழில்நுட்பம் மற்றும் லெப்டோபைரோஸிஸ் கிட் தொழில்நுட்பங்கள் முறையே பெங்களூருவில் உள்ள TMI Systems மற்றும் M/s.Genomix Molecular Diagnostics Pvt Ltd. நிறுவனங்களுக்கு மாற்றப்பட்டுள்ளது. இதனால் அண்ணா பல்கலைக்கழகத்திற்கு வருவாய் கிட்டும்.

- மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சட்டமன்ற பேரவை விதி 110—ன் கீழ் ஆளிலில்லா ஆகாய விமானத்தைச் சிறந்த முறையில் வடிவமைத்து உருவாக்கி அதனை, இயற்கை பேரிடர், பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் மற்றும் ஆபத்து காலங்களில் பயன்படுத்துவதற்காக, ரூ.20 கோடி ஒதுக்கீடு

செய்யப்படும் என அறிவித்ததற்கிணங்க, **2015–16** ஆம் நிதியாண்டில், முதல் தவணையாக, ரூ.**9.72** கோடி அண்ணா பல்கலைக்கழகத்திற்கு அரசு வழங்கியுள்ளது.

- அண்ணா பல்கலைக்கழகத்தால் உருவாக்கப்பட்ட ஆளில்லா ஆகாய விமானமானது, சென்னையில் **2015**ஆம் ஆண்டு, வெள்ளம் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சென்னை காவல் துறையினருடன் இணைந்து மீட்புப் பணிகளில் முக்கிய பங்காற்றியது.
- **2015–16** ஆம் ஆண்டு நடைபெற்ற அகில இந்திய பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான விளையாட்டு போட்டிகளில் அண்ணா பல்கலைக்கழகம் **24** பதக்கங்களை வென்றுள்ளது.

# பல்கலைக்கழகங்கள்

## 2015–16ஆம் ஆண்டில் பல்கலைக்கழக வளாகத்தில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை

| வ. எண் | பல்கலைக்கழகத்தின் பெயர் | மாணவர்களின் எண்ணிக்கை | |
|---|---|---|---|
| | | ஆண் | பெண் |
| 1 | சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை | 664 | 834 |
| 2 | மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை. | 513 | 504 |
| 3 | பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் | 522 | 943 |
| 4 | பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி | 36,245 | 39,400 |
| 5 | அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், கொடைக்கானல் | – | 1,371 |
| 6 | அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி | 1,039 | 2,386 |
| 7 | மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி | 343 | 676 |
| 8 | பெரியார் பல்கலைக்கழகம், சேலம். | 523 | 921 |
| 9 | திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர். | 152 | 200 |
| 10 | தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், சென்னை. | – | – |
| 11 | தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம், சென்னை. | 18 | 9 |
| 12 | அண்ணாமலை பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர். | 15,453 | 10,964 |
| 13 | அண்ணா பல்கலைக்கழகம், சென்னை. | 8,768 | 6,727 |
| | மொத்தம் | 64,240 | 64,935 |
| | பெரு மொத்தம் | 1,29,175 | |

# பல்கலைக்கழகங்கள்

## 2015–16ஆம் ஆண்டில் தொலைதூரக் கல்வி வாயிலாக பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை

| வ. எண் | பல்கலைக்கழகத்தின் பெயர் | மாணவர்களின் எண்ணிக்கை | |
|---|---|---|---|
| | | ஆண் | பெண் |
| 1 | சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை | 14,677 | 19,391 |
| 2 | மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை. | 15,498 | 13,654 |
| 3 | பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் | 14,861 | 16,411 |
| 4 | பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி | 11,330 | 17,909 |
| 5 | அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், கொடைக்கானல் | – | 1,203 |
| 6 | அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி | 41,552 | 46,954 |
| 7 | மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி | 8,993 | 13,124 |
| 8 | பெரியார் பல்கலைக்கழகம், சேலம். | 13,832 | 11,448 |
| 9 | திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர். | 187 | 460 |
| 10 | தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், சென்னை. | 5,213 | 6,425 |
| 11 | தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம், சென்னை. | – | – |
| 12 | அண்ணாமலை பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர். | 1,02,677 | 1,36,640 |
| 13 | அண்ணா பல்கலைக்கழகம், சென்னை. | 1,982 | 1,761 |
| மொத்தம் | | 2,30,802 | 2,85,380 |
| பெரு மொத்தம் | | 5,16,182 | |

## 5. தமிழ்நாடு ஆவணக்காப்பகம்

**5.1** சென்னை மாநகரில் மையப் பகுதியான எழும்பூரில் அமைந்துள்ள தமிழ்நாடு ஆவணக் காப்பகம் அரசின் மூல ஆவணங்களை தன்னிடத்தே கொண்டு அரசின் அன்றாட நிர்வாகத்தில் இன்றியமையாத பங்கினை ஆற்றி வருகிறது. இக்காப்பகம், **1909** ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டு, நூறு ஆண்டுகளுக்கு மேலாக சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

**5.2** தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் தலைமைச் செயலக பல்வேறு துறைகளின் ஆவணங்கள், முந்தைய வருவாய் வாரிய ஆவணங்கள், சில துறைத் தலைமையிட ஆவணங்கள், கிபி **1857–**க்கு முந்தைய மாவட்ட ஆட்சியர் அலுவலக ஆவணங்கள், மாவட்ட நீதிமன்ற ஆவணங்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. மேலும், இக்காப்பகத்தில் டச்சு, டேனிஷ் மற்றும் பாரசீக மொழிகளில் உள்ள ஆவணங்களும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

**5.3** இந்தியா மற்றும் உலகெங்கிலும் உள்ள பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளிலிருந்து பல்வேறு எழுத்தாளர்கள், வரலாற்று அறிஞர்கள், ஆராய்ச்சியாளர்கள் இக்காப்பகத்திற்கு ஆய்வுப் பணிகளுக்காக வருகை புரிகின்றனர். தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம் பல அரிய நூல்களை தன்னகத்தே கொண்டுள்ளதுடன் ஆராய்ச்சியாளர்களுக்கு இந்நூலகம் உயர்ந்த அறிவுக் களஞ்சியமாக விளங்குகிறது. தமிழ்நாடு ஆவணக்

காப்பகத்தின் விவரச்சுவடி பிரிவின் மூலம் பல்வேறு மாவட்டங்களுக்கான மாவட்ட விவரச்சுவடிகள் தொகுக்கப்பட்டு வெளியிடப்படுகின்றன.

**5.4** தமிழ்நாடு புதுமை முயற்சிகளின் நிதி ஒதுக்கீட்டின் கீழ், தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் எண்ணியலாக்கப்பட்ட பதிவுருக்களை இணைய தளத்தின் மூலம் அணுகுவதை மேம்படுத்துதல் என்ற திட்டத்திற்கான நிதி அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் **2015–16** மற்றும் **2016–17** ஆகிய இரண்டு ஆண்டுகளில் நிறைவு செய்யப்படும். இத்திட்டத்திற்கென ரூ.**30** இலட்சம், **2015–16–**ம் நிதியாண்டிற்கு அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. **2016–17–**ம் ஆண்டில் இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு ரூ.**37** இலட்சம் ஆகும்.

## 6. தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம்

**6.1** மாநில அளவிலான உயர்கல்வி திட்டங்களின் மேம்பாட்டிற்கும், பல்கலைக்கழக மானியக் குழுவின் திட்டங்களுடன் ஒருங்கிணைக்க உதவும் வகையிலும் தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம் 1992–ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பெற்றது.

### 6.2 சாதனைகள்

- 'அயல்நாட்டில் கல்வி கற்கும் திட்டம்' அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டது. கடந்த 3 ஆண்டுகளில் 74 மாணாக்கர்கள் மற்றும் 15 ஆசிரியர்கள் பயனடைந்துள்ளனர்.
- 6 பல்கலைக்கழகங்களில் 'பல்கலைக்கழக தொழில் கூட்டிணைவு மையம்' ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- கல்லூரியிலிருந்து இடைநிற்றலை தவிர்க்க மெதுவாக கற்கும் மாணவர்களுக்கு சிறப்பு கவனத்திட்டம் 24 கல்லூரிகளில் செயல்படுத்தப்பட்டுள்ளது.
- 30 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 'மென்திறன் மையம்' உருவாக்கப்பட்டுள்ளது.
- உலகளாவிய நிறுவனங்களுடன் மாநிலப் பல்கலைக்கழகங்களை இணைக்கும் பொருட்டு 'பன்னாட்டு தொடர்பு மையம்' உருவாக்கப்பட்டுள்ளது.

- ‘எண்ணியல் நூலக அமைப்பு’ இணைக்கப்பட்டுள்ளது.
- இணையவழியாக ‘சான்றிதழ்களை அங்கீகரித்தல்’ செயல்படுத்தப்பட்டுள்ளது.
- மூன்று ‘மேன்மையுறு மையங்கள்’ நிறுவப்பட்டுள்ளன.
- ‘தேசிய உயர் கல்வி திட்டத்திற்கான’ (RUSA) மாநில உயர்கல்வி திட்டத்தினை உருவாக்குதல்.
- ‘மாநில ஒருங்கிணைந்த பாட திட்டக்குழு’ வினை நிர்மானித்தல்.
- ஆசிரியர்களுக்கான ‘சிறு ஆராய்ச்சித்திட்டம்’ மற்றும் ‘மாணவர்களுக்கான குறு ஆராய்ச்சித் திட்டம்’ ஆகியன அறிமுகப்படுத்தப்பட்டன.
- இம்மன்றம் 2 ஆராய்ச்சி இதழ்களை ஆண்டு தோறும் இருமுறை வெளியிடுகிறது.
- ‘முதுநிலை நிர்வாக அலுவலர்களுக்கான பயிற்சி’யை ஒருங்கிணைத்தல்.
- பல்வேறு கல்வி உறுப்புகளுக்கிடையேயான கூட்டங்களை ஒருங்கிணைத்தல்.
- பயிலரங்குகள் / கருத்தரங்குகள் / மாநாடுகள் நடத்த பகுதி நிதியுதவியினை வழங்குதல்.

## 6.3 2015–16 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் / நடவடிக்கைகள்.

- ‘அயல்நாட்டில் கல்வி கற்கும் திட்டத்தின்’ கீழ் 24 மாணவ–மாணவியர்கள் மற்றும் 5 ஆசிரியர்கள் இங்கிலாந்திற்கு அனுப்பப் பட்டனர்.
- மென்திறன் மையங்கள் மூலம் 30 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிற்சி நடத்தப்பட்டு 16,394 மாணவ – மாணவியர்கள் பயனடைந்துள்ளனர்.
- கற்றலில் இடைநிற்றலை தவிர்க்கும் பொருட்டு 6 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் 18 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளில் ‘மெதுவாக கற்பவர்களுக்கான சிறப்பு கவனத் திட்டம்’ செயல்படுத்தப் பட்டுள்ளது.
- பல்கலைக்கழக – தொழில் கூட்டிணைவு மையங்கள் ஆறு பல்கலைக்கழகங்களில் நிறுவப்பட்டுள்ளன.
- நவீன அறிவியல் & மானுடவியல் மற்றும் சமூக அறிவியல் ஆகியவற்றில் ஆண்டிற்கு இருமுறை ஆராய்ச்சி இதழ்கள் தமிழ்நாடு உயர் கல்வி மன்றத்தால் வெளியிடப்படுகிறது.
- கருத்தரங்குகள்/பயிற்சிப் பட்டறைகள் நடத்துவதற்கு பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளுக்கு நிதியுதவி அளிக்கும் திட்டத்தின் கீழ் இவ்வாண்டில் 15 நிறுவனங்கள் நிதியுதவி பெற்றுள்ளன.

- மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறையின் நிதியுதவியுடன் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பயிலும் மாணவ–மாணவியர்கள் பயன்பெறும் வகையில் **52** முதுகலை மற்றும் **3** இளங்கலை பாடப் புத்தகங்களை தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம் தமிழில் வெளியிட்டுள்ளது.
- பல்வேறு தூதரங்களை தொடர்பு கொண்டு கருத்துருக்களை பெற்று மாநில பல்கலைக் கழகங்களுடன் ஒருங்கிணைக்கும் பணியை, தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள பன்னாட்டு தொடர்பு மையம், செய்துவருகிறது.
- 'இணைக்கப் பெற்ற எண்ணியல் நூலக அமைப்பு' திட்டம் தமிழக அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான இயல் உள்கட்டமைப்பு வசதிகள் அண்ணா பல்கலைக்கழகத்திலும் தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்திலும் அமைக்கப்படும். இம்முயற்சி இலவச கணினி வழங்கப்பட்ட மாணவர்களுக்கு அதனை பெருமளவு உபயோகப்படுத்த உகந்ததாக அமையும்.
- மாநில பல்கலைக்கழகங்களில் திறன் வாய்ந்த மேன்மையுறு மையங்களை அடையாளம் காணும் பொறுப்பு தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. நானோ தொழில்நுட்பம், அடிப்படை அறிவியல் மற்றும் கட்டுமான

மேலாண்மை ஆகியவற்றில் மேன்மையுறு மையங்களை நிறுவியமைக்காக முறையே மதுரை காமராசர் பல்கலைக் கழகம், சென்னை பல்கலைக் கழகம் மற்றும் அண்ணா பல்கலைக் கழகம் ஆகியன இனங்காணப்பட்டுள்ளன.

## 7. தேசிய உயர்கல்வித் திட்டத்திற்கான மாநில இயக்குநரகம் (        )

7.1 மைய அரசின் நிதியுதவியுடன், திட்டக்குழுவால் பன்னிரண்டாம் ஐந்தாண்டு திட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள முக்கியமான திட்டம், "தேசிய உயர்கல்வித் திட்டம்" (RASHTRIYA UCHCHATAR SHIKSHA ABHIYAN (RUSA) ஆகும்.

**7.2** இத்திட்டத்தின் கீழ் மாநில அரசால் பெறப்பட்ட ரூ.**5** கோடியானது, மாநில திட்டத்தை உருவாக்கவும், திட்ட இயக்ககம் மற்றும் தொழில் நுட்ப உதவிக்குழு ஆகியவற்றை நிறுவுவதற்கும் திறம்பட பயன்படுத்தப்பட்டது. இத்திட்ட வரைவு வழிகாட்டுதலின்படி, பல்வேறு கூறுகளின் கீழ், மாநில திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

**7.3** மாநில திட்ட இயக்குநர், தேசிய உயர்கல்வி திட்ட வாரியத்தின் திட்ட அனுமதி வாரியத்தில் கலந்து கொண்டு சமர்ப்பித்த திட்டத்தின் மூலம் தேசிய தரமதிப்பீட்டுக்கு குழுவின் அங்கீகாரம் பெற்ற **10** மாநில பல்கலைக் கழகங்களுக்கு ரூ.**200** கோடியும், கூறு **5**–இன்கீழ் ஏற்கெனவே உள்ள இரு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை மாதிரிக் கல்லூரிகளாக மேம்படுத்தும் பொருட்டு ரூ.**8** கோடியும் பெறப்பட்டுள்ளது. இதனைத் தவிர **44** அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கும், **21** பல்கலைக்கழக மாதிரி உறுப்புக்

கல்லூரிகளுக்கும் தலா ரூ.2.00 கோடி வீதம் மொத்தம் ரூ.130 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

7.4 பல்வேறு சமூக குழுக்களுக்கிடையே உயர்கல்வியை பெறுவதிலுள்ள சமச்சீரற்ற நிலையினை நீக்குவதற்கும், திறன் மேம்பட்ட பட்டதாரிகளை உருவாக்கவும், ஆராய்ச்சி மற்றும் துறை மேம்பாட்டு நடவடிக்கைகளை மேம்படுத்தவும், முக்கியமாக, அறிவின் எல்லையை விரிவாக்கம் செய்யவும், கல்வி நிறுவனங்களுக்கு புத்துயிர் ஊட்டவும் நிதி பயன்படுத்தப்படுகிறது. கல்வி நிறுவனங்களின் உள்கட்டமைப்பினை வலுப்படுத்துதல், அரசு கல்வி நிறுவனங்களில் கூடுதல் மாணவியர் விடுதிகள் ஏற்படுத்துதல், தற்போதுள்ள கட்டிடங்களை மாற்றுத் திறனாளிகளுக்கு ஏற்றவகையில் மாற்றியமைத்தல் மற்றும் மாதிரிக் கல்லூரிகள், தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மேம்படுத்தி உன்னத நிலையை அடையச் செய்வதன் மூலம் தமிழ்நாடு உயர்கல்வியின் மையமாக உருவாக்கப்படும்.

7.5 மேலும் நாமக்கல் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் 2 பொறியியல் கல்லூரிகளைத் தலா ரூ.26 கோடி செலவில் தொடங்க திட்ட அனுமதி வாரியம் ஒப்புதல் அளித்துள்ளது. இதற்கான நிலம் கண்டறியப்பட்டுள்ளது. நிதி விடுவிக்கப்பட்டபின் கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட உள்ளன. மேலும் தொழிற்கல்விக்காக ரூ.13.3 கோடியும், ஆராய்ச்சி மற்றும்

புதுமைக்காக ரூ.15 கோடியும் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக மொத்தம் ரூ.423.3 கோடி ஒப்பளிக்கப்பட்டு, இத்திட்டத்தால் பயனைடந்த மாநிலங்களுள் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக விளங்குகிறது.

## 8. அறிவியல் நகரம்

**8.1** உயர் கல்வி துறையின் அறிவியல் நகரம் மக்கள் மத்தியில் அறிவியல் விழிப்புணர்வை உருவாக்கிடவும் அதனை பிரபலபடுத்தவும் நிறுவப்பட்டது. அறிவியல் நகரம் என்று அறிவிக்கப்பட்ட பகுதியில் அமைந்துள்ள 60–க்கும் மேற்பட்ட தலைசிறந்த கல்வி மற்றும் ஆராய்ச்சி கூடங்களில் உயர்ந்தரக அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியினை பயன்படுத்தி அறிவியல் நகரம் பல அறிய மற்றும் உன்னதமான நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது. நிகழ்ச்சிகள் பொது அடிப்படை அறிவியல் முதல் முன்னேறிய அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் அதாவது முன்னோடி தொழில்நுட்பம் வரைசாரும்.

**8.2** அறிவியல் நகரத்தினால் நடத்தப்படும் நிகழ்ச்சிகள் பிரபல விரிவுரைகள், கருத்தரங்குகள், பயிற்சிபட்டறைகள், தொழில்முனைவோருக்கான நிகழ்ச்சிகள், மாற்றுத் திறனாளிகளுக்கான அறிவியல் நிகழ்ச்சிகள், கோடைகால பயிற்சி முகாம்கள், அறிவியல் சார்ந்த நிகழ்ச்சிகள், தமிழ்நாடு இளம் பெண் விஞ்ஞானிவிருது, பெண்களுக்கான வாழ்நாள் சாதனையாளர் விருது மற்றும் பள்ளி மாணவர்களுக்கான விருது போன்றவை ஆகும். இவ்வாறு நடத்தப்படும் நிகழ்ச்சிகளினால் அறிவியல் நகரம் தேவையான அறிவியல் விழிப்புணர்வை கல்லூரி மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு இடையே ஏற்படுத்தியுள்ளது. தலைசிறந்த

விரிவுரையாளர்கள் நிகழ்ச்சிகளை நடத்துவதால் நல்ல மாணவர் பங்கேற்பினை உறுதி செய்கிறது.

## 8.3 சென்னை அறிவியல் விழா

அறிவியல் நகரம் கடந்த 9 ஆண்டுகளாக தொடர்ந்து சென்னை அறிவியல் விழாவினை வெற்றிகரமாக நடத்தி வருகிறது. அறிவியல் விழா பலவகையான அறிவியல் நிகழ்வினை உள்ளடக்கியதாகும். அவற்றில் பிரம்மாண்டமான அறிவியல் கண்காட்சி, பிரபல விரிவுரைகள், கூட்டு கலந்துரையாடல்கள், அறிவியல் சார்ந்த கருத்துக்களை பொம்மலாட்டம் மற்றும் தெருக்கூத்து போன்ற கலை நிகழ்ச்சிகள் வாயிலாக பொதுமக்களுக்காக விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் அறிவியல் சார்ந்த பல போட்டிகள் (பேச்சுப்போட்டி, கட்டுரைப் போட்டி, ஓவியப் போட்டி மற்றும் வினாடிவினா) பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்காக நடத்தப்பட்டு வருகிறது.

## 8.4 நுண் அறிவியல் மற்றும் நுண் தொழில்நுட்பம்

அறிவியல் நகரம் நுண் அறிவியல் மற்றும் நுண் தொழில்நுட்பம் பற்றிய பயிற்சி பட்டறை மற்றும் கருத்தரங்குகளை கடந்த 8 வருடங்களாக நடத்தி வருகிறது. இந்நிகழ்ச்சி கல்லூரிகளில் பயிலும் மாணவர்களின் நலன் கருதி நடத்தப்பட்டு வருகிறது. இந்த வரிசையில் நுண்அறிவியல் வெளிப்பாடு (Nano Revelation) என்ற நிகழ்ச்சி 11 தொடர் கருத்தரங்குகளாக

நடத்தப்பட்டது. இப்பயிற்சி பட்டறை / கருத்தரங்குகளில் உலக அரங்கில் நுண்அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் பற்றிய ஆராய்ச்சி எந்த அளவு முன்னேறியுள்ளது என்று எடுத்துரைக்கப்பட்டது. இந்த கருத்தரங்கு / பயிற்சிப்பட்டறையில் நுண் அறிவியல் பற்றிய அடிப்படை அறிவியலிலிருந்து முன்னேறிய நிலைவரை மாணவர்களுக்கு கருத்து பரிமாறப்பட்டது. தேசிய அளவிலான விஞ்ஞானிகள் மற்றும் கல்வியாளர்கள் விரிவுரைகளை வழங்கினர்.

## 8.5 பொது அறிவியலில் கோடைக்கால பயிற்சி முகாம்

அறிவியல் நகரம் பல வருடங்களாக தொடர்ந்து இயற்பியல், வேதியியல், உயிரியல் மற்றும் கணிதவியல் போன்ற பொது அறிவியல் துறைகளில் 21 நாள் கோடைக்கால பயிற்சி முகாமினை முதுகலைப் பட்டம் பயிலும் மாணவர்களுக்காக நடத்தி வருகிறது. இப்பயிற்சி முகாம்களில் 75% மாணவர்கள் கிராமப்புற பகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இம்முகாமில் அடிப்படை மற்றும் முன்னேறிய நிகழ்வுவரை மாணவர்களுக்கு பயிற்றுவிக்கப்படுகிறது. இப்பயிற்சி முகாமிற்கு தமிழகம் முழுவதும் இருந்து 30 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

## 8.6 அடிப்படை மற்றும் நுண்ணுயிரியல் மூலக்கூறு உத்திகள் குறித்து செய்முறை பயிற்சிபட்டறை

இந்த பட்டறை உயிரி தொழில்நுட்பம், நுண்ணுயிரியல், உயிர் வேதியியல், கல்வி பயிலும் மாணவர்களுக்காக நடத்தப்படுகிறது. இந்த பயிற்சி பட்டறை, மாணவர்களுக்கு ஆய்வக நுண்ணுயிரியலில் ஆழ்ந்த உள்நோக்கு பார்வை வழங்குவதாக அமைகிறது. மாணவர்களின் தேவையை அறிந்து அவர்களை உலகலாவிய அறிவியலாளர்களாக தயார் படுத்துவதற்காக அறிவியல் நகரம் இச்செய்முறை பயிற்சி பட்டறையை நடத்துகிறது. இந்த பயிற்சி பட்டறை 6 பாகங்களாக பிரித்து நடத்தப்பட்டது. இப்பட்டறையில் நுண்ணோக்கி மற்றும் நுண்ணுயிர் நிறமேற்றுதல் நடைமுறைகள், மீடியா தயாரிப்பு சுத்திகரிப்பு ( ) முறைகள், மருத்துவ நுண்ணுயிரியல், சீராலாஜிக்கல் நுட்பங்கள், மூலக்கூறு உத்திகள் மற்றும் உயிர் தகவலியல் ( ) போன்ற துறைகள் உள்ளடங்கும்.

## 8.7 சூரியஒளி மின்சார தகடு ( ) அமைப்பு

இன்றைய மின்சார சூழலை அறிந்து அறிவியல் நகரத்தின் மேற்கூரையில் 10kw grid வகை சூரியஒளி மின்சாரம் அமைப்பு நிறுவப்பட்டுள்ளது.

## 8.8 விருதுகள் தமிழ்நாடு வாழ்நாள் சாதனையாளர் விருது

அறிவியல் நகரமானது **60** வயதிற்கு மேற்பட்ட மகளிருக்கு அவர்கள் அறிவியலுக்கு ஆற்றிய சிறப்புப் பணியை கௌரவிக்கும் வகையில் தமிழ்நாடு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவித்து வருகிறது. இவ்விருது பெற்றவர்களுக்கு ரொக்கப் பரிசு மற்றும் வாழ்த்துப் பட்டயம் வழங்கப்படுகிறது. இவ்விருது தமிழ்நாடு வாழ் நாள் விருது என்று பெயர் மாற்றப்பட்டு ஆண் / பெண் இருபால் அறிவியலறிஞர்களும் விண்ணப்பிக்க வகை செய்யப்பட்டது.

## 8.9 விருதுகள் தமிழ்நாடு இளம் பெண் விஞ்ஞானி விருது

அறிவியல் நகரம் கடந்த **14** ஆண்டுகளாக **40** வயதிற்குட்பட்ட சிறந்த இளம் பெண் அறிவியல் ஆராய்ச்சியாளர்களை கண்டறிந்து அவர்களின் அறிவியல் சேவைக்காக தமிழ்நாடு இளம் பெண் விஞ்ஞானிகள் விருதினை வழங்கி கௌரவித்து வருகிறது. இவ்விருதிற்காக ஆராய்ச்சியாளர்கள் அறிவியல் சார்ந்த துறைகளிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

இவ்விருது பெற்றவர்களுக்கு ரொக்கப் பரிசு மற்றும் வாழ்த்துப் பட்டயம் வழங்கப்படுகிறது. இவ்விருது தமிழ்நாடு இளம் விஞ்ஞானி விருது என்று பெயர் மாற்றப்பட்டு ஆண் /

பெண் இருபால் அறிவியலறிஞர்களும் விண்ணப்பிக்க வகை செய்யப்பட்டது.

## 8.10 மாணவர் அறிவியல் விருது

பள்ளி மாணவர்களை அறிவியல் சார்ந்த பிரிவில் ஊக்குவிக்கும் வண்ணம் மற்றும் அவர்களின் ஆராய்ச்சி பணிகளை கௌரவிக்கும் வண்ணம் இளம் பள்ளி மாணவர்களுக்கு இளம் அறிவியலாளர் விருது வழங்கப்பட்டு வருகிறது. இவ்விருது அறிவியல் சார்ந்த புதுமையான எண்ணங்களை கொண்ட மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது. இவ்விருது பெற்றவர்களுக்கு ரொக்க பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கப்படுகிறது. இவ்விருது பெற்ற மாணவர்கள் அறிவியல் நகரத்திற்கு வரவழைக்கப்பட்டு, கோடை விடுமுறையில் அறிவியல் முகாமில் கலந்து கொள்ள வாய்ப்பளிக்கப்படுகிறது.

## 8.11 கிராமப்புற ஏழைமக்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக அறிவியல் சார்ந்த பயிற்சிப் பட்டறை

விவசாயிகளுக்கு ஆடு, செம்மறி ஆடு, கறவை மாடு, பன்றி, வாத்து, முயல் மற்றும் காடை கால்நடை வளர்ப்பு பற்றிய 3 நாள் பயிற்சி பட்டறை நடத்தப்படுகிறது. இவர்களுக்கு அறிவியல் சார்ந்த சில செயல்முறைகளை பயிற்றுவிப்பது இந்தப் பட்டறையின் நோக்கமாகும். விவசாயிகளை அறிவியல் சார்ந்து உற்பத்தி முதல்

வியாபாரம் வரை விழிப்புணர்வு கொள்ள செய்வது இப்பட்டறையின் நோக்கமாகும்.

## 8.12 மாற்றுத் திறனாளிகளுக்காக அறிவியல்

அறிவியல் நகரம் மாற்றுத் திறனாளிகளுக்காக (செவித்திறன், பேச்சுத்திறன், பார்வைத் திறன்) அறிவியல் சார்ந்த நிகழ்ச்சியை நடத்தி வருகிறது. பங்கேற்பாளர்களை பல்வேறு அடிப்படை அறிவியலுக்கு அறிமுகப்படுத்துவதுடன், அம்மாணவர்களுக்கு அறிவியல் மீது தாக்கத்தை ஏற்படுத்துவதற்காக நடத்தப்படுகிறது.

மேற்கூறிய நிகழ்ச்சிகள் மட்டுமல்லாமல் அறிவியல் நகரமானது, மாணவ சமுதாயத்தின் தேவைக்கேற்ப தகவல் தொழில்நுட்பம், தகவல் தொடர்பு தொழில்நுட்பம் மற்றும் உயிர் தொழில்நுட்ப பயிற்சிப் பட்டறைகள் / கருத்தரங்குகள் போன்ற நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது.

## 9. தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம்

**9.1** தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம், தமிழக அரசால் **1983–ல்** மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்களது தலைமையின் கீழ் இயங்கும் ஒரு தன்னாட்சி பெற்ற மையமாக நிறுவப்பட்டது. அறிவியல் தொழில்நுட்பக் கருத்துக்களை பொது மக்களிடையேயும் குறிப்பாக மாணவர்களிடையேயும் பரவலாக்குவது இம்மையத்தின் முக்கிய நோக்கமாகும். பொது மக்களின் அனைத்து வயதினருக்கும் அறிவியல் கற்றல் என்பதை மகிழ்வளிப்பதாகவும், உற்சாகமளிக்கும் அனுபவமாகவும் இருக்கும்படி தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம் செய்து வருகிறது என்பதில் இம்மையம் பெருமை கொள்கிறது. சென்னை பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்திலுள்ள காட்சிக் கூடங்களான பெரியார் காட்சிக்கூடம், போக்குவரத்து, தகவல் தொழில்நுட்பம், உயிர் அறிவியல், கடல்சார் காட்சிக் கூடம், மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பம், வேடிக்கைக் கண்ணாடிகள், ராமானுஜன் கணிதக்காட்சிக்கூடம், இந்திய விண்வெளி ஆய்வுக்காட்சிக்கூடம், டாக்டர் சாலமன் விக்டரின் - இதயங்களின் காட்சிக்கூடம், முப்பரிமாணத் திரையரங்கம், அறிவியல் பூங்காக்கள், பரிணாம வளர்ச்சிப்பூங்கா, மாநில அளவிலான மரபுசாரா ஆற்றல் பூங்கா மற்றும் கோளரங்கம் ஆகியன வானவியல், அறிவியல் தொழில்நுட்பம், கணிதம் ஆகிய துறைகளில் பல்வேறு செய்திகளை விளக்கும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளன.

**9.2** தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையமானது திருச்சியில் அண்ணா அறிவியல் மையம் மற்றும் கோளரங்கத்தையும், வேலூரில் மாவட்ட அறிவியல் மையத்தையும், கோயம்புத்தூரில் மண்டல அறிவியல் மையத்தையும் நிறுவியுள்ளது.

**9.3** தமிழகப் பள்ளி மாணவர்களிடையே அறிவியல்பால் ஈர்ப்பு ஏற்படும் விதமாக, **புத்தாக்க அறிவியல் ஆய்வு விருதுகள்** வழங்கப்பட்டு மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் ஆறு முதல் பத்தாம் வகுப்புவரை பயிலும் மாணவர்கள் பங்குபெற்று பயனடைந்து வருகின்றனர். இதுவரை 71,320 மாணவர்களுக்கு தலா ரூ.5000/–மும், விருதுகளும் வழங்கப்பட்டுள்ளன.

**9.4** நடமாடும் அறிவியல் கண்காட்சி, நடமாடும் கணிதக் கண்காட்சி ஆகியன தமிழகத்தின் அனைத்து உட்புறப் பகுதிகளுக்கும் சென்றடையும் வண்ணம் இயக்கப்படுகின்றன.

**9.5** தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம் மாணவர்களுக்கு பல்வேறுபட்ட வகைகளில் அறிவியல் மேம்பாட்டு நிகழ்ச்சிகளை நடத்தி முறையான அறிவியல் கல்வி கற்றல் செயல்பாடுகளை மேம்படுத்துகிறது. அறிவியல் திறன் போட்டிகள், பயிலரங்குகள், சொற்பொழிவுகள், மாநில அளவிலான திறனறி மற்றும் ஊக்கமளித்தல் போட்டிகள், அறிவியல் மையத்தில் ஒரு

நாள் நிகழ்ச்சிகள் மற்றும் மாணவர், ஆசிரியர் மற்றும் பொதுமக்களுக்கான பிற அறிவியல் நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து நடத்தி வருகிறது.

## 9.6 கடந்த ஐந்து ஆண்டுகளில் பொது மக்கள் மற்றும் மாணவர்கள் பயன்பெறும் வகையில் ஏற்படுத்தப்பட்டுள்ள வசதிகள்

- கோயம்புத்தூரில் ரூ.850 இலட்சம் மதிப்பில் மண்டல அறிவியல் மையம் அமைக்கப்பட்டுள்ளது.
- சென்னை-பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தில்
    - மாணவச் சமுதாயத்தினரிடையே கணிதத்தின் மீது உள்ள அச்சத்தினை நீக்கும்பொருட்டு, இராமாநுஜன் கணிதக் காட்சிக்கூடம் ரூ.40 இலட்சத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.
    - பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு, மரபுசாரா எரிசக்திப் பூங்கா ரூ.140 இலட்சத்தில் அமைக்கப்பட்டுள்ளது.
    - விண்வெளி அறிவியல் கூடம் ஒன்று ரூ.50 இலட்சம் மதிப்பில் நிறுவப்பட்டுள்ளது.
    - பரிணாம வளர்ச்சிப் பூங்கா ரூ.45 இலட்சம் மதிப்பில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- அறிவியல் கருத்துக்கள் ஆழ்ந்து உணரும் விதத்தில் விரித்துரைக்கப்படும்போது அடிப்படை அறிவியல் தத்துவங்களை மிக எளிதாகத் தெவிக்க இயலும். முப்பரிமாணப் படக் காட்சிகள் அறிவியல் கோட்பாட்டினை பிரமிக்கத்தக்க வகையில் விளக்க வல்லவை. மாணவர்கள் பயன்பெறும் பொருட்டு ரூ.23 இலட்சம் (ரூபாய் இருபத்தி மூன்று இலட்சம் மட்டும்) செலவில் ஒரு **முப்பரிமாண அரங்கு** வேலூர் மாவட்ட அறிவியல் மையத்தில் **மாண்புமிகு தமிழக முதலமைச்சர்** அவர்களால் **14.02.2016** அன்று திறந்து வைக்கப்பட்டது.

- கோளரங்க காட்சிகளை மக்கள் மகிழ்ச்சியுடன் கண்டு களிக்கும் விதத்திலும் வானவியல் கருத்துக்களை திறம்பட மக்களுக்கு தெரிவிக்கும் விதத்திலும் **நவீன தொழில்நுட்ப எண்ணிலக்க மின்னணு கோளரங்கக் கருவி** பி.எம் பிர்லா கோளரங்கத்தில் ரூ.10 கோடி (ரூபாய் பத்து கோடி மட்டும்) செலவில் அமைக்கப்பட்டு வருகிறது.

- இளம் மாணவச் செல்வங்களின் மனதில் எதிர்காலத்தில் பரிணாம வளர்ச்சியின் ஆர்வத்தினை தூண்டும் வகையில், **திருச்சிராப்பள்ளி அண்ணா அறிவியல் மையம் கோளரங்கத்தில்** ரூ.70 இலட்சம் (ரூபாய் எழுபது

இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் **பரிணாம வளர்ச்சி பூங்கா** அமைக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளது.

- அணு ஆற்றல் மீதான தவறான எண்ணங்கள் மற்றும் ஆதாரமற்ற அச்சத்தைப் போக்கும் பொருட்டு, அணு ஆற்றலை சமுதாயத்தின் ஆக்கபூர்வமான பயன்பாடுகளுக்கு உபயோகப்படுத்துவதற்கான வழிமுறைகள் அடங்கிய **அணு ஆற்றல் காட்சிக்கூடம்**, மத்திய அரசின் அணு ஆற்றல் கழகத்தின் நிதி உதவியுடன் ரூ.240 இலட்சம் (ரூபாய் இருநூற்று நாற்பது இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் சென்னையிலுள்ள பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தில் அமைக்கப்பட்டு வருகிறது.

- நாட்டின் பாதுகாப்பு படைகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆய்வுகள் குறித்து பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வகையில் ரூ.100 இலட்சம் மதிப்பீட்டில், பாதுகாப்பு ஆராய்ச்சி காட்சிக்கூடம் சென்னையிலுள்ள பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தில் நிறுவப்பட்டுள்ளது.

- அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியையும், அதிநவீனகருவியைப் பயன்படுத்தும் தொழில் நுட்பத்தையும் அறிந்து கொள்வதற்கான வாய்ப்புகளை மாணவர்களுக்கு வழங்குவதற்காக

புதுமைகாண் மையம், சென்னையில் ரூ.100 இலட்சம் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- தமிழ்நாட்டில் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள மாணவர்கள் மற்றும் பொது மக்கள் பயன் அடையும் வகையில் ரூ.40 இலட்சம் (ரூபாய் நாற்பது இலட்சம் மட்டும்) செலவில் நான்கு **நடமாடும் குறுங்கோளரங்கங்கள்** அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

- அறிவியல் விளையாட்டு சார்ந்த செயல்பாடுகள் மூலம் அறிவியல் அறிவை வளர்க்கும் விதத்தில் **தருமபுரி, கன்னியாகுமரி** மற்றும் **தூத்துக்குடியில் அறிவியல் மையங்கள்** நிறுவப்பட உள்ளன.

## 10. தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம்

**10.1** தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம் **1984** ஆம் ஆண்டு தமிழக அரசால் ஒரு தன்னாட்சி நிறுவனமாக அமைக்கப்பட்டது. நமது மாநிலத்தின் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியை ஊக்குவிக்க பல அறிவியல் தொழில்நுட்ப திட்டங்களை இம்மன்றம் நிறைவேற்றி வருகிறது. இம்மன்றம் பல்வேறு அறிவியல் துறைகளின் ஆராய்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கான தலைமை நிறுவனமாகும்.

**10.2** கடந்த **5** ஆண்டுகளில் ரூ **1009** இலட்சங்கள் நிதி ஒதுக்கப்பட்டு, **16** வகையான அறிவியல் தொழில்நுட்ப திட்டங்களின் கீழ், **2181** அறிவியல் தொழில்நுட்ப செயல்பாடுகள் செவ்வனே நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது.

### 10.3 மாணவர் ஆராய்ச்சித் திட்டம்

இத்திட்டத்தின் நோக்கம் நம் மாநில மாணவர்களின் ஆய்வு திறமைகளை அறிவியல் தொழில்நுட்ப மேம்பாட்டிற்கு பயன்படுத்துவது ஆகும். இத்திட்டத்தின் கீழ், இளநிலை மற்றும் முதுநிலை பொறியியல், முதுநிலை அறிவியல், மருத்துவயியல், வேளாண்மையியல் மற்றும் கால்நடை மருத்துவயியல், போன்ற துறைகளில் இறுதியாண்டில் பயின்றுவரும் மாணவர்களுக்கு சமூக பயன்பாடுள்ள ஆராய்ச்சித் திட்டங்களைச் செய்வதற்கு அதிகபட்சமாக **ரூ.10,000/–** வரை நிதி உதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்

மூலம் கடந்த 5 ஆண்டுகளில் ரூ.90.92 இலட்சங்கள் செலவில் 1124 மாணவர் ஆய்வுத் திட்டங்களை செயல்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டது.

## 10.4 அறிவியல் தொழில்நுட்ப ஆய்வுத் திட்டங்கள்

வேளாண்மை, உயிரியல், சுற்றுப்புறச் சூழல், மருத்துவவியல், சமூகவியல், பொறியியல் மற்றும் தொழில்நுட்பம், உடற்கூறு அறிவியல் மற்றும் கால்நடை மருத்துவவியல் போன்ற பிரிவுகளில் மாநிலத்திற்கு உபயோகமுள்ள, சமூக பயன்பாடுள்ள திட்டங்களில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளும் அறிவியலறிஞர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கு ஆய்வு நிதியுதவி அளித்து ஊக்குவிக்கப்படுகிறது. இதன் கீழ் கடந்த 5 ஆண்டுகளில் ரூ 158.15 இலட்சங்கள் செலவில் 66 ஆய்வுத் திட்டங்களை செயல்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டது.

## 10.5 இளம் மாணவ அறிவியலறிஞர்கள் செயல் திட்டம்

இளம் மாணவர்கள் பள்ளி பருவத்தின் போதே அறிவியல் மற்றும் ஆய்வுகளின் பால் ஆர்வம் கொள்வதற்காக அவர்களுக்கு அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சி பற்றி போதனை செய்து வருங்காலத்தில் அறிவியல் மற்றும் ஆய்வுத் துறையை தேர்ந்தெடுப்பதற்குரிய ஆர்வத்தை உருவாக்குவதே இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும். இத்திட்டத்தின் மூலம் பல்வேறு மாவட்டங்களிலிருந்து

தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்பதாம் வகுப்பு மாணவர்களுக்கு அறிவியல் ஆய்வு வசதிகள் உள்ள கல்லூரி அல்லது பல்கலைக் கழகத்தில் திறமை வாய்ந்த பேராசிரியர்களால் மே திங்களில் 15 நாட்கள் சிறப்பு பயிற்சி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் சென்ற 5 ஆண்டுகளில் ரூ117.10 இலட்சங்கள் செலவில் 60 பயிற்சித் திட்டங்களை செயல்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டது.

## 10.6 இளம் அறிவியலறிஞர்களுக்கு ஆதரவு ஊதியம் அளித்தல்

இத்திட்டத்தின் வாயிலாக 40 வயதுக்குட்பட்ட இளம் அறிவியல் ஆராய்ச்சியாளர்கள், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி தொழில்நுட்பங்களின் நுணுக்கங்களை நன்கு கற்றுக் கொள்வதற்காக, அவர்களை இந்தியாவின் பிற மாநிலத்திலுள்ள, பல்கலைக்கழகங்கள் கல்வி மற்றும் ஆராய்ச்சி மையங்கள் ஏதாவது ஒன்றில் ஒரு முதுநிலை அறிவியலறிஞருடன் சேர்ந்து ஆராய்ச்சி செய்யவும், நுண் கருவிகளின் செயல்முறை தொழில்நுட்பத்தைக் கற்றுக் கொள்ளவும் ஊக்கப்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்படி அவர்களுக்கு தாங்கள் பணிபுரியும் தாயக நிறுவனங்களில் பெற்றுவரும் மாதச் சம்பளத்துடன் கூடுதலாக ஆதரவு ஊதியம் மாதந்தோறும் ரூ.10,000/– இரண்டு முதல் ஆறு மாதங்களுக்கு வழங்கப்படும். சென்ற 5 ஆண்டுகளில் ரூ13.45 இலட்சங்கள் செலவில்

90 இளம் அறிவியலாளர்கள் பயனடையும் வகையில் இத்திட்டத்தை செயல்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டது.

## 10.7 கருத்தரங்கு, சூழியம், பயிற்சிப் பட்டறை நடத்துவதற்கு பகுதி நிதியுதவி அளித்தல்

அறிவியலறிஞர்கள், ஆசிரியர்கள், தொழில் துறையினர் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் அறிவியல் ஆய்வு குறித்து பரிமாற்றங்கள் செய்யவும், கலந்துரையாடவும் கருத்தரங்குகள், சூழியங்கள், பயிற்சிப் பட்டறை நடத்த இத்திட்டம் வழிவகுக்கிறது. இம்மாநிலத்தில் உள்ள கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு கருத்தரங்கு, சூழியம் மற்றும் பயிற்சிப்பட்டறை நடத்துவதற்கு பகுதி நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் சென்ற 5 ஆண்டுகளில் ரூ43.39 இலட்சங்கள் செலவில் பகுதி நிதியுதவி அளித்து 161 அறிவியல் நிகழ்வுகள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது.

## 10.8 அறிவியல் தொழில்நுட்பத்தைப் பிரபலப்படுத்துதல்

விவசாயிகள், பொதுமக்கள் மற்றும் பள்ளிக் குழந்தைகள் போன்ற அனைத்து தரப்பினருக்கும் அறிவியல் தொழில்நுட்பத்தை அறிவியல் கண்காட்சிகள், பயிற்சி முகாம்கள், பொது விரிவுரைகள், போன்ற நிகழ்ச்சிகள் மூலம் பிரபலப்படுத்தும் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் மற்றும் தன்னார்வ நிறுவனங்களுக்கு நிதியுதவி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் சென்ற 5 ஆண்டுகளில் ரூ43.29 இலட்சங்கள் செலவில்

நிதியுதவி அளித்து 250 அறிவியல் நிகழ்வுகள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது.

## 10.9 இளம் அறிவியலறிஞர்களுக்கு பயண நிதி உதவி அளித்தல்

தமிழகத்திலுள்ள பல்கலைக்கழகங்கள்/ கல்லூரிகள்/ ஆராய்ச்சி மையங்களில் பணி புரிந்து வரும் 40 வயதுக்கு கீழ் உள்ள இளம் அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் பன்னாட்டு மாநாடுகளில் கலந்து கொண்டு தங்களுடைய ஆராய்ச்சிகளின் கண்டுபிடிப்புகளைச் சமர்ப்பிக்க செல்லுவதற்குத் தேவையான விமான பயணத்தொகையில் 50 விழுக்காடு வரை நிதி உதவியும் மற்றும் அத்தகைய உள்நாட்டு மாநாடுகளில் பங்கு கொள்வதற்கு 100 விழுக்காடு இரயில் பயணக்கட்டணமும் (முதல்வகுப்பு / இரண்டாம் வகுப்பு (குளிர்சாதனம்)) நிதி உதவியாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் சென்ற 5 ஆண்டுகளில் ரூ.13.53 இலட்சங்கள் செலவில் நிதியுதவி அளித்து 60 அறிவியல் ஆய்வாளர்கள் தங்கள் ஆய்வுக் கட்டுரைகளை சர்வதேச கருத்தரங்குகளில் பகிர்ந்துகொள்ள ஏற்பாடு செய்யப்பட்டது.

## 10.10 அறிவியல் தொழில்நுட்ப வெளியீடுகளுக்கு நிதியுதவி அளித்தல்

பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் பொது மக்கள் பயன்பெறும் வகையில் தமிழில் அறிவியல் வெளியீடுகளை

வெளிக்கொணரும் அறிவியலறிஞர்களுக்கு நிதியுதவி அளித்து ஊக்குவிப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். இதன் மூலம் அறிவியல் தொழில்நுட்ப பயன்கள் மக்களிடையே சென்றடையும். இத்திட்டத்தின் கீழ் சென்ற 5 ஆண்டுகளில் ரூ. 2.26 இலட்சங்கள் செலவில் நிதியுதவி அளித்து 12 அறிவியல் வெளியீடுகளை வெளிக்கொணர ஏற்பாடு செய்யப்பட்டது.

## 10.11 தமிழக அறிவியலறிஞர்கள் விருது

அறிவியல் தொழில்நுட்ப துறையில் குறிப்பிடத்தக்க அளவில் பணிகள் செய்த அறிவியலாளர்களை ஊக்குவிப்பது மற்றும் பெருமைப்படுத்துவது இத்திட்டத்தின் நோக்கம். இதன் மூலம் தமிழக அறிவியலறிஞர்கள் என்ற பெயரில் இத்திட்டத்தின்கீழ் 1) வேளாண்மை 2) உயிரியல் 3) வேதியியல் 4) பொறியியல் தொழில் நுட்பம் 5) சுற்றுப்புறச் சூழலியல் 6) மருத்துவம் 7) கணிதவியல் 8) உடற்கூறு அறிவியல் 9) சமூகவியல் 10) கால்நடை மருத்துவயியல் போன்ற துறைகளில் விருதுகள் வழங்கப்படுகின்றன. இந்த விருதுக்கு பரிசீலிக்கப்படுபவர்கள் தங்களுடைய துறையில் அவர்களுடைய செயல்திறமை, மற்றும் ஆராய்ச்சியின் வாயிலாக தமிழகத்தின் அறிவியல் தொழில்நுட்ப அபிவிருத்திக்காக முக்கிய பங்கு வகித்திருக்க வேண்டும். இத்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு அறிவியல் அறிஞருக்கும் ரூ.50,000/- ரொக்கமும், சான்றிதழும் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் சென்ற 5 ஆண்டுகளில் ரூ 23.32 இலட்சங்கள் செலவில் 50 அறிவியல் ஆய்வாளர்களை கௌரவிக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

### 10.12 அறிவியல் விழிப்புணர்வை ஏற்படுத்துதல்

கிராமப்புற மாணவர்கள், விவசாயிகள் மற்றும் சுயஉதவி குழுக்களின் உறுப்பினர்களிடையே அறிவியல் விழிப்புணர்வை ஏற்படுத்தும் பல்வேறு நிறுவனங்களுக்கு நிதியுதவி அளித்து ஊக்குவிப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ் சென்ற 5 ஆண்டுகளில் ரூ.32.05 இலட்சங்கள் செலவில் 50 அறிவியல் நிகழ்வுகள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது.

### 10.13 கிராமப்புற பள்ளிகளில் அறிவியல் கல்வியின் தரத்தை உயர்த்துதல்

கிராமப்புற பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் அறிவியல் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இதற்காக பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்புவரை அறிவியல் பாடங்களை நடத்தும் ஆசிரியர்களுக்கு அவர்களின் கற்பிக்கும் திறனை மேம்படுத்த தரமான பரிசோதனைக் கூடங்கள் உள்ள கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 5 நாட்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் சென்ற 5 ஆண்டுகளில் ரூ.46.68 இலட்சங்கள் செலவில் 50 பயிற்சி முகாம்கள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது.

## 10.14 புதுமைத் தொழில்நுட்பமும் பரவலாக்கமும்

புதிய மற்றும் பயனுள்ள வேலைவாய்ப்புகளை மேம்படுத்தும் தொழில்நுட்பங்களை கல்வி மற்றும் அறிவியலாளர்கள் மூலம் உரிய பயனாளிகளுக்கு எடுத்துச் செல்ல தேவையான பயிற்சி மற்றும் பட்டறைகள் இத்திட்டத்தின் வாயிலாக ஏற்பாடு செய்யப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் சென்ற **5** ஆண்டுகளில் ரூ **42.05** இலட்சங்கள் செலவில் **80** அறிவியல் பயிற்சி பட்டறைகள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது.

## 10.15 கிராமப்புற மேம்பாட்டிற்கு அறிவியல் தொழில்நுட்பங்களின் பயன்பாடு

குறிப்பிட்ட தேர்வு செய்யப்பட்ட கிராமப்புற மக்களுக்கு அறிவியல் தொழில்நுட்பங்கள் மற்றும் கண்டுபிடிப்புகளின் பயன்களை கல்வி நிறுவனங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் மூலம் கொண்டு சேர்ப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் மூலம் சென்ற **5** ஆண்டுகளில் ரூ **56.10** இலட்சங்கள் செலவில் **50** பயிற்சி பட்டறைகள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது.

## 10.16 தொழில்துறைக்கான அறிவியல் மற்றும் தொழில்நுட்ப திறன் வளர்த்தல்

தொழில்துறைக்கேற்றவாறு பட்டதாரிகளின் திறமைகளை மேம்படுத்துவதற்கும், அவர்கள்

தாங்களாகவே சுயதொழில் தொடங்குவதற்கு ஊக்கப்படுத்தவும் பயிற்சி அளிப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். தொழில்துறை மற்றும் கல்லூரிகள் (தொழில்நுட்ப கல்லூரிகள் உட்பட) இணைந்து இப்பயிற்சியினை அளிக்கின்றது. இத்திட்டத்தின் மூலம் சென்ற 5 ஆண்டுகளில் ரூ.56.10 இலட்சங்கள் செலவில் 50 பயிற்சி வகுப்புகள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது.

## 10.17 கல்லூரிகளின் ஆய்வு மாணவர்களுக்கான அறிவியல் ஆய்வு நிதியுதவி பற்றாக் குறையை களையும் திட்டம்

கல்லூரிகளில் உள்ள ஆய்வு மாணவர்களின் பயனுள்ள ஆய்வு முயற்சிகள் இத்திட்டத்தின் வாயிலாக ஊக்குவிக்கப்படுகிறது. திறமையான கல்லூரி மாணவர்கள் தங்களது சிறந்த ஆய்வு முயற்சிகளை மேற்கொள்ள நிதிப்பற்றாக்குறை ஒரு தடையாக இருக்க கூடாது. எனவே, கல்லூரி ஆய்வு மாணவர்களின் ஆய்வுத் திட்ட வரைவுகளை நமது கல்லூரிகளிலிருந்து பெற்று அவற்றுள் சிறந்ததாக நிபுணர்களால் தேர்வு செய்யப்பட்ட 20 ஆய்வுத் திட்டங்களுக்கு கடந்த 4 ஆண்டுகளில் ரூ.60.00 இலட்சம் செலவில் நிதியுதவி அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

## 10.18 அரசு கல்லூரிகளின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆய்வு கட்டமைப்பை மேம்படுத்துதல்

நமது மாநிலத்தில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் தரத்தை உயர்த்துவது நமது அரசின் கொள்கை. அறிவியல் ஆய்வு கட்டமைப்புகளை மேம்படுத்துவதன் மூலம் உயர்கல்வி மாணவர்களின் ஆய்வுத்திறனை மேம்படுத்தி நல்ல வேலை வாய்ப்புகளை அவர்களுக்கு ஏற்படுத்தலாம். இதற்காக அரசு கல்லூரிகளில் அறிவியல் ஆய்வுக் கட்டமைப்புகளான ஆய்வுக் கூட வசதி மற்றும் ஆய்வு உபகரண வசதி ஆகியவை மேம்படுத்தப்பட நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது. எனவே கடந்த 3 ஆண்டுகளாக நமது மன்றத்தின் வாயிலாக 8 அரசு கல்லூரிகளைத் தேர்வு செய்து அங்கு ஆய்வுக் கட்டமைப்புகளை மேம்படுத்த ரூ.45.00 இலட்சங்கள் செலவில் இத்திட்டத்தை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## 11. தமிழ்நாடு மாநில தொழில்நுட்பக் கல்வி மன்றம்

**11.1 2010** ஆம் ஆண்டில் தமிழக சட்டமன்றப் பேரவையில் இயற்றப்பட்ட சட்டத்தின்படி தொழில்நுட்பக் கல்வியில் அறிவியல் ஆராய்ச்சி மற்றும் கல்லூரிகளின் தரத்தினை ஒருங்கிணைத்து நிர்ணயிக்கவும், தொழில்நுட்பக் கல்வியின் வளர்ச்சிக்குத் திட்டமிட்டு, தொழில்நுட்பப் பல்கலைக்கழகம், கல்லூரிகளின் தொழில்நுட்பக் கல்விமேம்பாடு திட்டங்களை பல்கலைக்கழகங்களின் மானியக் குழு மற்றும் அகில இந்திய தொழில்நுட்பக் கல்வி மன்றம் ஆகியவற்றுக்கு மேலனுப்பவும் தமிழ் நாடு மாநில தொழில்நுட்பக்கல்வி மன்றம் நிறுவப்பட்டது.

### 11.2. கடந்த ஐந்தாண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்:—

- வாஷிங்டன் ஒப்பந்தம் மற்றும் 'அபெட்' முடிவுகள் அடிப்படையில் தரச் சான்றிதழ் வழங்குவது தொடர்பான பன்னாட்டு மாநாடு சென்னை 'ப்ரீஸ்' ஹோட்டலில் **18.5.2011** மற்றும் **19.5.2011**இல் தேசிய தர அங்கீகார வாரியத்தின் ஒருங்கிணைப்புடன் நடத்தப்பட்டது.

- அண்ணா பல்கலைக்கழகத்தில் பொறியியல் புகுமுக மாணவர்களுக்கும், ஆங்கிலம் போதிக்கும் ஆசிரியர்களுக்கும் ஆங்கில திறத்தை மேம்படுத்தும் வகையில் சிறப்பு பயிற்சி திட்டம் பிரிட்டிஷ்

கவுன்சிலின் ஒத்துழைப்புடன் **26.7.2013**இல் ஒருங்கிணைத்து நடத்தப்பட்டது.

- அ) தொழில் நுட்ப ஆங்கிலம் ஆ) பொறியியல் பௌதிகம் இ) கணிதவியல் ஈ) திரிகோணவியல் குறித்த விரிவுரை உ) வரைகளும் தொடர்ச்சியும் ஊ) முழுமை கணிப்பு (Integral Calculus) போன்ற பாடங்களுக்கான கல்வி ஆதார பாட மூலஏடுகள் தமிழ் நாடு மாநில தொழில்நுட்பக் கல்வி மன்றத்தால் தயாரிக்கப்பட்டு பிரதிகள் எடுக்கப்பட்டு, **ரூ.1,00,050/–** செலவில் மன்ற வளர்ச்சி நிதியிலிருந்து செலவிடப்பட்டு **500** பொறியியல் கல்லூரிகளுக்கு ஜூலை **2013**இல் வழங்கப்பட்டது.

- ஆங்கிலத்தில் பிற மொழி கலவைச் சொற்களில் இன்றைய பயன்பாட்டு வளர்ச்சி குறித்த பன்னாட்டு மாநாடு கேம்ப்ரிட்ஜ் பல்கலைக்கழக பேராசிரியர்கள் துணை கொண்டும், அண்ணா பல்கலைக்கழகத்துடனும், தொழில்நுட்பக் கல்வித் துறையின் தொழில்நுட்பக் கல்வி தர மேம்பாட்டுத் திட்டம் நிலை–II அலுவலர்களுடன் இணைந்து நவம்பர் **2014**இல் இம்மன்றத்தால் **ரூ.1.10** இலட்சம் செலவில் நடத்தப்பட்டது.

- அரசின் ஒப்புதலுடன், ஒரு தொகுதிக்கு **60** ஆசிரியர்கள் வீதம் கொண்ட **3** தொகுதிகளுக்கு “**தேசிய மென்பொருள் மற்றும் பணிகள் குழும கூட்டு**

**மன்றத்தால்** (NASSCOM) உற்பத்தி வளர்ச்சியில் அடிப்படை திறன் எனும் பயிற்சியாளர்கட்கு பயிற்சி அளிக்கும் திட்டம் ஆசிரியர் மேம்பாட்டு மையம் மற்றும் அண்ணா பல்கலைக்கழகத்தின் தீவிர ஒருங்கிணைப்பில், சென்னை, திருநெல்வேலி மற்றும் நாகர்கோவில் ஆகிய இடங்களில் ரூ. **3,75,000/–** செலவில் இம்மன்ற வளர்ச்சி நிதிக் கணக்கிலிருந்து செலவழித்து நடத்தப்பட்டது.

## 12. தமிழ்நாடு மாநில உருது கழகம்

**12.1** தமிழ்நாடு மாநில உருது கழகம் **21.7.2000** அன்று தொடங்கப்பட்டது. மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் இக்கழகத்தின் தலைவர் ஆவார். தமிழ்நாட்டில் **20** கல்லூரிகளில் உருது மொழி பாடப்பிரிவும், **5** கல்லூரிகளில் அரபு மொழி பாடப்பிரிவும் நடத்தப்படுகிறது.

### 12.2 சாதனைகள்

தேசிய வணிகர் கூட்டமைப்புடன் இணைந்து அகில இந்திய அளவில் தமிழ்நாடு மாநில உருது கழகத்தால் கவியரங்கம் நடத்தப்படுகிறது. இக்கழகம் உருது மொழியில் சிறந்து விளங்கும் இலக்கியத்திற்காக ரூ.**25,000/–** பரிசுத் தொகையுடன் கூடிய 'டாக்டர் அப்துல் ஹக்' விருதினை ஆறு கவிஞர்களுக்கும், உருது மொழி தேர்வுகளில் மாநில அளவில் இடம் பிடித்த மாணவர்களுக்கு தகுதிப் பரிசு மற்றும் பணப் பரிசுகளும் வழங்கப்படுகிறது.

**கே.பி. அன்பழகன்**
உயர்கல்வித் துறை அமைச்சர்